உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# பட்டணத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

## பிரபந்ததிரட்டும்.

## ஷையார் புராணமும்.

:o:

ஸ்ரீமத்

ஞானராஜதானியான

பொம்மையபாளையம்

பெரியமடம் சிவகஞ்சி மயூரா

சலநிவாச எதிராஸ்வர

கர்த்தரான

**சிவஞானபாலையசுவாமிகள்**

கட்டளையின்படி.

---

இயற்றமிழாசிரியராகிய

**திரு-விசாகப்பெருமாளையரவர்கள்**

முன்னிலையில்

**வே - குமாரசாமிஐயரால்**

பரிசோதித்து

**வ - அண்ணாமலைபிள்ளையவர்களால்**

வர்த்தமானதரங்கிணி சாகை அச்சுக்கூடத்திற்

பதிப்பித்து

பட்டத்துடன்

வெளியிடப் பட்டன.

---

விபவ௵ சித்திரை௴.

சிவமயம்.

# பட்டணத்துப் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய பிரபந்தங்கள்.

——:o:——


க—கோயில்நான்மணிமாலை.

௨—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

௩—திருக்கழுமல மும்மணிக்கோவை.

௪—திருவொற்றியூர் திருக்குறுந்தொகை.

௫—திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

௬—திருப்பாடற்றிரட்டு.

௭—புலம்பல்.

ஆக - ௭.


## பிரசித்தபத்திரிகை.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் தங்கசாலைத் தெருவில் சுமைதாங்கிக்கடுத்த- க - வது கதவிலக்கமுள்ளவீட்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலக்கியவிலக்கண புத்தகசாலைத்தலைவர்களாகிய வே-குமாரசாமி ஐயரிடத்திலும், வ - அண்ணாமலைபிள்ளையவர்களிடத்திலும், வாங்கிக்கொள்ளலாம்.

பட்டணத்துப்பிள்ளையார் புராணம்.

உ

கணபதிதுணை.

# கையொப்பக்காரர்கள்பெயர்.

---

| | |
|---|---|
| ஸ்ரீகைலாசபரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் சின்னபண்டாரச் சந்நிதிகளாயெழுந்தருளியிருக்கின்ற புத்தகம் சுப்பிரமணியதேசிகசுவாமிகள் | கO |
| பா. வேலுமுதலியார் | உ |
| ம. செந்தில்வேலுமுதலியார் | க |
| சி. அழகப்பமுதலியார் | க |
| பூ. விசுவநாதமுதலியார் | க |
| ந. வீராசாமிமுதலியார் | க |
| ந. நீலகண்டமுதலியார் | க |
| ப. சண்முகமுதலியார் | க |
| ந. திருவேங்கடமுதலியார் | க |
| தி. இரத்தினமுதலியார் | க |
| ந. நமசிவாயமுதலியார் | க |
| சண்முகமுதலியார் | க |
| ச. சீனிவாசனுநாயகர் | உ |
| பு. சுந்தரராமானுஜநாயகர் | க |
| இ. பாலசுந்தரமுதலியார் | க |
| வ. குமாரசாமிமுதலியார் | க |
| சை. இரத்தினசெட்டியார் | க |
| தி. ஆ. நாகப்பமுதலியார் | க |
| ம. அரங்கசாமிமுதலியார் | க |
| தி. சோமசுந்தரசெட்டியார் | க |
| ம. தணிகாசலமுதலியார் | க |
| ம. கந்தசாமிசெட்டியார் | க |
| தி. ஆதிநாராயணப்பிள்ளை | க |
| முத்துச்சாமிமுதலியார் | ரு |
| இரத்தினமுதலியார் | க |
| பொ. முனிசாமிஉபாத்தியாயர் | க |
| வ. சுப்பிரமணியப்பிள்ளை | க |

பு. முனிசாமி ... ... ... ... ... ... ... க
கு. சருக்கனை ... ... ... ... ... ... ... ... க
அருணாசலப்பிள்ளை ... ... ... ... ... ...
சண்முகஉபாத்தியாயர் ... ... ... ... ... ... ௫
சிவகுருமுதலியார் ... ... ... ... ... ... ௫
அருணாசலமுதலியார் ... ... ... ... ... ... க
பு. வேலாயுதமுதலியார் ... ... ... ... ... ௫
கோ. வி. சாமிநாதப்பிள்ளை ... ... ... ... ... ... க
தி. சண்முகப்பிள்ளை ... ... ... ... ... ... ... க
சி. தருமலிங்கப்பிள்ளை ... ... ... ... ... ... ... க
வே. சஞ்சீவிராயச்செட்டியார் ... ... ... ... ... க
அ. இராஜரத்தினம் ... ... ... ... ... ... ... க
தி. முருகப்பிள்ளை ... ... ... ... ... ... ... க
தி. சேஷாசலப்பிள்ளை ... ... ... ... ... ... ... க
க. முனிசாமிசெட்டியார் ... ... ... ... ... ... க
வே. கங்காதரசெட்டியார் ... ... ... ... ... ... க
ம. வெங்கடாசலசெட்டியார் ... ... ... ... ... உ
பெ. கா. வரதராஜமுதலியார் ... ... ... ... ... ௫
பெ. தி. கிருஷ்ணசாமிமுதலியார் ... ... ... ... க
பெ. வே. சு. தாண்டவராயமுதலியார் ... ... ... ... க
தி. ஐ. ஏகாம்பரம்பிள்ளை ... ... ... ... ... ... க
பெ. தெய்வசிகாமணி ... ... ... ... ... ... ... க
க. ம. ஆறுமுகப்பிள்ளை ... ... ... ... ... ... க
சா. தில்லைகோவிந்தமுதலியார் ... ... ... ... ... க
தி. கோவிந்தராஜுமுதலியார் ... ... ... ... ... உ
பெ. தருமராயமுதலியார் ... ... ... ... ... ... ௫
சி. வேங்கடாசலமுதலியார் ... ... ... ... ... க
அ. சுப்பராயச்செட்டியார் ... ... ... ... ... ... க
ஆ. சோமசுந்தரமுதலியார் ... ... ... ... ... க
தி. சுப்பராயச்செட்டியார் ... ... ... ... ... ... க
உ. சிதம்பரம்பிள்ளை ... ... ... ... ... ... உ

தி. கோ. இராமகிருஷ்ணபிள்ளை ... ... ... ... ... கஉ
தி. ப. அண்ணுசாமிபிள்ளை ... ... ... ... ... கா
தி. ஆ. வையாபுரிபிள்ளை ... ... ... ... ... ... கா
இ. தே. இரத்தினவேலுமுதலியார் ... ... ... ... க
கு. சண்முகமுதலியார் ... ... ... ... ... ... உ
ம. கு. கிருஷ்ணசாமிப்பிள்ளை ... ... ... ... ... க
தி. வேங்கடாசலசெட்டியார் ...... ... ... ... ... க
பு. தாண்டவராய-அப்பாசாமி ........ ... ... ... க
ம. பெ. விநாயகம்பிள்ளை ... ... ... ... ... ... க
தி. க. ரா. சிவசிதம்பரமுதலியார் ... ... ... ... க
தி. உ. சுப்பிரமணியன் ... ... ... ... ... ... ... க
தி. பரமானந்தம்பிள்ளை ... ... ... ... ... ... க
தி. அப்பாசாமி ... ... ... ... ... ... ... ... க
தி. குலநம்பிகிருஷ்ணசாமிஐயன் ... ... ... ... க
தி. நாகப்பசெட்டி ... ... ... ... ... ... ... க
தி. இராமசாமிசெட்டி ... ... ... ... ... ... க
க. வா. இராசப்பமுதலியார்... ... ... ... ... ... க
[illegible]. லா. குப்புச்செட்டியார்... ... ... ... ... ... க
[illegible]யித்தியலிங்கம்பிள்ளை ... ... ... ... ... ... க
[illegible]ரு. இரங்கசாமிப்பிள்ளை ... ... ... ... ... க
தி. குருமூர்த்திசெட்டி... ... ... ... ... ... ... க
தி. கிரா. மு. சீனிவாசப்பிள்ளை... ... ... ... ... உ
கி. வேலுபிள்ளை ... ... ... ... ... ... ... க
க. ஏகாம்பரமுதலியார் ... ... ... ... ... ... க
தி. நெ. சுந்தரமுதலியார் ... ... ... ... ... ... க
செ. வீராசாமிப்பிள்ளை ... ... ... ... ... ... க
நெ. குருநாதரெட்டியார் ... ... ... ... ... ... க
ஜ. இரத்தினசபாபதிசெட்டி ... ... ... ... ... க
பா. அருணகிரிமுதலியார் ... ... ... ... ... ... க
தி. பொன்னப்பப்பிள்ளை ... ... ... ... ... ... க
பெ. கொ. குழந்தைவேலுமுதலியார் ... ... ... ... க
பு. முருகேசப்பிள்ளை ... ... ... ... ... ... க

... ... ... ௧
பூ. நாராயணசாமிமுதலியார் ... ... ... ... ... ௧
கா. சீனிவாசஐயர் ... ... ... ... ... ... ... ௧
வே. இராமாநுஜஐயர் ... ... ... ... ... ... ௧
கி. குமாரசுவாமிஐயர் ... ... ... ... ... ௧
பு. குமாரவேலுமுதலியார் ... ... ... ... ... ... ௧
செ. அல்லமாப்பிரபுஐயர் ... ... ... ... ... ... ௧
ஆ. முத்துச்சாமிமுதலியார் ... ... ... ... ... ... ௧
தொ. சதாசிவஐயர் ... ... ... ... ... ... ... ௧
தி. சுப்பராயஐயர் ... ... ... ... ... ... ... ௧
பா. சம்பந்தமுதலியார் ... ... ... ... ... ... ௧
தொ. முத்துச்சாமிமுதலியார் ... ... ... ... ... ௧
செ. சந்தியப்பமுதலியார் ... ... ... ... ... ௧
சுப்புமுதலியார் ... ... ... ... ... ... ... ... ௧௦
ச. இராமசாமிமுதலியார் ... ... ... ... ... ... ௧
வே. தனக்கோடிப்பிள்ளை ... ... ... ... ... ... ௧
பு. கிருஷ்ணசாமி ... ... ... ... ... ... ... ௧
மு. வீ. ஜெயராமன்செட்டியார் ... ... ... ... ... ௧
கி. இராசாமிமுதலியார் ... ... ... ... ... ... ௧
அ. முத்துச்சாமிசெட்டியார் ... ... ... ... ... ... ௧
உ. வேதாசலமுதலியார் ... ... ... ... ... ... ௧
சி. பி. சாமிநாதம்பிள்ளை ... ... ... ... ... ... ... ௧௦
கி. கி. இராமலிங்கஉபாத்தியாயர் ... ... ... ... ௧௦
சா. அப்பாசாமிப்பிள்ளை ... ... ... ... ... ... ... ௨
வே. நாகப்பிள்ளை ... ... ... ... ... ... ... ... ௫
வே. காளத்திஉபாத்தியாயர் ... ... ... ... ... ... ௫
வ. நா. சுந்தரமுதலியார் ... ... ... ... ... ... ௫
ஆ. அரங்கசாமிமுதலியார் ... ... ... ... ... ... ... ௨
அரங்கசாமிஉபாத்தியாயர் ... ... ... ... ... ௧௦
ம. வி. அண்ணுசாமிகிராமணி ... ... ... ... ... ௧௦
ரா. த. சண்முகப்பிள்ளை ... ... ... ... ... ... ௫
வீரப்பசெட்டியார் ... ... ... ... ... ... ௫

| | |
|---|---|
| கோ. மாசிலாமணிமுதலியார் ... ... ... ... ... | க |
| ச. சிங்காரவேலுமுதலியார் ... ... ... ... ... | க |
| பு. உத்தண்டிமுதலியார் ... ... ... ... ... ... | க |
| பொ. சின்னதம்பிமுதலியார் ... ... ... ... ... | க |
| பொ. முனிசாமிமுதலியார் ... ... ... ... ... ... | க |
| ப. நாகப்பமுதலியார் ... ... ... ... ... ... | க |
| தே. முருகேசமுதலியார் ... ... ... ... ... ... | க |
| ம. ஏகாம்பரமுதலியார் ... ... ... ... ... ... | க |
| வே. வீரபத்திரஐயர் ... ... ... ... ... ... ... | க |
| அ. கோபாலமுதலியார் ... ... ... ... ... ... | க |
| மே. ஆதிபுரிமுதலியார்... ... ... ... ... ... ... | க |
| பு. இரத்தினவேலுமுதலியார் ... ... ... ... ... | க |
| பெ. குப்புசெட்டியார்... ... ... ... ... ... ... | க |
| செ. இராஜகோபாலுமுதலியார்... ... ... ... ... | க |
| கா. கண்ணுசாமிமுதலியார்... ... ... ... ... ... | க |
| வே. சிற்றம்பலமுதலியார்... ... ... ... ... ... | க |
| சே. பு. முத்துச்சாமிப்பிள்ளை ... ... ... ... ... ... | க |
| சே. செ. முனிசாமிமுதலியார் ... ... ... ... ... | உ |
| சே. வை. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை ... ... ... ... ... | க |
| சே. இ. சுப்பராயப்பிள்ளை... ... ... ... ... ... | க |
| வை. கோதண்டராமமுதலியார் ... ... ... ... ... | க |
| பெ. சுப்பிரமணியப்பிள்ளை ... ... ... ... ... ... | |
| தி. ஐயாசாமிமுதலியார் ... ... ... ... ... ... | க |
| தி. கிருஷ்ணசாமிமுதலியார் ... ... ... ... ... | |
| சா. சுப்பராயச்செட்டியார்... ... ... ... ... ... | க |
| நெ. வீராசாமிப்பிள்ளை ... ... ... ... ... ... | க |
| வ. தேவராஜபிள்ளை ... ... ... ... ... ... ... | க |
| பி. சிங்காரவேலுசெட்டியார் ... ... ... ... ... | க |

உ

சிவமயம்.

கணபதிதுணை.

# திருவெண்காடனென்னும்

# பட்டணத்துப்பிள்ளையார்

# புராணம்.

## பாயிரம்.

### வழிபடுகடவுள்வணக்கம்.

ஒளிமேவுந் தில்லைவனத் தோங்கியகற்ப கவனமொன்றுண்டு கண்டாற், றெளிமேவு மானந்த நிருத்தமிடு நினைந்தபடிச் செல்வஞ்சேர்க்குங், களிமேவுந் தும்பிமுகங் கனிகாட்டும் விண்ணுறை கற்பகமும்போலு, மளிமேவும் பட்டினத்துப் பிள்ளைபுராணம்பகர்தற்களிக்குமன்றே. (௧)

மருமகற்கு வழக்கிசைத்து வளையல்விற்று மாணிக்கவணிகராகிக், குருமணிசூழ் நான்மாடக் கூடல் வருமொருவர்மன்றுட் குனிக்குங்கூத்தர், பொருண்மகனும்வணிகவுருத் திரசன்மர்பிதா வருளும் பொருள்வளர்த்தா, ரிருபதமாம் பொருள்செறித்தெம் மகத்தினினி திருப்பரா மெந்தஞான்றும். (௨)

### சபாநாதர்துதி.

பரஞ்சோதி தருபான்மைப் பதிஞானப்பொதுவகற்றும்
வரஞ்சேருமமரர்குழாம் வளைந்துள பொன்னம்பலத்தும்
புரஞ்சேருஞ் செழுங்கடக புரியரசனம்பலத்து
முரஞ்சேரு நடமூன்று முடையபிரா னடிபணிவாம். (௧)

### சிவகாமசுந்தரியம்மைதுதி.

உலகமெலா மீன்றருளி யொருமலைக்குமகளாகி
யிலகுமயிலிளையோற்கு மிபமுகற்கும் பாலூட்டு
முலையினைய கன்னிகையாய் முகிழ்த்தபெருங்கருணையளாந்
தொலைவில் புகழ்ச்சிவகாம சுந்தரிசெந்தாள் பணிவாம். (௨)

### விநாயகர்துதி.

இருநான்கு மதம்பொழியு மிருள்வேழமிரிந்தோடத்
திருஞான மதமூன்றுஞ் சிவவேத மகிழ்களிறு

பெருநாத முடிநடிக்கும் பெரியோன்ற னுடனுடிக்
கருஞானமலைதொலைக்குங் கற்பகப்பொற்பதம்பணிவாம். (௩)

## சுப்பிரமணியசுவாமி துதி.

அருட்சிவனு ருண்மலைக்கும் பலமலைக்குமதிபதியாய்
மருட்படவாருயிருண்ணும்வரைவயிறுகிழித்தொழித்துத்
தெருட்புலவர் சிறைமீட்டச் சேவகனைஞ்சிறையாய
விருட்படலம்படச்சோதி யெறிக்குமவனடி பணிவாம். (௪)

## திருநந்திதேவர் துதி.

மருணூல் சொல்லொருகோடி மறுசமயக்கொடும்பேய்கள்
பொருணூல் சொல் பவர்போல்வார் பொய்யாக முடிவித்துத்
தெருணூல் சொல் பரம்பரையாஞ் சிவமுதலென் றன்றயாடி
யருணூல்சொல் லருணந்தி யருளாலிங் கருள் பெறுவாம். (௫)

## திருஞானசம்பந்தசுவாமிகள் துதி.

மணிவாயாற்றிருமிடற்றால் மலர்க்கரத்தாற்றமிழ்மூன்று
மணியாக்கிப்புனனூடு மருந்தமிழ்நாடெனத்தோன்றுந்
தணியாத திருஞானசம்பந்தர் பதம்பணியும்
பணிவார்தம்பதம்பணியும் பணியெமக்குப்பணியாமே. (௬)

## திருநாவுக்கரசுசுவாமிகள் துதி.

கல்லோடம் வெள்விடஞ்சூழ் காசினியினடக்குமலை
யெல்லாமிங்கிறும்பூதா வின்பமெனவிளையாடிச்
சொல்லாடிச் சிவகதியைத் துதித்துமதித்துக்கதித்தார்
பல்லாரும்புகழ்நாவுக் கரசர்பதமலர்பணிவாம். (௭)

## சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

முதல்வனார்பாவையிட முன்னுகர்வானளித்*தருளி
யிதமுதலாம்பரவையமுதினிமை தாத்தானுகர்வான்
றதிகுலாங்குபேரனையுந் தோழனெனவுடையாரை
மதனுருத்துதேவும்வன்றொண்டர்பதம்பணிவாம். (௮)

---

* இஃது செய்தெனெச்சமாயினும் செயவெனெச்சப்பொருள் தரல்காண்க.

## மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

நானூற்றுமணிக்கோவை நடம்பயிலெம்பெருமாற்குத்
தேனூற்றும்பொன்னிதழித் தெரியலுமேம்படச்சாத்தி
வானூற்றமுதவுதிரு வாசகம்பேசினர்பாத
மானூற்றுவிலையாக வணங்குதும்யாம் வணக்குதுமே. (௯)

## தில்லைவாழந்தணர் துதி.

சிரசபா நடம்பயிலுந் திருவாரூரொருநாத
னாருறையா னந்த நட நாதனைநேராதலினா
லாரணராந்தில்லைவாழந்தணரென்றெடுத்தோதும்
பேருடையவேதாந்தப் பெரியோர்தம்பதம்பணிவாம். (௰)

## சந்தானதேசிகர் துதி.

*கண்ணிய மாயாபோதக்கடங்கடத்திக்கணிவித்துத்
தண்ணளியாலிருளறுத்துத் தன்னையென்னைத்தந்தனனால்
வெண்ணெய்நல்லூர்மெய்கண்டான்மென்மலர்த்தாண்முடிசூட்டி
யண்ணலந் தேசிகர் மலர்த்தாளங்கங்கே பணிந்தெழுவாம்.(௰௧)

## காரைக்காலம்மை துதி.

வீயாதமாயவுடல் வெறுப்பினாலோவிமல
ரோயாது பேயுடனாட்டுவந்ததனாலோவிங்குச்
சேயாயவெள்ளிமலைச்சேர்வதற்கோதெரியாது
பேயானாள்காரைக்காற் பெண்ணணங்கன்னவட்பணிவாம். (௰௨)

## இயற்பகைநாயனார் துதி.

வினைமாளவரும் விமலர்வேதியராந் தூர்த்தற்கு
மனையாளைக்கொடுத்தவர்தாம் வருநெறியிற்றடைநோக்கி
முனைவாளாற்சுற்றமெலா முற்றுவித்தசேவகனா
ரனையானுஞ் செட்டிமையாரியற் பகையாம்பணியுறவே. (௰௩)

---

* கண்ணியனவாகிய வெனவிக்குறிப்புமுற்றுப்பெயரெச்சப்பொரு
ள் - தருகின்றது.

## மூர்த்திநாயனார்துதி.

அலையாழிவிடமருந்து மாலவாயமுதருக்கு
மலையாரங்கிடையாமன் மறுத்தனர்விற்றிடுவோருஞ்
சிலையாரக்கரந்தேய்த்துத்திருவருளாற் கரம்வளர்ந்து
தொலையாதசெல்வமுறுந் தொண்டரடிமுடிமுடிப்பாம். (௰௪)

## அமர்நீதிநாயனார்துதி.

மறைதருகோவணமொன்றுமனையாட்டி தனையர்செல்வ
முறைபொருடாமுடனேறி முக்கணனார்மிக்கருளால்
நிறைதருமக்கட்டளையே நீண்டவிமா னமதாக
விறைபுரத்துப்போந்திருந்தாரிணையடித்தாமரைபணிவாம். (௰௫)

## கலிக்கம்பநாயனார்துதி.

ஐம்மேவுமுடியார்முன்ன ரனடியராகிவர
மெய்ம்மேவுந்திருவடிகள் விளங்குவான்விளக்குதலு
மொய்ம்மேவும்புனல்வாராமொய்குழலார்கைதடிந்த
கைம்மேவுங்கலிக்கம்பர் கையிணைகையாற்றொழுவாம். (௰௬)

வேறு.

## பட்டணத்துப்பிள்ளையார்துதி.

அறிவரியதொருபொருணீ யொன்றினுந்தோன்றுயென்றுமட
ங்காயென்று, முறுதியுறச்செய்யுள் செய்தாராதலினாலாதியந்த
மொன்றிலானைச், சிறியபொதுவினில் மறுவொன்றின்றி விளங்கி
னையென்றுஞ் செப்பியிப்பால், முறையினிதுவதிசயமேவிளக்கும்
வினையாதுமெனமொழிந்தாரன்றே. (௰௭)

மொழிந்தபடிநாற்கோடியாறெண் ணுயிரமேலு முடிவின்மா
யை, பொழிந்தபலதத்துவங்களிருட்படலங் கெடப்படுமென்புத்
தியுள்ளே, தழைந்திடுநின்சடைமௌலிக்கங்கைகாங்கைகிலம்பலம்
புந்தடந்தாளோடும், நுழைந்தனையென் றதிசயித்தாரவரை யென்
சிந் தையிற்பாட்டி னுழைவித்தேனே. (௰௮)

## அவையடக்கம்.

ஆனந்தையெனுங்கணிகையணியவணிமணிக்கடகமளித்தநாதன், பூநந்துஞ் சடைக்கரந்தவணிக வுருவிலிங்கவுருப்பொருந்துமாயோ,லீனந்தமருதனுகாவெண்காடர்வணிகவுருவிலிங்கமானு,ரியானந்தப்பெரியோர்தம் புகழ்புகழவென்புன்சொலின்சொலாமே.

வாதனையோரிரண்டு மறமன்னுதவ முன்னிழைத்தார்மறங்கணீங்கிப், பேதமைதீர்பட்டினத்துப்பிள்ளையெனு மொருபெரியோர் பிறங்குஞானக், காதையினைப்பெரியோருஞ் சொலக்கேட்டிங் கிசைக்கின்றேன் கடன்ஞாலத்து, ளோதமிலான்றொழிலைந்து மாருயிர்கள் புரிவார்களென்றல்போலும். (உ௦)

வெங்கதிராயிரம்பரப்புமாதவனுமளக்கருஞ் சூழ்வியன்ஞாலத்துச், சங்கரன்றனடியாரைப் புகழ்ந்திடல் பூசனைபுரிதல்தருக்கவாற்றிற், பொங்குநலம்பெறுவரெனவாரணவாகமம்புகன்றபொற்பினாலும், பங்கமுறு வெண்காடர்சரிதமடியேனிசைந்து பகர்ந்தவாறே. (உக)

இன்னுமொருவகையுவகைவெண்காடர்குலவணிகரின்புகூற, மன்னியநல்லறிஞர் சிலர்பரந்தகதையிதைத் தொடுத்துவகுத்துக் காட்டு, மென்னவெழிற்புலியூரிலிருங்கலைஞரறியு நெறியிசைத்துளன்யான், பொன்னவையி னிருத்தமிடுமொருத்தனெடும்புகழாகப்புகலலாலே. (உஉ)

புலிமுனியும்பதஞ்சலியுமுதலானபெரியோர்தம்புகழ் புராணமிலகியவாமவர்க்குமுணங்கதியடைந்தோரளவிலவரியற் புராணம்பலபலவாமவைபோலவருவனவுமவ்வண்ணம்பகரலாகும், கலைவடநூல் சொல்லிலென் சொல்லாவிடிலென் கதிக்கதைகள் கழறலாமே. (உ௩)

மகவான்பட்டினம்படைத்தவண்மை திருவெண்காடர்வாழ்ந்தவாய்மை, யகலாமலிடைமருதனுங்கவர்பாற் சிறுவனெனவடைந்தநேயர், திகழ்ஞானவுபதேசம்வைத்தவழி திருவிசைப்பாச்செப்புஞ்செப்பம், புகழோங்கு மொற்றியூ ருற்றிலிங்க மானதுவும் புகலுற்றேன். (உ௪)

பாயிரமுற்றிற்று.

ஆக - திருவிருத்தம். உ௪.

## பூம்புகார்ச்சருக்கம்.

செங்கரங்கால்விழிவதனந் திருநாபியெண்கமலம் சேர்ந்தானேனு, மெங்கடிருமார்விதயகோகனகங் கோயில்கொண்டங்கிருக்கும்பொன்மான், பங்கயம்போனீங்காமலிருக்கின்றகாவிரிப்பூம்பட்டினத்துப் புங்கமொரு சற்றுரைக்கே னுருத்திதங்கொண் டருமொருமாப்புகன்றுளாரே. (௧)

பொன்னுலகம்புரந்திருக்கும் புரந்தரன்வாழ்பரிமேதம்புரிந்தகோமா, னன்னைபெரும் பூவுலகிலருஞ்சாயாவனஞ் சேருமமுதநாதன், றன்னையருச்சனைபுரியத்தினந்தொறும்போய் மீண்டுவருந்தன்மைதீர்ப்பா, னுன்னிநெடுஞ்செங்கோட்டு வெள்ளிமலைப்பிடரேறியுவந்தான்மன்னோ. (௨)

வந்துசிவக்குறிசெறியுமிட முதலாச் சேடமுடிமட்டுந்தொட்டா, னந்தமுடிமணிச்சாயை யெவ்வயினு மெறிப்பவெறிந்தஃதாற்றுமற், சந்ததமுந் தாழைமணங்கமழ்சோலை வளநாடுதழுவுங்கோயிற், றந்திடவுன்னினன் முன்போலாயிரந்தாமரைபுரையுந்தடங்கணனே. (௩)

அவ்வேலைமலைவிமலை புறத்தோடிக்கூகூவென்றமலைகாட்டச், செவ்வேளீன் றிடுமிலிங்க நாயகனன்னவனெடுத்தல் செய்யாவண்ண, மெய்வாழுங்கருணைசெய்ய முன்போலச் சினகரச்சீர்விளங்கச்செய்தா, னிவ்வேயினிளந்தோளி கூவென்றமென்மொழியாளெனும் பேருற்றாள். (௪)

வாசவன்சாயாவனத்துளிறை பூசைநிறைவேற மகிழ்ந்தெஞ்ஞான்று, நேசமுறவுலகிலுள்ளவணிகரெல்லாங்குடி தழைப்பநெடி தழைத்தான், காசினிசூழ்சோணாட்டிற்காவிரிப்பூம் பட்டினப்பேர்கண்டான்மண்டுந், தேசுதருநாற்பத்தெண்ணாயிரநற்குடி விரவச் செய்தானன்றே. (௫)

குடிவிரவச்செய்ததனுஞ் சாயாவனத்துக்கொழும்பவளக்குன்றுக்கென்றும், படிபுகழும்பெரும்பூசையோவாமனடாத்தி விடும்பண்புமன்றி. யடிகளுறைபல்லவனீச் சரமுதலாமாலயமுமவ்வாறுகி, நெடிது விளங்கிடும்பொருட்டாமென்பரின்பநூல் பலவுநிரப்பினரே. (௬)

விண்ணவர்கோமானமைப்பாற் குருவிலிங்கசங்கமங்கள் வி
ழைந்துநாளுந், தண்ணமரும்பெரும்பூசை யியற்றியிகபரமிரண்
டுந்தமக்கேயாக, மண்ணுலகிலிந்கர மிழைத்தவன்போன்மலிந்த
செல்வமலர்ந்துவாழ்ந்தா, ரெண்ணவரும்வசியதன்மந் தடுமாறுதி
னிதிருந்தங்கியன்றுளாரே. (எ)

வேறு.

எண்ணியசீரறம்பொருளோ டின்பமுறுவணிகர்குழாங்
கண்ணியவீட்டின்பமுமேற்காண்பாராயினிதமர
வண்ணியபேரறமுதலுன்கடைந்தவராம் வெண்காடர்
புண்ணியனூர்பிறந்தபதிபூம்புகார்ப்பட்டினமே. (அ)

கரிகாலன்பெருவளவன்மகள்கேள்வன்கடல்புக்கான்
றிருவேயேவெனவழைத்துத்திரைக்கரத்தாற்றரக்கொண்டாள்
வரைகேழ்வன்கலநோக்கிவருமளவுங்கல்லாநாள்
புரைதீரப்பிறந்தபதி பூம்புகார்ப்பட்டினமே. (கூ)

வன்னிமடப்பளியோடு சான்றாகவரவழைத்தாள்
பன்னியகாவிரிமணல்வாய் பாவையைநன்கேழ்வனெனுங்
கன்னியர்களொடும்போகா டிரைகரையாவகைகாத்தாள்
பொன்னனையார்பிறந்தபதி பூம்புகார்ப்பட்டினமே. (ய)

கூவலிற்போய்மாற்றாள் குழவிவிழத்தன்குழவி
யாவலின்வீழ்த்தேற்றெடுத்தாளயல் நோக்கம்வேறென்றால்
மேவினாள் குரக்குமுகம் வீடுடையோன்வரவிடுத்தான்
பூவின்மேற்பிறந்தபதி பூம்புகார்ப்பட்டினமே. (யக)

மூற்றாதமூலையிருவர்முத்துவண்டவாவிடுத்துப்
பெற்றாற்றமாண்பெண்பிறர்மணஞ்செய்யாவண்ணஞ்
சொற்றார்கள்பிறந்தபெண்ணாயகனைத்தலைசுமந்தாள்
பொற்றாமம்பிறந்தபதிபூம்புகார்ப்பட்டினமே. (யஉ)

கன்னிகர்தோட்காளையர்கைக் காசேனுங்கற்புடையே
னென்னுமொருமனைத்தொழும்பியேனையர்கற்பாருரைப்பார்
நன்னகரத்தியற்பாற்போமனதிதெனத்தெற்கேகும்
பொன்னியுடைப்படைத்தவள்வாழ்பூம்புகார்ப்பட்டினமே. (யங)

வேறு.

புயலோங்குஞ்சையகிரிப்புறத்தில்வெண்காவிரிப்பார்நகன்புற
த்திற்போந்து, வயலோங்குஞ் சோணாட்டுமண்ணாயிருண்டின்புற
வோமாலுக்கேறு, மியலோங்குமனையாக விருப்பதற்கோகடலாட
வெண்ணியோதன், னயலோங்கும் பூம்புகார்ச்சங்கமுகத்துறை
யாகி யமர்ந்ததன்றே. (௰௪)

இன்னபொன்னிமன்னுமலைக்காரகிலுமாரமும் போரியத்தின்
கோடு, மின்னுமணிகளும் பொன்னுஞ்செழுந்தேனுங்கொழுங்க
னியும்விரைமென்பூவும், பன்னரியபலவளனுங்காவிரிப்பூம் பட்டி
னத்துப்பரப்பவாங்கி, யந்நகரங்கடல்வளத்தால் யாவருக்குமள்ளி
யள்ளி யளிக்குமாலோ. (௰௫)

முடக்கியபாடகக்குளிப்பிற்பற்பலதீவினிற்பொருள்கண் முக
ந்தூர்ந்தி, யெடுக்குமணிநாவாய்கள் நாவாய்கள்புகலரிதா மெழி
ற்பட்டாடைத், துடக்கொடிகளசையவிசைக்காலே கவடாந்துள்ள
த்தள்ளாடாம, னடக்குமிடத்திருந்தேறிற் பொற்றேவரெழுந்தரு
ளுட்டலாமே. (௰௬)

போற்றுமளகாபுரியு முயருமமராபதியும் பூம்புகார்க்குந்,தோ
ற்றுமையுமாறுபெறுதேக் கறுமாற்பானதேசோதிநாத, ராற்றலிட
ங்கொண்டிருந்தார்சிவஞானவெண்காடரமர்ந்தாரன்றோர்க், கேற்
றதிறைகுபேரனையும்வச்சிரவாளனையுமிகரிசைக்கொணாதே. (௰௭)

செய்யதிறப்பவளவல்லி மவுலிமணிகண்டமெண்டோட்டிரு
ந்துமேவு, மையனுறைபல்லவனீச்சரமுமவிர்வரிபிரசுவமுநமாந்தி,
மையலிசைத்தேனளிக்குங்குளிர்சோலை நிலைமலிய வளமாடஞ்சூ
ழ்ந், துய்யநெறிதருஞ் சாயாவன முமவன் கோயில்களுமொளி
ருமாலோ. (௰௮)

வெள்ளிமலைபொன்மலைதூமணிமலைகள்வெண்காடர் வீட்டினிட்ட
மொள்ளியசோ தியரிவரை யாட்கொள்வாருளாகியுவந்துவந்தாற்
றெள்ளியராம்வாக்கிவர்களுளவேனுமிங்கிருக்கச்செய்தார்போலும்
புள்ளினொலிமலைசோலை வேதவெளிமலை சாலைப்பூம்புகாரே. (௰௯)

கொள்வார்தம்பேரோதை கொடுப்பார்தஞ் சீரோதைகுளிர் சங்கீன்ற, வெள்ளாரக்கருங் கடலினோதையினைவிழுங்கியிருவிசும் பினோங்கு, முள்ளாருஞ் சிறுவீதிபலசாதித்தொழிலோதை யொழிவிலாவாம், பொள்ளாதநாகமணி யங்கடொறும் விளக்கொளிரும்பூம்புகரே. (௨௰)

நாரதனுரிசைமடந்தை யிசையமுதஞ் செவிவார்ப்பநயந்து கேட்போன், வாரணங்குந்துணை முலையாழுருப்பசிவாராதிருக்கும் வண்ணங்கண்ணிச், சீருலகின்மானிடமாமகளாகப் பிறக்கவெனத்தேவர்கோமான், போரியைந்த சாபமிடமாதவியாயவள் பிறந்தபூம்புகாரே. (௨௧)

தெய்வமகள் மானிடமாமகளாக மானிடப்பெண்டெய்வமாகச், செய்தவன் வாசவனென்னக் கண்ணகியை விமானத்திற்சேர்த்தியன்றோட், டுய்யகணவனைச்சேரச்சேர்த்தினன் முன்னுள்ளமாதுறைந்தவாரும், பொய்யுரையாமாந்தர்களுநேமிறும்பூது நிறைந்தேறும் பூம்புகாரே. (௨௨)

வேறு.

நெடுங்கருங்கோட்டுப்புன்னைநிறைந்த பூங்கொத்திற்செந்தேன்
படுங்கருந் தும்பிமாந்திப்பாட்டிடும் பொன்னிநாட்டு
ளொடுங்கிடைமடந்தைமார்களுண்டு கொண்டாடுந்தண்டேன்
விடும்பரிசென்னக்கானம் விளைப்பராம்பூம்புகாரே. (௨௩)

தொக்ககார்மின்னித்துன்னுஞ் சோலைசூழிடங்கடோறும்
புக்குருநீயமாக்கள் புகும்புனற்பொன்னிநாட்டுத்
திக்கெலாம்புகழுநல்லோர் செல்குவார்மல்குவாராய்த்
தக்குளாரல்லார்பொல்லார்தாம் புகார்பூம்புகாரே. (௨௪)

கன்னெடுங்குன்றந்துன்றுங் கடிகமழ்குறிஞ்சிமான
நென்னெடுங்குன்றந்துன்று நெடுநிலப்பொன்னிநாட்டு
மின்னெடுங்குன்றந்துன்று மின்னிடைமார்பாற் கொங்கை
பொன்னெடுங்குன்றந்துன்றும் புண்ணியப்பூம்புகாரே. (௨௫)

வெளிதங்கும் வெண்ணெற்போர்கள் விண்ணளப்பனபோலன்று
மலிதங்கிமுராலுஞ்சோலை யாலயம்பொன்னிநாட்டு
மொளிதங்குசங்கினிரை மோங்குபூங்குவாலமெல்லாம்
புளினங்கள்போன்று தோன்றும் புண்ணியப்பூம்புகாரே. (உசு)

வேறு.

காரோடுங் களிற்றேறுங்கடற்றிரைவாம்பரியோடுந்
தேரோடுங்கலத்தோடுந் தேவர்கள் செல்வர்களோடும்
பாரோர்களையுறுவார்படைக்குழாமெனப்பகர்வா
ராரோவிந்நகர் புகழ்வாரளந்தறியா வளந்தருமே. (உஎ)

இந்நகர்போலெந்நகருமிவ்வுலகத்திடைக்காணோம்
பொன்னகரோவெனிலந்தப் பொன்னகர்வாழ்புரந்தரனே
மன்னியபூவினிற் போந்துவளம் பிறங்கவனைவித்தா
லெந்நகரும் பூம்புகார்க் கேற்றமிணையிலவாமே. (உஅ)

பூம்புகார்ச்சருக்க முற்றிற்று.

ஆக - திருவிருத்தம். ருஅ.

## ஆட்கொண்டசருக்கம்.

மடைமருதநறும் பழனங்கரும்புகளும் பெருஞ்சாலிவளங்க ளோங்கப், புடைமருதவனஞ்சூழ்த்தவமியற்று முனிவர்குழாம்பு கழ்ந்துபோற்ற, விடைமருதிலிருந்தபிரானிருங் கருணைத்திறம்பிற ந்தவியல்பினாலே, படைமருதந்தரவளவெண்காட்டரை யாட்கொ ண்டதொருபரிசுசொல்வாம். (க)

வேறு.

பொன்னிலங்கிய பூம்புகார்ப்பட்டினந்
தன்னின்மன்னுந் தலைவர்கலைகளாற்
பன்னரும்புகழ்ப் பட்டினத்துப்பிள்ளை
யென்னுமிக்குடிநாமமியன்றுளார். (உ)

கருணையாளர் வெண்காடரெனும்பெயர்
மருவினார்மணிவண்ணனின்வாழ்குவார்
பொருவிலாச்சிவபுண்ணியநண்ணினு
ரிருவிசும்பினமரருமெண்ணவே. (௩)

கலங்களெண்ணில் கடலிடையோடுவ
நிலங்கள்புக்கு நெடுந்துலை நீணிதிக்
குலங்கள் கொண்டு குலாக்கொடுமீள்குவ
வலங்களாயிரமாயிர மென்பவே. (௪)

காணுமின்னவைகற்புடைமாதரார்க்
காணியாங்கலமாயிரமென்பரால்
வாணிகேள்வன் வகுத்ததன்றிச்செல்வ
நீணிலாமுடி நித்தனளித்தவே. (௫)

கற்பகப் பெயர்க்காமருதாருவும்
பொற்புநீடிய பூமணிச்சங்கமும்
நிற்பகற்பக வெண்காடர் நின்றதா
மற்புதத் திருவெண்காட தாகுமே (௬)

அரசருமிவர்க்கஞ் சுவர்நெஞ்சுளே
பரசுபாணிப்படையுடைப்பண்ணவன்
விரதநிற்கும்விறலுடையோரெனு
முரசுமும்முரசும் முழங்கும்மரோ. (௭)

மூன்றிரேறு முழுமணிவாளொளி
குன்றவில்லியடியர்குழாங்களுந்
துன்றுமென்றுந் தொடுகடன்ஞாலத்து
ளொன்றுமீங்கிவர்க்கொப்பல வென்பரால். (௮)

கோடிசெங்கதிர்கூடியுதித்தென
நீடுசோதி நிமலரைப்பாடுதற்
காடுமன்புவந் தங்குரித்தங்குரித்
திடுகொண்டங் கிருக்குமியல்பினர். (௯)

கற்றகல் வியுங்கேள்வியுங்காண்குறிற்
குற்றமின்றிக்குணங் கெழுகொள்கையார்
முற்றுமீங்கிவர் நன்குமொழிகுவார்
செற்றமேவுஞ் சிவனடியார்களே. (௰)

சத்தியாங்குறு சம்புவின்றுண் மனங்
வைத்தசெல்வமுமண்ணினமக்குரு

துய்த்தசெல்வமு முள்ளுமுள்ளத்தராய்
வித்தகத்தர் விளங்குமந்நாளிலே. (௰௧)

வேறு.

மஞ்சு சூழ்தரத்தேன்றுளிப்பூந்துணர்வயங்கச்
சஞ்சரீகங்கள் சஞ்சரித்திசைத் தமிழ்தழைக்க
வஞ்சலித்தமர் முனிக்குழாமாரமுலோம்ப
வஞ்சமில்லரன்வாழ்வதுமருதமாவனமே. (௰௨)

அவ்வனத்திடைமருதிடத்தருளுருக்கொடுசேர்ச்
செவ்வியானந்தத்திருப்பொருளிருப்பது தெளிந்தே
யிவ்வுருக்கொடுதிருப்பொருளிருப்பதென்றுணராப்
பவ்வநான்மறையவைவலோரெங்ஙனம்பகர்வார். (௰௩)

அப்பொருட்குருவுருவுகொண்டாணிமுற்கதுவிச்
செப்பவவ்வுருமுனிவர் நால்வருமுளந்தெளிந்தா
ரிப்படிக்கலாற்றேவருள் யாவுமேயறியா
ரொப்பிலப்பொருளுருவு கொள்ளாதெனவுரைப்பார். (௰௪)

அந்தமாந்தருங் கண்டருங்கதிவிதியடையச்
சந்தமாவிலிங்கப்பெயர் தாங்குசெஞ் சடையோன்
சிந்தையன்பினாற்புடவியிற் செறிந்தமானவர்கள்
நந்துவானவர் போற்றவீற்றிருக்குமந்நாளில். (௰௫)

ஏகநாயகனாகிய தன்னிருத்திருத்தா
ளாகமூன்றுகாலங்களும் பூசைசெய்தருள்வோன்
மாகநாடரும்பணி சிவமறையவன் வறியோன்
போகமாகவும் பூங்கூடிருத்தவும் புகழ்வோன். (௰௬)

மனைவிபோயவன்றனிமையோன் மனங்கவன்றிருப்போ
னினியமாமனையாட்டியைப்பெறும்படி யெண்ணிப்
புனிதநாதனைப்பூசனை முடிவினிற்போற்றிக்
கனகமீந்தருடோகைபாகாவெனக்கழறும். (௰௭)

அன்பினிற்பிரியாதவள் பாகவென்றனன்றோ
னன்பினிற்பிரியாவகை யறுதினமிரப்ப

வன்பினிற்கன்பனுகியவமுதனுதலினு
லன்புருக்கொடு வருவதற் கிசைந்தன னருளால். (௰அ)

அன்னவேதியற்கருந்தனமளிப்பவுங்களிப்பா
லின்னறீர்ந்தவெண்காடர்க்குக்கதியளித்திடவு
மன்னுபூவுலகத்துளோர்கண்டு வாழ்வுறவு
மென்னையாளுடைப் பரம்பரனொருவடிவெடுத்தான். (௰௯)

மருதவாணனென்றொரு பெயருலகெலாம் வழுத்தப்
பருவமெண்ணிரண்டாண்டுடைப்பண்ணவனுகிக்
கருதினுங்கணிற்காண்பினுங் கேட்பினுங்கலந்தோ
ருருகுமன்பினன்றன்னைத்தானருச்சனையுவப்போன். (௨௰)

எழுதுமெண்கணக்கியாவையுமறிபவருன்னன்
மழுவிளங்கெழுத்தாணியாத்திரித்துவாண்மலர்க்கைப்
பழுதில்புத்தகத்தேடுநீடேடெனப்பரித்து
மழகுதுன்றிவன்யாவனென்றி யாவருமறிய. (௨௧)

பிட்டுவட்டவான்கடலிடைப்பிறந்தகாரால
மிட்டபிச்சை வேட்டுவன்றசை சேர்ந்தனுரீந்த
கட்டுமட்டவிழ்போலவெண்சோறுகைக்கொண்டு
முட்டநின்ற தாட்டாமரைப்பூ மகன்முடிப்ப. (௨௨)

வந்துநம்பிவாழிடவகையிடைப்புக்குமிக்க
கந்தமார்கடுக்கையுறுகண்ணியன்கனிவா
லிந்தவாரமுதுண்டிடச்சுவைக்கறியீக
வந்தணாளவென்றறைதலும் பூசுரனறைவான். (௨௩)

அறுசுவைக்கறியமுதுநின்வாக்கினுலறிந்தேம்
நறுமைமேவிய சிறுவகேளெனவிறைநவின்று
னிறைவணங்கையிலன்னமங்கோரிடத்திருத்தி
யுறையுமில்லற நங்கையெங் கேயெனவுரைத்தான். (௨௪)

பொன்னுலாவியசெஞ்சடைப்புராதனன்புகல
வன்னவேதிய னியம்புவா னமருமில்லறத்தாள்
மன்னுநாயக னுலகுளா ளென்றுரைவரைய
வின்னும்வேறொருகன்னியைமணஞ்செய்வீரென்றுன். (௨௫)

வேறுமிங்கொருகன்னியைவேட்பதற்கன்னோன்
பேறுகாண்கிலேன்வறுமையெம்பே றெனப்பெற்றே
னாறணிந்தவர்திருவுளமின்னதென்றறியேன்
றேறுமன்னவர் நினைப்பரேற்றிருவெலாஞ்சேரும். (௨௬)

என்றவாய்மொழிகேட்டலு மெழுந்திளங்காளை
நின்றதாய்தமரொன்றிலேனிகழுமெப்பொழுது
மொன்றுலோகத்திற்றொழிலெலாம் வல்லமையுடையே
னென்றனைக் கொடுவிற்றுநீர்வறுமைதீர்ந்திடுவீர். (௨௭)

சொற்றுளேனெனப்பூசுரனினவுளந்துளங்கிக்
கற்றகல்வியான் மேல்வருவனமனங்கருதி
யிற்றைநாளுனைவிற்பனேல் விளைவதிங்கென்னோ
பற்றிலேனின்னகாரியம் பழுதெனப்பகர்ந்தான். (௨௮)

பழுதடைந்திடிற் பரிகரித்திடலுமென்பார
முழுதும்வல்லவனெவ்விடத்தியாவையுமுடிப்பா
னெழுதுமாவணமீங்கிவர்க்குண்டெனவிசைத்தாற்
றொழுதுநீதியாய் முடிவுறுமிவ்வணந்துணிவே. (௨௯)

நீதியன்றிது சிறுவநீ நிரப்பியவார்த்தை
வேதியர்க்குழாமரசராளேவலோர்வினைவிற்
றீதுசெய்குவார்வைகுவார்சிறுநகை செறிப்பா
ராதலாலிவை தவிர்தலேயறனெனவறைந்தான். (௩௰)

அஞ்சலையநீர்விலைக்குறவிற்பதேயழகா
லெஞ்சலில்பொருட்டுருவதற்கிசைந்தியானிசைத்தேன்
வஞ்சமில்லதோர்புண்ணியமென்னுழிவருமாற்
செஞ்சொலாமெனப்புண்ணியன்றேற்றிடத்தெளிந்தான். (௩௧)

தெளிந்தபூசுரனாவணம்பழம்படித்திட்டி
விளங்கநல்கினோன்றனைக்கொடுகோயிலுண் மேவி
வளங்கொளூதனைவிடைகொண்டு பூம்புகார்மருவக்
களங்கமொன்றிலான்படர்ந்தனன் காவதமனேகம். (௩௨)

சுந்தரப்பெருமானையினார்க்கு முன்சுடர்ப்பொன்
றந்தவள்ளியோனவர்குலத்தலைவரா மொருவற்

குய்ந்திடப்படிக்கா சளித்தவனிவருடன்போய்
நந்தலில்லவாந்தமணியமீகுவானடந்தான். (௩௩)

சங்கவான்றமிழ்மதுரையிற்பாணனார்தமக்குத்
துங்கமாகியவாளனவிந்தனஞ்சுமந்தா
ரிங்குமாங்கதுபோன்றனராட்கொள்வானெண்ணி
யங்கவாருயிர்யாவையுமடிமையாவுடையார். (௩௪)

புக்குளாரிலர்புகாரெனும்பட்டினப்புடைபோய்
மிக்கநீதியால் வாழ்வணிகேசர்தம்வீதிப்
பக்கமேவிலைபகர்ந்தனர் பகரலும்பரிவாற்
செக்கரஞ்சடைமுடியவரடியவர் தெரிந்தார். (௩௫)

மறையவன்றனையிறையவன்றனைவரவழைத்துக்
குறையுறுதவெண்காடர்முற்காரணக் குறியா
லுறையுமீங்கிவணிடத்ததிசயமென்கொலுரையீர்
நறையுலாவியவிடைமருதுடையநாயகரே. (௩௬)

இயம்புமம்மொழிக்கெதிர்மொழி யிவர்சொலாமுன்னர்
நயம்புணர்ந்தவாளாயவனலங் கொளநவில்வான்
வயங்குநன்மணியாவையும்விலைநிலைமதிப்பே
னியங்குபற்பலதொழிற்குமீங்கெனக்கு நேரெவரே. (௩௭)

எனுமவன்றனைமகிழ்ச்சியானோக்கி யெம்மிடஞ்சேர்
வனமருமணி விலைமதிப்புறுதனுமதித்தா
லனையவன்சொன்னதொக்கு மென்றருமணியளித்தார்
புனிதவாண்மணிமதித்தனன்பின்னரும்புகல்வான். (௩௮)

நவமணிக்கணவிலக்கணமியாவையுநவில்வேன்
கவலுநெஞ்சிலாத்தலைவர்நீரன்னதுகாணத்
தவமியற்றினீர் முன்னரோதிருவெலாந் தழைப்பப்
பவமகற்றவும் பெற்றுளீரறிவெனப்பகர்வான். (௩௯)

வேறு.

பார்க்கவ முனிவன்சொன்னபடிவலாசுரன்றவங்கள்
சீர்க்கவேசெய்யச்செய்யச்சிவனவன்முன்னர்த்தோன்ற

வேர்க்கின்றதவங்கணன்று வேண்டியதென்னையென்னத்
தார்க்கொன்றை மௌலியானைவணங்குபு சாற்றுகின்றான். (௪௰)

என்னுடைவடிவமெல்லாமினமணிவடிவமாக
நின்னதுகருணையாலேயருள்கெனநிமலனீந்து
முன்னரோமறைந்தபின்னர் முனைவலாசுரனும்போந்து
பன்னருமகவான்யாகப்பசுவெனத்தயாவின்வந்தான். (௪௧)

வந்தவப்பசுவைப்பற்றிவச்சிராயுதத்தினாலே
யுய்ந்திடவுரிந்துகொண்டவுறுப்பினைவிண்ணோருண்ண
வெந்தவவ்வுறுப்புத்தப்பி வீழ்ந்தனவித்தாய்மண்மேற்
சிந்துவிற்பொருப்பிற்றீவிற்சிறந்தநாட்டினிற்பரந்தே. (௪௨)

விளைந்தனமணிகளாகவிண்ணவர்மண்ணோர்பூண்பார்
வளம்படு வெற்றிவீரவலாசுரனுடல மொன்பான்
களங்கமின்மணிகளாகிற்புனிதமேகாண்மினென்ன
விளங்குலகுபகாரத்தால் வீந்தனன்புநிதமாக. (௪௩)

மன்றுளேயாடு மெங்கண்மாணிக்கக்கூத்தனார்க்கு
நன்றிசெய்வார மேழுநவமணிவிழாவிற் பூண்பா
ரென்றிடிற்சங்கையிங்கேனிவைதரிப்பவர்க்கு வென்றி
யொன்றியவீரஞ் செல்வமோங்குமென்றுரைக்குநூலே. (௪௪)

மலரணிமாலைமேலாமணியணிவண்ணமாலை
விலைமணித்தாரைப்பற்றமாணிக்கமாலைமேலாம்
பலமெனவாகமத்தும் பகர்தருமாதலானு
மிலகியமணிகடேவர்யாவரும்பூணலாமே. (௪௫)

ஞாயிறுமாணிக்கங்கோமேதகந்திங்களாரம்
வாய்வயிடூரியஞ்செவ்வாய்வளப்பவளமாகு
மேயவன்புதனிற்பச்சை வியாழமாம்புட் பராகங்
காய்கதிர்வெள்ளிவச்சிரங் கடுஞ்சனிநீலங்காணே. (௪௬)

பசுவென்புவயிரம்பல்லு பனிமுத்தங்குருதியோதில்
வசையறுதிருமாணிக்க மயிர்வயிடூரியங்கண்
டசைபவளங்கணீலந்தரும்பிச்சுபச்சைமெச்சு
நிசகவம்புட்பராகநிணங்கோமேதகமென்றாமே. (௪௭)

வயிரமுத்தந்தனுளன் மாணிக்கம்பவளம்வேந்த
னயமலிபுட்பராக நல்லகோமேதநீதி
வயவையிடூரிய மூன்றும் வாழ்வுறுவணிகனுரு
மியலுடைநீலம்பச்சை யிரண்டுஞ்சூத்திரனுமன்றே. (௪௯)

படிகமஞ்சனக்கற்கூட்டிப்பதினொருமணியாச்சொல்ப
முடிவுறுமிம்மணிக்கு முக்குணப்பிரிவுஞ்சொல்வாம்
வடிவுறுபடிகமுத்துவைத்தசாத் துவிகமாமால்
விடுநுகிர்மாணிக்கங்கோமேதகமிராசதம்மே. (௫௰)

அஞ்சனக்கல்லு நீலமாலுந்தாமதமதாகு
மெஞ்சில்சாத்துவிகத்தோடு மிராசதங்கலத்தல்வச்சிர
மஞ்சுறு புட்ப ராக மணிவயி டூரியமாகுந்
தஞ்சராசதங்கலந்தசாத்விகம்பச்சையாமே. (௫௰)

நவமணியர்ச்சித்தற்கு நறுமலர்ப்புனைதல்சொல்வாந்
தவழின்மாணிக்கத்திற்குத்தாமரைப்பூத்தரிக்க
வுவகையாமுத்துக்கோதுமொண் சிறுசெண்பகப்பூ
கவைபடுபவளம்பார்க்கிற்கமழுஞ் செவ்வல்லிப்பூவே. (௫௧)

மரகதங்காந்தம்புட்பராகமல்லிகைப்பூவச்சிர
முரைதருநீரிற்பூத்தநூறிதழ்த்தாமரைப்பூ
கருநீலங் கருவிளங்கோமேதகங்கமழுங்காவி
திரைவயி டூரியப்பூத் தேம்படு வெண்மந்தாரம். (௫௨)

தூயநன்னிலத்திலொத்தசுத்தபீடத்தைவைத்து
மேயவப்பீடமீதுவெண்படாம்விரித்துவைத்துப்
பாயவப்படத்து நாப்பண்பதுமராகத்தைவைத்துச்
சேயவாதவனுதிக்குந்திசைமுதற்றிசைகடோறும். (௫௩)

கோமேதநத்துமுத்துக்குளிர்வயிடூரியஞ்செந்
துமேவுபவளம்பச்சை சுந்தரப்புட்பராகம்
யாமேவுவயிரநீல மெண்டிசைவலஞ்சூழ்வைத்துப்
பூமேவமுன்னஞ்சொன்னபூவினாற்பூசைசெய்வார். (௫௪)

தோன்றியவயிரமென்றசொல்லுக்குப்பொருளென்னென்னின்
மூன்றுலோகத்திலுள்ளமுறையுலோகங்களெல்லாங்

இன்றவைதுளைக்குந்தன்மைக்கிளைபடைதுளையாதென்று
மான்றவிச்செய்கையாலப்பெயர்பெற்றுமேலுமாமே. (௫௫)

ஒருவலாசுரன்றதீசியுடலென்புவீழ்ந்ததேச
மரதனநாடென்றுகுமத்தேசங்கௌசலாதி
வருமதிலுதித்தவச்சிரம்வாகைப்பூநிறத்தவாகும்
புரைகலிங்கத்துதித்தவயிரம்பொன்னிறத்தவாமே. (௫௬)

மாதங்கதேசவச்சிரமல்லிகைமலரின்மேனி
பீதஞ்சேரிமயவெற்பிற்பிறந்தன தவளமேனி
நீதங்கின்மாராட்டத்திற்செனித்தனசிவந்தமேனி
யோதுஞ்சவ்வீரதேசத்துதித்தனகரியமேனி. (௫௭)

பேசியபௌண்டரத்திற்பிறந்தனகுவளைமேனி
யோசையேமகதேசத்துதித்தபொன்னிறந்தவிப்பால்
பூசியவாகைவாழை மூங்கிலின்பூநிறத்த
மாசிலாவச்சிரங்கட்கச்சுதன்றெய்வமாமே. (௫௮)

ஓரமாறுய்வெளுத்தவயிரத்தேயும்பர்கோமான்
பாரியபசுவின்கொம்பிற் பலநிறவயிரங்கூற்றுங்
கூரமுள்ளிலவம்போது குலாவியபலாசம்பொற்பூச்
சேரியவயிரத்திற்குத்தெய்வமிவ்வாயுவாமே. (௫௯)

கோங்கலர்நிறஞ்சிறந்த குறையுறுவயிரத்திற்குந்
தேங்கியநாரஞ் சேருந் தெண்டிரைவருணனுரு
மோங்கு நீர்நிறவச்சிரத்திற்கொளிகொள்வெண்டிங்கட்டேவன்
பாங்குறுகோபமேனிவயிரத்தே பரிதித்தேவே. (௬௰)

தீநிறவயிரத்திற்குச்செய்யதீக்கடவுட்டெய்வ
மானவிவ்வயிரத்துள்ளு மமைந்தநாற்குல முமுண்டு
வானுறுபடிகம்பாயுமுயற்கண்வாழைக்குருத்து
நீணிறைகார்வானத்து நிறமணிமறையோராதி. (௬௧)

வயிரங்கணன்குமந்தவருணத்தோரடைவிற் பூண்பார்
செயிரொன்று முருவிவற்றுட் செங்கதிர்வயிரஞ்செப்பிற்
பயிலுறுவிலைமதிக்கப்படாததிற்பணிகள்பூணார்
தயிரியஞ்செல்வமாரோக்கியந்தருந்தரிக்கலாமே, (௬௨)

அரசர்தமௌலிமேலுமணியொளுவரசிமார்க்கு
மருவியதாலிப்பூணில்வயிரத்தாற்பண்ணவொண்ணு
பரவுமிவ்வொன்றுமன்றிப்பற்பலவயிரத்திற்கு
மிருமைசூழ்குணங்குற்றங்களின்னுமிங்கியம்பலுற்றேன், (௬௩)

நுவன்றிடுதாரைசுத்தி நோய்மையிந்திரசாபம்நே
ருவந்திடுபலகையாங்களோங்கிய வெண்கோணங்க
ளவர்தவிராறுகோணமைந்து கோணங்களாக
நிவந்துளகுணங்களேழா நிகழ்த்துபமணிநூல்வல்லோர். (௬௪)

குலவியதாரைகேடுகொடுந்தாரைமழுங்கல்கீற்று
மலமொடுகாகபாதம் வருதுளைபிளத்தல்விந்து
பலகொடிகெடுதல் கோடிமுரிதல்சப்படியிருத்து
விலகியகுற்றமீரா றென்றனர் வென்றிநூலோர். (௬௫)

அம்புவாளிம்பர்தையாவாட்படைஞாட்பில் வெல்வார்
செம்பொருட்சிறுதேசத்தார் செலுத்துவர்பஃறேயங்கள்
பம்புநல்குரவு பூதம்பசாசுபாம்பங்கி நீண்டா
நம்பமுன்சொன்னசூரியநல்வயிரங்கொள்வார்க்கே. (௬௬)

இனிமுத்தின்குணமுருட்சியியலும் வான்மீனின்றேசு
கனமறுவின்மைநோக்கிற்கவினுறல்படிகநன்று
வினவுமண்ணேறல்சென்னீர்சிவப்புமென் முகங்கறுத்த
லினமருளிவற்றினோடு கோணலென்றீரைங்குற்றம். (௬௭)

பணிமதிகதலி மேகம்பைந்தொடி கழுத்தாவின்பற்
றனியானையேனக்கொம்பு தடங்கராவுடும்பு கொக்கு
வினையராச்சலஞ்சலஞ்சங்கிப்பிமீன் மூங்கிற்பூக
நினைசெந்நெற்கரும்புகஞ்ச நிகழிருபது முத்தினும். (௬௮)

இருபதுமுத்தினுளுமிப்பியின் முத்தேநன்றால்
விரவுமைப்பசியிற்சோதி மின்னெறிசிறிதுநாளில்
வருமிப்பிவாயில்வீழ்ந்தமழைத்துளியொளி முத்தென்ப
தருமணிநெடுநாட்செல்லிற்றாய் வயிறுருகியொன்றும். (௬௯)

தடங்கடலிலங்கைமூதூர்ச்சமனொளிசூழ்ந்தபாங்கர்
மடங்கலிலலகையாறு மாவிலிகங்கைதங்கி

யிடங்கொள்கம்பலையினோடு கல்லினையெனு நான்காற்றிற்
றிடம்படவிளைமாணிக்கத்திறங்களுமறிந்துசொல்வாம். (எ௰)

குருவிந்தமொடுசாதாங்கங்கூறுகாவாங்கநன்மை
மருவுசௌகந்தி நான்கின்வடிவினிற்குணங்களீரா
றுருவினிற்குற்றமீரெட்டொளிக்குணமிருபத்தொன்பான்
பரவெளிக்குற்றந்தீரப்பன்னிப் பின்பகராநிற்கும். (எக)

செங்கையிலெடுக்கிற்றேய்க்கிற் றீயினிற்சேர்க்கிற்றூக்கிற்
பங்குறுதகட்டிற் குச்சி னிற்பகர் வெயிலினுள்ளின்
மங்குதலிலாவோரத்தின் மருத்திற்கைக்குறியினெய்த்தாந்
தங்குபார்வையினினேர்ந்து சிவந்துசார்குணமீராறே. (எஉ)

கருகுதல்போதில்செம்மண் கரும்புகையிறுகல்கோடங்
திருகுதல்முரண்டராசுமத்தகங்குழிதல்செப்பில்
விரவியபுடாயம்நெய்ப்பில் காற்றிலைச்சுமியேவெச்சு
மிருமைதீர்சந்தைகேடென்றிவைகுற்றம்பதினாறே. (எங)

சாதகப்புள்ளினோட்டந்தாமரைகாவிகோபங்
கோதின்மின்மினியாதித்தன் கொழுங்கனலெரிவிளக்கு
மாதுளங்கனிப்பூப்பத்துஞ் சாதாங்கமணிக்குணங்கா
ணோதியகுருவிந்தத்தினொளிக்குணமினிமேற்சொல்கேன். (எச)

செம்பஞ்சோடரத்தநல்ல திலகநீளிலோத்திரஞ்சீர்
நம்பியமுயலின்சோரிநக்க சிந்தூரங்குன்றி
வம்புறுமுருக்கம்போது வரு மெட்டாம சோகுசெம்பஞ்
சம்படுமலரி செம்போடிலவம்பூவருங் குயிற்கண். (எரு)

இவ்வாறுஞ் சௌகந்திக்காமெழிற் குணமினிக்காவாங்கின்
மெய்வாய்த்தகுணங்கார்ப்பூவெண் கோவைசெங்கமலமஞ்சள்
துவ்வாயகுங்குமம்போற் சொல்லொளியோரைந்தாகு
மவ்வாயமணிக்குணங்களாகவோரிருபத் தொன்பான். (எசு)

நிலத்தின்குணங் காயாம்பூ நெய்தற்பூக்குல்லையப்பூக்
கோலியகுழக்கன்றின்கட் குயிற்கழுத்தவிரிச்சாறு
வாலியமேகமெட்டாங்கிட்டமஞ்சணிதராசு
மேலுமன்பிணிகொள்வச்சிரசஞ் சர்ச்சரையெட்டிணம். (எஎ)

பவளகுணஞ்சிந்தூரம் பன்னுசெம்மணிச்சங்காய
அவமுசுமுசுக்கைவீரை ஆதுணம்பழம் போன்றுருங்
கவைமுடங்குளைகறுப்புத் திருகுதல்வெளிறல்கல்லென்
றிவைகளோராறுங்குற்றமென்பர் நன்புலமையோரே. (எஅ)

பச்சையின்குணங்களோதிற் பசுங்கிளிமயிற்கழுத்து
மெச்சிளம்பயிர்பொன்வண்டின் வயிறுமின்பொன்பசுத்தல்
நிச்சயப்பத்திபாய்தனெய்ப்பெழாவெளிறுகண்மண்
கச்சிடுந்தராசங்கற்றல் கருகுதல்பெறலேகுற்றம். (எகூ)

தழைவயிடூரியம் பொற்றகட்டினின்மூலப்பால்வார்ப்ப
வொழுகியவொளியாங் கோமேதகம்வயிடூரியத்திற்
றழுவுதன்மேனியாம்புட்பராகம் பொற்றகட்டிற்றேன்பாய்
முழுநிறமாமிவைக்கு மும்மணியென்றுநாமம். (அ0)

அத்தனுரீச்சுரத்தால்வருமணிப்பச்சைசெம்மை
யொத்தொருநிறமதாக்குமொள்ளெரி யொளிவெள்ளாரம்
வித்துருவங்களென்றும் விளைவின்றிவிளைவிப்பார்க
ளுய்த்தகண்மணி யானோக்கினொண்மணிபோலுமாலோ. (அக)

நல்லியற்கோரவல்லி நாட்டியகனககோர
வல்லிசொல்லியவாமற்றுமணிகளுமேரு வெற்பிற்
சொல்லியவடவாரிற்குந் துணைமணிவிடங்கடீர்க்கு
மொல்லியன்மணிகள்யாவு மும்மணியாகுமன்றே. (அஉ)

மாநாகமீன்றவான்றமணிகளுமான்மார்பின்க
ணூறுதமணியுஞ் சிந்தாமணியுமாங்காங்கறிந்து
வாறுடர்மகுடக்காசுமதிப்பனவருமென்றென்று
பூநாகஞ்சடைக்கணிந்த புண்ணியனருளிச் செய்தான். (அங)

மற்றுளதொழில்வெவ்வேறுவல்லமைசொல்லு நல்லோன்
குற்றமில்குணத்தானென்று குறித்தனர் திருவெண்காடர்
செற்றமில் சிந்தையிந்தமைந்தனே திறைகொண்டானென்
றிற்றுணர்ந்தந்தணாள ரெழின்முகநோக்கிச் சொல்வார். (அச)

என்னுடையிடத்திலந்த மைந்தனுற்றிருத்தல்வேண்டு
மன்னவன்றனக்குப்பொன்னோராயிரமளிக்கேன் முன்னாட்

பன்னியமூலவோலைபலரறிதாலவோலை
யின்னரோகல்கிறென்றார் நம்பியுமியைந்தானன்றே. (௮௫)

ஒருவனைமணம்விலக்கியுற்றவன்றொண்டு கொண்டு
பெருகுமாவணமுங்கொண்டோன்பிறங்குமக்கவன்குலத்தார்
திருமணஞ்செய்துவன்றொண்டாகியாவணமீவோன்போன்
றருளினால்வந்தவன்றனுவணந்தனங் கொண்டீந்தான். (௮௬)

ஈந்தபினெழுந்து நம்பியேகநாயகனையேத்தி
வாய்ந்தவெண்காடர் நீடமாசிலாசிகளுங்கூறிப்
போந்திடமருதிற்புக்கு புதுமணம்புணர்ந்துவாழ்ந்தான்
சேந்திடுமருதவாணன்செய்கைமேலியம்பலுற்றாம். (௮௭)

மருதவாணனைவெண்காடர்மகன்மையாக்கொண்டதன்றி
யுரிமைகூரடிமையாக வொருகணப்போதுமெண்ணா
ரருளினாலிவனுமந்தமன்பருக்கன்பனானான்
றெரிவராதிவருந்தானுந்திருநெல்வேலியின் வெயொத்தார். (௮௮)

இவ்வாறிக்கொழுகுநாளி னெழிற்றொழில்வாணிபங்கள்
செவ்வானமேனியன்பாலளித்தனர் திருவெண்காட
ரொவ்வாததுறைகடோறு மூதியமதிகமாக்கித்
தெவ்வானபெயரும்வந்து திறையிடச்செய்வித்தானே. (௮௯)

செய்திகளிவையுமன்றிச் சிந்துயாத்திரைக்குப்போந்திங்
கெய்திடல்கருதியாங்குமிருக்கும்வேண்டியவையாவும்
பைதிரமதிக்கச்செய்து பற்பலசரக்கு மொக்கப்
பெய்தனர்கலங்கொடுத்தார் பெருந்திருநீங்காதோங்க. (௯௰)

ஓங்கியகலத்தினாளுமோரையுஞ்சேர நோக்கிப்
பாங்குறக்கண்டுகொண்டுபகட்டுமொழுகத்துவள்ளற்
காங்கனியினியசெந்தே னமுதமோடளாவிநல்கித்
தீங்கிலாதானையேத்திச் செழுங்களிபிறங்கினாரே. (௯௧)

அருங்கலமீதுபோது மமுதனைக்கங்கைநங்கை
கருங்கடல்வடிவாய்த்தானுந் தாங்குதல்கருதினாள்போ
னெருங்கலைக்கரத்தாலேந்த நெடுங்கடலோடிநாடி
மருங்குறவணி கமாக்கண்மனங்களிதுறச்சென்றாள். (௯௨)

சென்றுநாடியதோர் தீவிற்சேர்ந்துதான்கரையைச்சார்ந்து
வன்றிறச்சரக்குமாற்றி மறுசரக்கேற்றிப்போற்றிக்
குன்றினின்றிழிவார்போலக்குரைகடல்கலத்தானீந்தி
மன்றலங்கொன்றைவேய்ந்த வாண்டகைமீண்டுவந்தான். (௧௩)

வந்தவாணிபத்தாற்பெற்றவளமெலாம்வளர்பொன்னாக்கித்
தந்தனன்றிருவெண்காடர்தருக்கருமகிழ்ச்சிபொங்க
வெந்திறல்விடையினார்க்கு வேண்டியசிறப்புநல்கி
யுய்ந்திடச்செய்தாரிவ்வாறொழுகினன்வழுவிலாதான். (௧௪)

மந்திரத்தலைமைசான்றமதிமுதுசேந்தனாருஞ்
சந்ததங்கண்டுகண்டு தம்முளேமகிழ்ச்சிபொங்க
வந்துறுமருதவாணன்வணப்புறுசிறப்புவாய்ப்பச்
சுந்தரம்பலிப்பச்செய்தார் சூழ்முக்காறிலாதார். (௧௫)

பின்னருமாரவாரப்பெருங்கடற்புக்கும் போந்துஞ்
சென்னியனாளுநதீவினுமரும்பண்டங்க
ளின்னிலமதிக்கக்கொண்டுவருமிருங்கலங்களோட்டுந்
தன்மைமீகாமரெல்லாந்தங்கண்மீகாமனென்பார். (௧௬)

ஆயதன்கருணையாகுமலைகடலிடையானந்தத்
தூயமாக்கலத்திலேற்றித் தொகும்பொருட்டுணையேநல்க
மேயசீர்வெண்காடர்க்கு விளையாட்டுகாட்டிநாட்டு
நாயகனின்னவாறுநாடகநடிக்குமாலோ. (௧௭)

இன்னம்பரெனுமூதூருமிருக்குமிவ்வணிகனம்ம
பொன்னம்பர்கமழுமாழிப்பூவும் பர்புழுகுசாந்த
மின்னம்பர்மாலாரம்மைமேருமால்வரையாம்வில்லர்
நன்னம்பரென்றுகாணு நல்லவெண்காடர்க்கீவான். (௧௮)

பரந்தபாய்விரியாதோட்டும்படரெதிர்காற்றிலோட்டுஞ்
சரம்படர்வதுபோலோட்டுந் தடங்கடற்குதிரைநாவா
யரந்தையாற்றத்தார்பூட்டுமவர்களைநகைத்துநோக்கும்
வரந்தருமருதவாணன்வருதிருவிளையாட்டன்றே. (௧௯)

இவனிவணெங்குளானோவெண்ணருந்தெய்வங்கொல்லோ
தவறிலாமோகர்சித்தர் தம்மிலீங்கொருவனேயோ

வலமொன்றில்லானிந்தவாண்டகையென்றென்றென்றும்
பவர்திருநீங்காதோங்கும்பட்டினம்பகருமாலோ. (கOO)

சிறிதுநாளின்னவாறு திருவுறச்சரித்தபின்னர்
மறுவிலான் முன்போலின்பமரக்கலம்பாய்விரித்து
நெறிசெறிவணிகரோடுநெடுங்கடலொருதீவத்துப்
பொறியுறப்போந்திருந்து புரிந்தவாபுகலலுற்றேன். (க0க)

வேறு.

கொடுபோகியசரக்கெங்கணுங்குலவாவிலைநிலவத்
திடமேவிடுநற்பொற்கிழி சேமத்திடையொடுக்கிக்
கொடைமேம்படலாகித்தெரிகுரவோர்மடம்பலபோய்த்
தடநீடியபுகழ்வேண்டினன்றுமறாதறம்புரிவான். (க0உ)

அலந்தோர்களுக்களித்தும் நெறியறிமாதவர்க்களித்தும்
நலந்தீங்கினரென்னாதறநல்கூர்ந்தவர்க்களித்துங்
கலந்தேபொருந்தினர்யாவர்க்குங்கடனுவுடனளித்தும்
நிலந்தேறிடத்தேவேசர்க்கு நிதிவேண்டியதளிப்பான். (க0ங)

உடன்போந்துளபடுமாந்தரு முடையானதிருவனே
லடங்காதிவன்புரிகாரியத்தாற்றீங்கிழைத்திடுமால்
முடங்காதினியாமாகவிம்முறைகூறிடின்முனிவான்
வடந்தாங்குமென்முலையாரொடுமருவாதொருநலனே. (க0ச)

என்றென்றவர்மொழியப்பொழியேமக்கொடையுடையோன்
குன்றென்றிணைவகிர்செய்தறங் குறையாவகைநிறையப்
பொன்றங்கியதிருவாலய மெடுப்பிப்பது பொருட்டா
னன்றென்றியநிமித்தக்கிளைநாட்டிப்பொருள்பூட்டி. (க0ரு)

மாலிங்கமெனத்தான்முளைத்திருந்தான்மணிகண்ட
னுலிங்கனம்பொருந்தாவுடையாளும்பெறநாளுங்
கோலஞ்செய்சோபானம்முதற்குளிர்தூபியந்தஞ்செய்
தேனும்படிகோலும்படியெல்லாமமைவிப்பான். (க0சு)

வெண்டிங்களைமுடிசூடியவியன்கோபுரமருங்கிற்
கண்டங்கியவாயிற்புடைகளமாமதிலியற்றி

வண்டங் கணியளகாடவிமடமாதருமாடற்
கெண்டங் குமுழாக்கொட்டிடுமிளமாக்களுமிசைத்தான். (க0எ)

இசைவித்தொளிர் மணிமண்டபமெழிலோங்குறவியற்றி
யசைவற்றிடுமலையான்மகளணி கோயிலுங்குயிற்றித்
திசைவிட்டொளிர்வேழம்முகன் செவ்வேள்சினகரமு
நசையுற்றவிழாமற்றவு நடித்தானுடன்முடித்தான். (க0அ)

தனைத்தானருச்சனையாற்றுதல் சோணாட்டினுந்தடங்கார்
கனைத்தோடியகடற்றீவினுங்கண்டேமெனப்பெரியோர்
புனற்கூட்டியசடைக்காட்டினன்பொருட்பூசனைபுரிந்தா
னினைத்தாங்குறுசிறுமாக்களுநிறைமாக்கதிபெறவே. (க0கூ)

அத்தீவத்திலுள்ளோர்களு மையனுடனடைந்தோ
ரித்தேயத்தரெல்லோர்களுமிறைசே வையினுய்ந்தார்
மெய்த்தானத்துளெக்காலமும் விழைபூசனைபுரிவான்
வைத்தானிலந்தலையூர்களு மற்றுமமைவுறவே. (கக0)

பொன்னுமவைபலவுஞ்செலப்போக்குந்தரனேக்கான்
என்னுமினியென்போர்களுக்கென்னு மினியென்னுன்
பன்னுவருமெருப்பாண்டில்கள் பலகோடிகளுளவாற்
றென்னுவெனவிசைபாடுமின் செல்கொமினியென்பான். (ககக)

எருவட்டங்கணந் தேய்த்து மிலவோபொருள்வருமா
ருருமித்திடுமென்பார்கடலுடனேடியபுடையோர்
வருமித்திறவோர் சொற்சொலவொருமித்தனமைந்தன்
முரணிச்சரக்கேற்றீரென முன்சொன்னமைசொன்னன். (ககஉ)

கிடையாச்சரக்கேதேனுமிக்கிளர்பூங்கலங்காணேம்
நடையாற்றிடைப்போதற்கிவனன்றுத்துணிவுற்று
னுடையே நடக்கிணையாவர்க ளென்றென்றுளங்களித்தார்
தடையாவதுமறப்போதற்குவிரைந்தான்றருக்குடையோன்-ககங

பலவாய பொற்சரக்கேற்றினர்பலரும்பலமுறுவான்
நலனுமிவன்சரக்காமெரு நகையாடிடவேற்றி
யலையாழியினடக்கும்படியரும்பாய்மரம்விரித்தார்
சிலநாளிடையடைபூங்கலஞ் செல்கின்றனபலநாள். (ககச)

உடன்போந்துளவணிகக்கிளையுறுதிவிறகிலராய்க்
கடன்கோடற்குக்கரு திக்கொடுகடல்வாய் விட்டிடற்றி
லடங்காவருமவனைக்கடனளிப்பாயெனவ ளித்தான்
மூடங்காச்சரக்கிவைபோலவணளிப்பீரெனமொழிந்தான். (கக௫)

மொழிகின்றதற்கிசைந்தார்முறிமுக மன்றொடுகொண்டான்
வழிவந்தவன்மதுராபுரி மருங்கேயெரிகரும்பால்
விழைவொன்றிசை யிசையாளரைவெண்ரேரிடநின்றே
னழிவொன்றுமிலாதானவர்தமைவென்றிடலரிதோ. (ககசு)

கடலோடிய கலநீடிய கரைகண்டது விண்டோ
யிடிபோன் முரசெறிந்தார்நகரெல்லோர்களு மறிந்தார்
மடியாதமனத்தாரொடுவணிகக்கிளையெவரும்
படியேறினர் மலர்வாண்முகம்பங்கேருக மொத்தார். (ககஎ)

திருமாநகரெங்குங்களி திளைக்கத்தெளிவிளைக்கு
மருதாளியும்வெண்காடர்த மணிமாளிகை புகுந்தா
ரொருமாமணி யளித்தானவரு வகைக்கடல்புக்கார்
வருவோர்களிற் பொல்லார் சிலர்வந்தின்னனமொழிவார். (ககஅ)

தீவிற்புகுந்ததுவுஞ் செறிசெம்பொற்றிரட்பெருக்காற்
கோவிற்புனைந்ததுவுங்குறைகொண்டோர்க்களித்தனவு
நாவிற்புகழ்ந்தோர்க்கீந்தது நவின்றாரஃதன்றி
பூவிற்சரக்கெருச்சேர்த்ததும் புகன்றார்நகைபுரிந்தார். (கககூ)

என்செய்தனையென்றின்னவன் முகநோக்கினரிவனும்
பொன்செய்திரள்போயிற்றினிப்பொருள்வேண்டியதருகேன்
வன்செய்கையின்வெகுளாதொழிவீரென்றுரைவகுத்தான்
முன்செய்கைமொழிந்தார்களுமுரண்கொண்டயல்போனார் (கஉ0)

எருப்பாண்டில்களெல்லாஞ் சரக்கிடுசாலையினிறைப்பத்
தருக்காலிவன்சொற்றுனிறை தாழாதுசெய்தமைத்தார்
மருப்பூவணிவெண்காடர்தம்வயத்தாங்கவர் முறிப்பால்
விருப்பாலளித்தனன்வாசித்து வெகுண்டார்பொருள்விழைவால் ()

பொருளீகுவனெருப்பாண்டிலிற் புக்கொன்றெடுத்தொழுவா
மருளுள்ளவம் முறியாளரைவரவிங்கழைப்பவர்முன்

கரையொன்றினையென்றொரு கைவல்லவன்கரைத்தா
னொருவுள்ளொளியெனச்செம்மணிவெயில் விட்டெறித்தனவே. ()

இத்தன்மையிற்கடன்கொண்டுளவெருப் பாண்டில்களொவைக்கும்
வைத்தன்னவர்விலை நோக்கினர் வணிகக்கிளைமாக்க
ளொத்துள்ளனவென்றார் பொருளிலமென்றுரைவரைந்தா
ரத்தன்மையில்வெண்காடருமடிமைத்திறங்கொண்டார். (கஉங)

கொண்டாரருடருமான்றனைக்கொண்டாடினர்குளிர்தோய்
வண்டாமரைமலர் போன்முகமலர்ந்தார்மகிழ்ந்ததற்பி
னெண்டானிறையெருப்பாண்டில் களாராய்ந்தனரெரிநேர்
தண்டாமணிகண்டாரிலைதவறாமிது வென்றார். (கஉச)

எருவஞ்சகனிவனைத்தனியிருத்தித்திடந்திருத்தித்
திருவஞ்செறிபொருள்கேண்மின்களென்றாரதுசெய்தார்
கருநெஞ்சினனவர்பக்குவக்கவிஞேக்கியங்கிருந்தா
னுருவஞ்சிறிதிலதுண்டலனொருவன்றெளியொளியோன். (கஉரு)

ஒளியானெனவிவனேரிடத்துறைந்தானெங்குநிறைந்தான்
குளிர்போகியகங்குற்பறைகொட்டுஞ்சிறுபூத
மளிநீடியசிலபூதங்க ளாடுஞ்சிலபாடும்
வெளிமேவியகணநாதர்கள் விண்ணோர்குழுத்தழுவும். (கஉசு)

மாலிந்திரன்மலரோன் முதன்மறைமாமுனிக்கணங்கள்
சீலந்தருசிவஞானிக டெய்வத்திரண்மடவார்
ஞாலம்புகழிசை நாரதர்நல்லோர்கலைவல்லோர்
காலம்பலமனுவாகமங் காணும்படியிடையும். (கஉஎ)

மருதப்பெருமானிங்ஙன மகிழ்நாள்களிலொருநா
டிருவிற்பெருந்திருவோலக்கமிருந்தான்றெரிந்திடுமா
திருன்விட்டெறிவெள்ளிக்குவட்டிருக்குந்தரமிருந்தான்
மருள்வெற்றிசெய்வெண்காடர்தமனையாரதுகண்டார். (கஉஅ)

கண்டோடினர்வெண்காடர்தங்கருத்தச்சுறமொழிவார்
வெண்டோணிபணிவெண்டையன்மென்பச்சிளம்பாவை
செண்டாடியமிடலாகுவன் சிறுசெம்பவளச்சேய்
தண்டாவிடையுண்டென்றனர் தக்கார்பயமிக்கார். (கஉகூ)

பயந்தோடினர்கண்டார்வருபச்சைப்பெருமானுங்
கயந்தோன்றியமலராளியுங்காணுததொர்காட்சி
வியந்தாரொருபேரற்புத மென்முர்மிகவெருண்டார்
நயந்தாருடன்மீண்டார்விழி துயிலார்நவைபயிலார். (கரு௰)

க்ங்குற்புலர்சிறுகாலையிலெழுந்தன்பருங்காண்பார்க்
கெங்கட்கிறைமருதப்பெருமாளாய்த்தனித்திருந்தான்
துங்கக்கமலச்சேவடி துணையேதுணையாகிச்
செங்கைத்திருமலர்சாத்தினர்சென்னிக்குறப்படுத்தார். (கருக)

புன்மைப்பிழைபுரிந்தேனவைபொறுத்தாண்டிடவேண்டும்
வன்மைக்கொளனினையாதுகொண்மருதப்பெருமானீ
நன்மைப்பொருளாய்வில்லிடுநாதப்பொருளாய
தன்மைப்பொருளாய் நின்றிடுதனியேயெனை முனியேல். (கருஉ)

ஏவற்றனியாளாயினை முறையோரெனவியைந்தாய்
தாவற்றிடுதேவாயினை தருவாய்த்தருகுருவே
யாவற்றனியேன்றன்னையு மவ்வாறருள்குவையோ
பூவிற்கமழ்மணம்போன்றுயர்புனி தாவெனைமுனியேல். (கருங)

மறையாமறையீறும் பெருவானோர்களுமறியா
விறைவாவெனையடிமைக்கொளவெண்ணித்துணிந்தனையோ
சிறுமானிடனடியேனுறுதெய்வப்பெருமானீ
குறையோவிலைகுறையுண்டெனிற்கூறுயினிமுனியேல். (கருச)

பல்காலிவர்புகலப்பயில் பரநாதனும்பருவ
மல்காவருமுனக்குக்கதிவழங்கு முபதேச
நல்காவருள்செயவந்தன னென்றுனவில்கென்றுன்
செல்காரியமலரீங்குபதேசஞ்சிவன்செய்தான். (கருரு)

செய்தங்கனஞ்சிலநாடரித்திருந்தான்சிவநன்றூ
லெய்தும்படிபடியென்றளித்திளஞாயிறுபோல்வான்
கைவந்தனநன்னூல்களுங்கண்டானதுவர்தும்
பொய்தங்கியமருள்வாழ்க்கையும் போகாதவுங்கண்டான். (கருசா)

நவகோடிபொற்குவைநீடியநாட்டத்தர்வெண்காட
ரிவைபோயிடத்துறக்கும்வண்ணமெவ்வண்ணமென்றெண்ணும்

பவமாற்றுதற்கிவைமாறெனப்பார்க்குஞ்சிவமாக்குங்
கவலாதசற்குருநாதனைக் காணும்பதம்பூணும். (கஙஎ)

மருளுந்தெருளும்போர்புரிமாறுட்டமுங்கண்டான்
றெருளொன்றிடமருணின்றிடத்திருவுள்ளத்திற்கிடத்தி
யொருதந்திரம்புரிகின்றன னுடையானெவையெவைக்குந்
தருமந்தணப்பொருட்குஞ் சுதந்தரனனசங்கரனே. (கஙஅ)

ஆட்கொண்டசருக்க முற்றிற்று.

ஆக - திருவிருத்தம். கஙஉ.

## துறவறச்சருக்கம்.

முன்னெறித்தவம்பல முயன்றநன்னரான்
மின்னெறித்தனவெனவிளக்கமோங்குவார்
சென்னெறிக்கதியுறுதிருவெண்காடனார்
பன்னெறித்துறவறச்சருக்கம்பன்னுவாம். (க)

திருவிடைமருதுடைத்தெய்வநாயக
னொருபுடைக்காதறையூசிவாசியாற்
பிரிவுடைச்சரட்டொடுபேணிமானுறப்
பரிவுடைப்பட்டினுற்பயிலச்சூழ்ந்தரோ. (உ)

ஏற்றபூம்பெட்டியினிட்டுக்கட்டுறத்
தேற்றமாமுத்திரை சின்னஞ்சேர்த்தினன்
கோற்றொடியன்னைகைக்கொடுத்துன்மைந்தனுக்
காற்றலீதளித்தியென்றகன்றுபோயினன் (ங)

பண்டுபோன்றிருந்தனன்பரமநாயகன்
மண்டுகாதலின்வருமதிவெண்காடரும்
புண்டரீகத்திருப்பொருந்துமாளிகை
யண்டனைக்காணவென்றணைந்தபோதினில். (ச)

ஞானசற்குருவினை நயந்தநாயகன்
போனதிக்கறிவுறுப்புனிதரானவர்

வானனைக்கண்டிலார்வனசவாள்விழிப்
பானல்வென்றரளங்கள் பரப்பினாரரோ. (௫)

துருவினாரெங்கணுந்துளங்கிக்காண்கிலார்
வெருவியேயவ்வயின் விரைந்துதாயரு
மருவினார்பெரியவர்மணிகொள்பெட்டியொன்
றருளினாருமக்கெனவருளிப்போயினார். (௬)

எனமொழியேழையப்பேழையீந்தனன்
மனமொழிமெய்களால்வணங்குமன்பருங்
கனைகெழுசிலம்பணிகமலனீந்ததைத்
துனைவினால்விழித்துறச்சோதித்தாரரோ. (௭)

முத்திரைகவிழவிட்டவிழ்த்துமுட்டறச்
சித்திரநேத்திரச்சுற்றுத்திரத்தபின்
குத்திரமொன்றறக்கொடுத்ததோர்பொரு
ளாத்திரம்வாக்கினாலறியப்பண்டமே. (௮)

ஒடிவுறப்புரைவிழுந்தூறிக்கூர்முறிந்
தடிபடுகாதறையாகிச்செய்கையாய்
நொடிதரமுறுக்குறுநூலுங்கோத்துள
வடிவினூசியின்வாசிநோக்கினார். (௯)

நோக்கினார்நீக்கறநெடிதுநோக்கினார்
பூக்கமழ்சடையினார்பொற்புநோக்கினார்
பாக்கியமிதுவெனப்பரிந்துநோக்கினார்
தேக்கியவுலகுவிண்டேறநோக்கினார். (௰)

காதினூல்போதனங்காதிற்கல்விநூல்
போதலைக்குறிப்பினாற்புகன்றபொற்புமா
மேதருமுலகெலாம்விடுங்குறிப்புமாஞ்
சேதமிப்பாசநம்பாசச்சேதமாம். (௰௧)

ஊசிகாந்தச்சிலையுற்றுப்பற்றல்போ
னாசமிலாப்பரஞானமாற்றலா
மாசிலோமென்றுகொண்டலங்கலோங்கிய
மாசினாலங்குலவடிவம்போயினார். (௰௨)

இச்சைஞானந்தொழிலிவைகளீசனா
ரிச்சைஞானந்தொழிலிவற்றுளாக்கினா
ரச்சமில்பரையுடனாக வாருயிர்க்
கச்சனுமவனிடையடைந்தொன்றாயினார். (௰௩)

மறைபெறுசிவமுளேமறைந்து நின்றபின்
குறையறவிளங்கியகோலும்போலுமாத்
திறமுறுதாமுமச்சிவத்துட்புக்கொளித்
தறிவுருவிளங்கினாரதீதவின்பமே. (௰௪)

இன்பமாமதீதமேலிருக்கும்வள்ளலா
ரன்பிலாருலகெலாமசத்துக்காட்சிவந்
தன்பினாலரனடியமுதமாந்தினா
ரென்பராலிவர்நலமியம்பொணாததே. (௧௫)

எறிந்தனர்முறிந்தவூசியினையேந்தலார்
செறிந்தனர்சிறைமுறிதெளிந்தநீரெனப்
பிறிந்தனரில்லறம் பெரியநூற்படி
நிறைந்தனர்துறவறநெறிகொணீர்மையே. (௰௬)

விடுத்தனர்வீடுநல்வீடுகூடுமா
றெடுத்தனர்துணிவுகூர்துறவையேபெற
வடுத்தனூரம்பலமதனிற்புக்குளார்
நடத்துளானம்பல நண்ணும்வண்ணமே. (௰௭)

போந்தபின்சுற்றமும்புடையிற்சுற்றவேல்
வேந்தனும்பட்டினம்விளங்குமேன்மையாற்
சேர்ந்தனன்மயக்கருத்தேற்றந்தேற்றினா
ராய்ந்திடினவுகாண்பரியவன்னவே. (௰௮)

மாயையின்போதமற்றிருக்குமன்னவர்க்
காயிரம்போதமங்காற்றினாரஃ
தேயினவல்லவாயிகழ்ந்தநெஞ்சினார்
தூயராயிருந்தனர்துளக்கமின்றியே. (௰௯)

பகர்ந்தனர்பட்டினப்பலரும் பண்பினான்
மிகுந்திருச்சேர்ந்தனார்விளம்புவீரெனப்

புகழ்ந்தவர்மவுனமாம் பொற்பின்வைகினார்
திகழ்ந்தமூகரைமொழிச்செல்வமாக்கினார். (உ௰)

மற்றவர்மவுனமுற்றுறைந்தவாய்மையா
லற்றைஞான்றெவர்களுமகலவன்பரைப்
பெற்றபேறென்னையென்ற ரசன்பேசினா
னிற்கநீரிருக்கயாம்பெற்றநீர்மையே. (உக)

எனவிசைத்தன்பனாரியைந்தகாலையி
லனகவம்பலத்துளானடியர்மேன்மையை
நினையவுமரிதெனாநிருபன்கூறினான்
மனையறக்கிளைஞரொழுக்கம்பன்னினார். (உஉ)

மன்னகேளிவர்பெருங்குடிமைவாழ்வுறத்
தன்னிகர்மருகனையிருத்தித்தாழ்வறப்
பன்னருந்திருவெலாம்பரிக்கச்செய்கவென்
றுன்னினருரைத்தலுமோகையாகியே. (உ௩)

அரசனுஞ்சுற்றமுமகன்றுபோயொளி
யிரவிநேர்மருகனையிவர்க்குநேரென
வரிசைசெய்திருத்தினார் மைந்தனுங்கினான்
புரையிலாவிழுதுவிட்டன்ன பொற்பினான். (உ௪)

இவன்சிறந்திருந்துழி யெழுதுகற்பினா
ளவம்புனைமனைவியார் தாமுநாடொறுந்
தவம்புரிகுவனெனத்தனிவெண்காடுறுங்
கவன்றுகட்டறவழி காட்டியோட்டினார். (உ௫)

நங்கையாரிற்புக நடாத்திவிட்டபின்
மங்கலச்சேந்தனார்மனங்களார்ந்துவீழ்ந்
தெங்களுயகவெனவிறைஞ்சிப்பின்னரும்
பங்கயச்சேவடி பிடித்துப்பன்னுவார். (உ௬)

எனையுமீடேற்றுதலெந்தஞான்றுகொன்
மனையறம்புகுத வோமன்றுளாடலை
நினைவினிறுத்தவோநிகழ்த்துவீரென
வனையவர்கருத்தினுக்கமைந்தசெய்கென்றார். (உ௭)

பக்குவக்குறைவுறுபண்பராதலா
லக்கணம்விடைகொளாவகன்றுதம்மகம்
புக்கனர்முக்கணுன்புனிதவன்பரு
மிக்கஞானக்கிளைவிளைவின் வாழ்குவார். (உஅ)

தகவுறன்மனைவியாய் தனையராமவர்
மிகுமுயிராய்ச்சிவம் விரவுந்தொண்டரோ
புகு முறவாயுறப்பூமென்பாயலா
நகைமலர்ப்பள்ளி மேனயந்து நண்ணுநாள். (உகூ)

அங்கணின்றகன்றுபோயகங்கடோறும்புக்
கெங்கணுயகனென விரந்தருந்துவார்
பொங்கொளிவணிகர்தாம் பொருதுமானத்தாற்
றங்கணூரணமிடற் றடைசெய்தார்களே. (௩0)

அடைவில்லாவாலமிட்டப்பமெய்ப்பயங்
கொடுசமைத்துடன்பிறந்தவள்கொடந்திடக்
கடுவிடனடியவர் கடுகிவாங்கினூர்
முடிபொருளறிகிலார் மூர்க்கமாக்களே. (௩க)

வினையினைப்பிடித்தொன்றுவிளம்பியப்பரீண்
மனையின்மேற்சொருகினூர் மனையின்மண்டழல்
துனைவிறப்பற்றவூர் துயர்கண்டன்னபோ
தனையவர்க்கிரங்கியாரெரியைமாற்றினூர். (௩உ)

வேறு.

தங்களைக்கேட்டுப் பிறந்தில மென்னும் தடந்தமிழ்சாற்றினூ ரதற்பின், பொங்கெரிபு குந்தவ்வூரொலாமுண்ணப் பூம்புகார்மாந் தர்களெவருஞ், செங்கனலவியாதிரங்கினூரதனுற் சிறியவரறிவி லாதவரொண், றங்கியையவித்தார்பலபுரமெரித்தாரடியரோர் புரஞ் சுடலரிதோ. (௩௩)

பின்னருந்தமையே முன்னைநாட்கருதிப் பெறலருந்தவத்தி னூற்பெற்ற, வன்னையைக்குறித்துக்குடியிருந்துன் வீடனலிடுவே னெனவறைவா, ரின்னவாசகத்தாலென்கொலோவென்றென்றிர ங்குவார்நகருளோரெவரும், பன்னுமவ்வன்னையிறந்தநாள் வாக்கா லாக்கைதீப்பற்றிடப்பணிந்தார். (௩ச)

வேறு.

எண்ணும்பசுங்குடிபன்னீராயிரவருள்ளும்
நண்ணும்பிறருள்ளுநல்லோர்பலர்குழீஇ
யண்ணலேயேகுதியோவாராவமுதேயெங்
கண்மணியேயென்றுக்கனிந்து கரைந்தழுதார். (௩௫)

ஆதித்தனேலாதவம்பரம்போலிந்நகரம்
பேதிக்குமென்னிலிஃதென்றும் பெரியோனே
நீதகற்றற்கையனே நீயெண்ணுந்திறம்போலுன்
பாதத்தையெண்ணிப்பணிகின்றேம்பண்ணவனே. (௩௬)

முன்னிச்சுடப்படுவாரில்லாத முப்புரங்கள்
வன்னிக்கிடுமவன்போன்மாதாவின்முப்புரங்க
டொன்மைச்சுடர்ஞானவங்கியினாற்சுட்டளித்தா
யின்னற்படுவோமுக் கின்னருளொன்றீந்தருளாய். (௩௭)

முத்துக்கொழித்து முழக்கெழுப்பு முன்னீரூர்
கொத்துக்குடிப்பெரியோரிவ்வாறு கூறுதலும்
வைத்துப்படர்வாரை முன்போய்மறிப்பாரா
லுய்த்துத்திருவடிமேலொன்றுவணங்கினரால். (௩௮)

வேறு.

வணங்கினர்க்கருள் கூறொணுமுபதேசமறைப் பொருட்பாடலீந் திருத்திக், குணங்குறியறியப்படாதமாப்பொருள்கொ டுலாய வெண்காடிடைக்குறுகி, யிணங்கிடும்போதி லிறைவர் தங்கோயிலேயவர்தூயவர்யாருங், கணங்கொளவெதிர்ந்தார் வணங்கிடவணங்கிக்காமர்பூங்கோயிலுட்புகுந்தார். (௩௯)

அன்பினுருகியாதரம் பெருகியையனேயமுத வாரிதியே, யென்பொலாப்பிழைகள் பொறுத்தளித்தனையே யிளம்பிறைப்பவள வேணியனே, பொன்புனைபொருளே யென்றவப்பொழுதிற் பூசுரர்மாணிக்கக்கந்தை, யின்புறக்கொடுத்தாரிறையவருடுத்தற்கென்றனொன்செய்தாரிவரோ. (௪௰)

நாயினுக் காகாமணி யிரணியங்களுயனுக்காகுமோவென்று, வாயினிற்புகலா முனமுதறினரான் மாணிக்கக்கந்தையாங்கனைத்

தும், போயினநக்கனெனும்பெயர்புதுக்கிப்புணர்திசைத்திருவுடை
யானை, யாயினானந்தவன்பருக்கின்பவருட் செல்வம்விளக்கினா
ரன்றே. (௪௧)

அளக்கர் வெண்காட்டிலருட்டிருப்பொருந்தி யமர்ந்துலகறி
வுறும் பொருட்டால், விளக்கினைவைய முய்யவென்பாடல்விளம்பி
னார் விளங்கியமேலோர், களக்கனிக்களத்தாரருட்பொருட்பிடித்
தார் கரும்பினு மினியசெந்தமிழ்ப்பாத், துளக்கறப்பரவியுளக்கரு
த்துருகித்துளிக்கணீர்மழைபொழிந்துறைந்தார். (௪௨)

ஒருவிடைகொடியின் றமக்குவந்தளித்த வுத்தமருவப்புறுது
றையுந், திருவிடைமருதைநோக்கி நின்றிறைஞ்சிச்சிறந்தகாவதம்
பலகடந்து, மருவிடையறா தவாவியப்பதியிலெதிர்ந்தவர்வணங்கி
டவணங்கி, யுருவிடைமருவு குருபரன்றிரு முன்னொருமையிற்பணி
ந்துருகினரால். (௪௩)

உருகிநீரிடத்திற்பிறந்த வொண்கமலமொளிகொணீ ருதவிய
தென்ன, பெருகுநீரருவியிருவிழிபொழியச் சிவக்களிபிறங்கிநின்
றாடி, யுருவெலாம் புளகம் பரந்திடத்தெளிந்தவுரைதழுதழுத்தவு
மொருவி, மருவினாரிறைதன்விடைகொடுமீண்டுவசித்தனரங்கண்
மாதவத்தான். (௪௪)

முதல்வனைத்தெய்வத்தாமரை முதலாமும்மணிக்கோவையா
ற்றுதிப்பார், திதியவனாதி நிலைபரம்பரையாய்ச் சித்தசித்தறி
வொடாதாரம், விதியுறவொன்று நிலைமுதலுரைத்தார் வியனிரண்
டாய வாசிரியத், ததிகனிற்பிடித்தாலன்றியுற்பவம்போகாதெனும
ருமையும் புகன்றார். (௪௫)

மூன்றில்வன்றொண்டர்வாசகன் செல்வமுழுக்கடல் குளப்
படியென்றார், மான்றருகரத்தானஞ்செழுத்தருங்காய் மருதமாணி
க்கத்தீங்கனியென், றான்றினர் நான்கிலந்தினிற் சகலமுற்றகேவ
லத்திலெற்காணே, னென்றநின்கருணைஞான நாட்டத்தா னின்
பெருந்தன்மையான்கண்டேன். (௪௬)

கண்டபினெனையுங் கண்டுளேனென்றார்கருதுமாறுவதிலொ
ருவ, னுண்டிவேண்டிருத்தல யினியின்குறை யோவுன்குறை யில்

லையென்றுறையீ, தண்டனேயென்றார்வல்லுனர்வல்லாரம்பரந்தெ
ரிந்தனர்நிலத்திற், கொண்டிடல்போலுன்னருஞ்செழுந்துளைப்போ
ர்குறைவிலாரொன்றனமொழிலார். (௬௭)

எட்டினிலடி சார்ந்தவர்க் கருட்செல்வ மிறைவரீயாநிறுவங்கு
றையா, திட்டலையென்றாரென் பதிற்புத்தனை பிந்தகலெனாகுவனொ
ன்றார், பட்டவோபற்றிலென்செயலன் றிப்பரமநின் செயலினே
னென்றார், முட்டிலிங்கிசைத்த திருவிசைப்பாவின் முடிவில் வெ
ண்காடனென்றனரோ. (௬௮)

இவைமுதற்றமிழாற்றுதிபல வியம்பியிருக்குமங்நாடனிலொ
ருநா, ணவைவிடாய்கழிக்கநீர் பொருநிருப்பனாதர்தம்பாணிதண்
பாணி, யுவகையாலுதவுமின்றெனும்பாடலுரைத்தனர் மற்றுமோ
ர்தினத்திற், கவலும்வல்விடத்தாலுறங்குறார்கட்டிக்கரும்பிடுகழ
னியீர்ப்புண்டார். (௬௯)

இந்தவாறீர்ப்புண்டொருபுறந்திண்ணையிடங்கிடந்துறங்குறு
ம் பொழுதி, லந்திவான்மதியம்வலம்புரிக்கண்ணியா மெனப்பூ
மருதாளி, வந்துதன்னுடையூர் காப்பவன்போல வடிவுகொண்டி
வர்மனஞ்சோதித், தந்தவான்கருணைபுரிகுவான்கருதிமேயபிரா
ன்னிருளணைந்தான். (௭௰)

காரிரும்பொலிக் குந்தடிவிலத்திடித்துக்காலிருள் மார்பிடை
த்தாக்கி, யாவைநீயென்னவிறுவிடவெருவாவமுத வெண்காடருமி
சைப்பா, ருரிடையெவைக்குங் காவலுக்குரியோயவைர்த்தியாலு
ரைக்குமாகேட்டி, சோரிபுன்மயிரின்றொலைகநோ டிடறைப்பிரோதா
லொடுமென்புமூளைகளே. (௭௧)

ஈனமாமெண்ணிறத்துவக்குமாமோவின்னதென்றோனையா
ன்கானேன், யானலதொன்றையானெனநினையுமிழிவெனாதுன்னா
மென்றிசைத்தார், தேனலரிதழிச்சேவகப்பெருமான் றெரிந்திலர்
மறைந்தனர்சிறந்த, ஆனலாமுருகிப்பெருகுமன்பினராயவைகைய
ங்கடலிடைப்படிந்தார். (௭௨)

படிந்தவமொழுந்து திசையினைநோக்கிப்பணிந்தனரணிந்தவெ
ண்ணீற்றார், விடிந்தனவிருளுந் தாமரைச்சரணமெய்விருப்பொடுத்த

வோவென்பார், கடிந்தசொன்னடந்த கருணையைப்புகழ்வார்காற் சுவடுரத்தினிற்குறிப்பார், முடிந்தமாப்பொருளைமுடிவிலாவருளை முன்னினர்பன்னினரிருந்தார். (௫௩)

அறுவகைச்சமயமிடைமருதாளியாறு மாமுகத்தினுந்தோன்றி மறுவறநடக்கும்புறநெறிச்சமயமற்றளவாறமாறுய புறநடைச்சமயப்புன்மைபற்பலவாம்பொருவிலம்மருகனைநோக்கி யுறவருமனைத்து மென்றனர்சமையாதீத முற்றிருப்பவரிவரோ. ()

இடைமருதாளிசமயபேதங்களின்னவாறிழைத்ததென்னென்னின் முடிவிலாவுயிர்கள்பக்குவக்குறையான்மொழிகதியடைதரமவுன வடிவுறுமவர்கள்புகலிடமியம்பின்மாயைமாமாயையுளடங்கும் படியிலாவொன்றினின்றனரிவர்தம்பாக்கியம்யாவரோபகர்வார். ()

பிரிவில்சித்தாந்தர்சமயபேதங்கள்பேசியதெய்வமொன்றெனினு நிருபனுநிருபன்மைந்தரும்புந்தி நிகழ்தருமமைச்சருமாக்கட்[கரு பெருகுதந்திரும் ஞானிகைக்கொள்ளும் பிள்ளைமாக்களுநிகர்ய முரிமையையுலகோரறிவுறப்பாடியுடையவனடிவிடாதுறைந்தார்.

அங்குறச்சிலநாளுறைந்தருவிடைபெற்றருட்குறிக்குடந்தை வாயடைந்து, சங்கரற்கன்பாற்றுதிபலவழங்கிச் சடைமுடியுடையவனிடங்க, ளெங்கணுமிறைஞ்சியந்தணருருமிறைஞ்சியங்கமரு நாட்களவாற், பொங்குகாமத்தாலிறந்தவாபார்த்துச் செயுளொரு வாய்க் கெனப்புகன்றார். (௫௭)

அசையையாட்டயருங்கூத்தனைநோக்கியங்குநின்றருள்விடை கொடுபோய், வசையுறுப்பாண்டிமண்டலம்புகுந்து வண்டமிழ்ம துரைமாநகரி, லிசையிறைபோற்றிமலைகொணுட்டுள்ளவிறைவனா லயங்களுமேத்தி, நசையிறுலாங்காங்கன்பினுலின்பநாதனுர்க்கரு ந்தமிழ்புனைந்தார். (௫௮)

ஆலமுண்டவர்க்குத்தமிழமுதளிப்பா ரருள்விடைமருதில்வந் தடைந்து, பாலவெண்டிங்கட்பழைய வற்பணிந்துபற்பலகாலமங் கிருந்து, மேல்விடையவனாவிடைகொடுமீண்டு விரைந்துவெண் காட்டிடைப்புகுந்து, வாலியசூல கபாலியைநீலமாலினிவாமனைப் பணிந்தார். (௫௯)

ஐயனைவணங்கி வழிபடுங்காலத்தகன்றிடுமந்திரிச் சேந்தர்,
செய்யசேய்வந்திங்கிவ ரடிபணியச்சேருநீயாரெனச்சேந்தர், கை
யுறுதுணைய னென்றுபுன் றொழிலாற்கைதளைப் பட்டனன்றுதை,
வெய்யகச்சிறைமீட்டருள்கெனப்பணிந்தான் விரைந்து வெண்கா
டருமெழுந்தார். (௬௰)

எழுந்துபோந்தண்ணல் சன்னிதிப்புறத்திலிசைந்து மத்தளை
தயிர்ப்பாடல், கொழுந்தெழப்பாடி முடித்திடக்கணங்கள் கொழு
ம்புகழ்ச்சேந்தரைக்கொணர்ந்து, தொழுந்தகையவர்முன் காட்டி
டவருளாற் றூன்மைசால் சேந்தருந்தொழுது, விழுந்தெழுந்தா
டிப்பாடினரரற்கு மெய்யன்பரிருவருமிவரே. (௬௧)

சேந்தர் வெண்காடரடியிணைபணிந்து திருவுள மகிழ்ந்திடப்ப
ணிந்தீ, ரேந்தவிச்சிறைமீட்டென்னுடற்சிறை மீட்டிடுநெறிகாட்டி
டவேண்டும், வாய்ந்தநீரென்னவன்னவர் மகிழ்ந்து வனத்தினில்
விறகொடித்தெடுத்திட், டாய்ந்தவவ்விற குவிற்றிடும்பொருளால
னந்தினமொருவருக்களிப்பீர். (௬௨)

எனுமுபதேசத்தவமளித்தகன்று ரிவருமத்தவம்புரி காலை, வ
னவயிற்பொதிசோற்றுருபுடைதூக்கி வாய்திறந்துறங்கிடவாயிற்,
கனியனம்பிதிர்ந்து வீழ்ந்திடவாயிற்பயந்துகன்மன்றனுக்கென்று,
ரனகமன்றுடுமெங்கடம்பிரானுரமுது செய்தரும்பசியகன்றார். ()

பொருவிலக்காலத்தொருதிருவளவன்பூசனைகுறை வறப்புனை
வான், பரவுமந்தத்திற்கோயிலாராச் சிப்பருடணிகாதமங்கெழும்
பு, மருவுமன்றோசைகேட்டிலனயர்ந்துவருந்திறைன்கனவினிற்கூ
த்த, ருரைசெயச்சேந்தரன்பினையுணர்ந்திவ்வுல குளோரறியவாய்
திறந்தான், (௬௪)

நீலநீர்வேலிஞாலமேலறிஞர் நிறைபரஞானிகளெவருஞ், சீ
லமாரன்பர்சேந்தனார்க்கீந்த திருவருட்டிறத்தினைக்குறித்தா, ரோது
மன்னவர்தந்தவத்தினைத் துதித்தாரினியவெண்காடரைமதித்தார்,
பாலனம்புரியும் வளவனைப்பரவிப்பைம்பொனம்பலத்தையும்பணி
ந்தார். (௬௫)

திருவிசைப்பாவிற்றிருவிடைக்கழியிற்றிருச்சிற்றம்பலமுடை
யவரை, மருவமுன்வைத்த முருகவேடனக்குமாலுலாமனத்தமிழ்

பாழு, யுருகு மன்பினராமன் றுணின்றுடு மும்பர்தம்பதமலரடை யக், கருணைசெய்தனர் வெண்காடராங்கதனுற் கதியடைந்திடவ ணித்தாறுர். (௬௮)

வேறு.

தோணியம்புரத்துட்புக்குச் சுடர்விடுமழு மான்விட்டுக்
கோணறநிற்குமின்பக்குழகனையழகுபூத்து
மாணுறுதோளியாணி மணியணிப்பச்சையாடுங்
காணுறுங்குரவர்ப்போற்றிக்கண்டுகண்களிக்கலுற்றுர். (௬௭)

கருங்கடற்றேணிவிட்டுக்கட்டுமட்டுடைமாணுக்கர்
பெருங்கடற்றேணிவிட்டபெரியதங்குரவற்போற்றி
யொருங்கடற்கோலுநீலமொருமூன்றுமுடைந்துமாற
வருங்கடற்கண்டநாடுமெகிழ்தமிழ்பாடுநாளில். (௬௮)

பண்டினுமதிகசத்திபாதம்வந்தடைதலாலே
யொண்டிறற்றிருவெண்காடருடற்கலத்துயிர்ச் சரக்கைக்
கொண்டிடத்தில்லைக்கூத்தர்குறியருணற்றுர்பூட்டி
யெண்டிகழ்சிவந்தபாதத்திருங்கரைசேரச் செய்வார். (௬௯)

ஆதலாற்காழிவாழுமமுதனைவழிபட்டேத்திக்
கோதுதீர்குரவற்போற்றிக்குறிபற்றி விடைபெற்றண்ணல்
மாதவம்பெற்றோர்போற்றுமன்றுண்மாணிக்கம்பெற்றே
யேதமிலின்பாதீதவிலாபமுற்றிருக்கவந்தார். (௭0)

வந்தவர்மற்றுமுள்ளதலங்களும் வழிபாடாற்றிக்
கொந்தலர்ச்சிறைவண்டார்க்குங்கொள்ளிடப்பொன்னிபின்னிட்
டந்தளிர்ச்சோலைவேலியண்ணலூர்கண்டுங்கேட்டுஞ்
செந்தமிழ்திருவாக்காளர் திளைத்துளங்களித்துவந்தார். (௭௧)

கொள்ளைவெண்கமலக்காடுங் குளிர்செந்தாமரைக்குழாமு
மள்ளலங்கழனிதோறுமனந்தகோடிகள்வண்டில்லை
வள்ளறுடகங்கண்டுள்ளவாணிலாவண்ணப்பானு
தள்ளறத்தலவாசஞ்செய்தன்மைபோன்றனவுங்கண்டார். (௭௨)

தில்லைமாநகரஞ்சுற்றுந்திருமதிற்சிகரிநான்கும்
நல்லவர்மௌனப்பொற்பும் ஞாயிறுதோன்றிற்றென்று

வெல்லொளிநிமிரும்வெற்புமிமையமும்பொதியிலும்போன்
சொல்லுவகண்டார்தூண்டு முவகையாரு ருட்புக்கார். (௭௩)

வீதிகடொறும்பணிந்துவிதிமுறையந்தணாள
ராதிமூவாயிரத்தோரங்கிகளனேகஞ்சுற்ற
மீதிடாதிற்கு ஞானவங்கியைவியந்து காண்பான்
பேதமைதீருந்திரப்பெரியவரரிதின்வந்தார். (௭௪)

வேறு.

நீடுமறையாகமவிரப்பியபெருஞ்சொல்
லாடியவிதிப்படியமைந்தசதுவீதி
நாடுமதிலைந்தணவமாகநவமாகுந்
தேடரியவீடுதரு தெய்வநகர்கண்டார். (௭௫)

கண்டனர்வணங்கினர் கணங்கொள விளங்குந்
தொண்டரொடுமுட்சிகரி சூழ்ந்தமதில்வாயி
லெண்டரவிறைஞ்சியுட் புகுந்தனரிலங்கு
மண்டர்நடமாடுமணியாலயமருங்கே. (௭௬)

ஆலயமிலங்குவதறிந்தனர்செறிந்தே
ஞாலநடுவிண்ணுயர்வுபாதலநலக்கீ
ழேழுமிதுவென்பதுவுமின்பமொடுகண்டா
ராலமணிகண்டரருள்செய்யிலரிதென்னே. (௭௭)

ஏடவிழ்செழுங்கமலமெங்கணுமிலங்கப்
பாடுமளியாடுமவர்பாவமெனவோவத்
தேடுநருளேயநிலைசேருமவர்நேச
நீடுசிவகங்கையினெடுந்தவர்படிந்தார். (௭௮)

படிந்துசிவமாமிதெனவோர்ந்துபடர்பாவம்
விடிந்துசிவமூலமுறைமேதகையசோதி
முடிந்தபொருளாய் முடிவிலாதபொருள்கண்டார்
தடிந்திருள்கடிந்தபொருடக்கசபைபுக்கார். (௭௯)

சற்றுமசையாதபொருடானசையமூல
முற்றநிலையுந்தலைமையுற்றபடிமற்றும்

பெற்றபடிகொற்றவர்பிறங்குசெயல் கண்டா
ரற்றமறியானருளளிக்கிலரிதென்னே. (௮௰)

குஞ்சமலைமஞ்சர்பலகாலரற்றிமூல
ஒஞ்சுதல்படாவிடபயோகிபுலிபாம்பு
நஞ்சமுறுதேசிகநடக்கலவிகண்டா
ரஞ்சலிசெயின்னவருமன்னவரையொத்தார். (௮௧)

அந்தநவோதிவிடு மண்ணலவையுண்டாய்
வந்துதிசயத்தினைவழுத்தினர்தநெஞ்சில்
முந்துறவிளைந்தொரு முத்திவிசயத்தைச்
சிந்தைசெய்திருந்தனர்திருந்தினர்வருந்தார். (௮௨)

செங்குருநடந்தரிசனஞ் செய்சமயத்தில்
வெங்ககனலிங்கவுருமேல்விளைதல்பெற்றார்
அங்கையினிலங்கியவனுடலிசைபாட
லங்கிசையவோதினரருந்திருவிசைப்பா. (௮௩)

வேறு.

பொன்னாருமணிமார்பன்பூமேலயனறியா
வென்னாவெடுத்தோதியேவிடைபெற்றேகியபின்
பண்ணாகவாடகப்பொற்பாதமெனப்பாடியிடச்
சென்னாவுண்சோறளித்தாள் சிவகாமசுந்தரியே. (௮௪)

ஞாலமறியவெங்கணாயகியாரீந்தவன்னக்
கோலவருளுண்டுகுலாப்பெருகிக்கூத்தாடி
மூலவிலிங்கமமர்முழுச்சுடர்பின்னுந்தொழுது
சாலமகிழ்ந்துதருக்கினார்தண்டமிழார். (௮௫)

பேசிக்கடைதொறும்போய்ப்பிச்சைகொண்டிங்குண்டிருத்த
வாசிக்களிப்புடைத்தாம்வண்ணமெனத்தண்ணளியார் [ல்
தேசுற்றிருந்தார்சிலகாலஞ்செந்தமிழாற்
பூசிக்கப்பெற்றார்புனிதனடித்தாமரையே. (௮௬)

வான்றேடுமறையேயோவென்றெடுத்துவண்டமிழ்ப்பா
நான்றேடநாணாரோ நாணாரோவெனமுடித்தார்
தோன்றாப்பொதுச்சூழ்ந்து சோதிவிடைபெற்றேகி
யேன்றார்வடதிக்கிடைநடக்க வன்பாளர். (௮௭)

வேறு.

ஏயும்பூகமிளநாகமினியகனிசூழ்பனைமரங்கள்
காயும்போதுங்கலந் தளிப்பக்கனையார்புனல் சேர்திணைநகர்வாய்த்
தாயுந்தமருந்துறந்தவர்தாந் தம்பிரானார்தாம் வரக்கண்
டாயும்பெரியோருள முருகியருகாவின்பம்பெருகினரால். (௯)

விடைகொண்டகன்றுசிவாலயங்கள் விரவிப்பரவியடிபோற்றி
மடைகொண்டுடையும்புனற்கெடிலன்மணிநீர்வாவிமலரோடைப்
புடைகொண்டொருபாதிரித்தருவிற்புணர்சண்பகமும்பலபூவு
மடையுந்திருப்பாதிரிப்புலியூரடைந்தாருடைந்தமனமுடையார். ()

அரக்கரனையார்விடுதூணையலைவாய்த்துரும்பினெளிதாக்கி
யுரக்குமந்தக்கற்கலத்தாலொருமாதவரைக்கரையேற்றிப்
பரக்குங்கடல்வாய்மரக்கலந்தாழ்ப்படுத்தித்தமையுங்கரையேற்று
மிரக்கம்பெரியோர்தமைக்காணவிளநீர்க்கெடிலம்படிந்தாடி. (௧௰)

கடற்பாற்றிகழ்ந்தசடைஞாழற்கன்னிவனத்தெம்பெருமானை
யடற்பாலினிமேலுறவறியாருலவாச்செல்வம்பெறப் பணிந்து
மடற்பாற்கமலம்வழிபிரசம்வாவிச்செழுநீர் மேன்மிதந்து
விடற்பாலனவாந் திருவதிகைவியன்மாநகரத்தயல் போந்தார். ()

கூற்றாயினவாறென்றெடுத்துக் கொழுத்ததமிழான்வழுத்துமவர்க்
காற்றாவின்பந்திருநாவுக்கரசென்றளித்தாரொளித்தாள்கள்
போற்றாவணங்கிமணங்கமழும்பொற்பூவனையதமிழ்ப்பனுவ
லேற்றாநின்றார்மரகதவீரொட்டானத்தெம்பிறைவனையே. (௧௨)

இறைவாழ்மூலவிலிங்கவடியிறைஞ்சிப்போந்தங்கிடைஞாழன்
மறையார்சோலைத்திருவெண்ணைநல்லூருடையவிடையானை
யுறவாடினர்தாமுறவாடியொன்றுமிருடீர்ந்தருள்பெற்றார்
பிறையார்மின்னற்பின்னலராப்பேணிப்பணிந்தார்பெரியோரே. ()

சோலைகாட்டுங்கரைப்பெண்ணைத்துறையார்மறையார்சுந்தரரை
மாலைகாட்டுந்தமையிமையோர்மகிழ்ந்துகாணமுறிபூசி
யோலைகாட்டியாண்டாரையோவாவிடைபெற்றேகையிலு
லாலைகாட்டும்பெருந்துழனியண்ணாமலையைநண்ணுவரால். (௧௪)

நெடுந்தூரத்தேவன்னிமலைநிலையைநோக்கிப்பணிந்தெழுந்து
தடந்தாமரைத்தாணிணைந்துருகிச்சந்தம்பெருகுந்தமிழ்வாயார்
நடந்தாரந்தொண்டர்ப தநளினம்புளகம்பெறப்போற்றி
வடந்தாழ்முலையாளொனுங்கொழும்பால்வாரிமுழங்குமவ்வூர் (௯௫)

ஊருட்புகுந்துவீதிதொழுதுள்ளங்குளிரவொளிவளரப்
பாருட்பணிந்துதிணிந்தமதிற்பயில்கோபுரவாயிலும்பணிந்து
வேருட்பழுத்தமலர்க்கனியைவிண்ணாட்டமுதைத்தண்ணளிகூர்
வாருற்றுண்ணாமுலையாளைமலைசூழ்போந்துவணங்கினரால். (௯௬)

தாழாக்கருணை விடைகொடுபோய்த் தருக்கிப்பெருக்காற்றெழுந்த
வாழாநின்றதிருவிசைப்பாவள்ளலுள்ளங்கனிந்துருகிப் [தென
பாழாய்ப்பயிலாத்தொழிலாற்றும்பரனாலயங்கள்பலபோற்றிச்
சூழாவருவாரிடைமருதிற்றேன்றுங்குருவையொருவாதார். (௯௭)

மற்றுமபதிகளாங்காங்குவணங்கிக்குணங்கொணீறணிந்த
சுற்றுஞ்சடையார்க்கினியதமிழ்த்தொடைமாலைகளும்பலசாத்தி
யெற்றும்புனலும்பெரியோருமிளம்பூவையரும்வளம்பூத்துக்
கொற்றந்தரும்வேதாகமமுங்குழுமுங்காஞ்சிநகர்புகுவார். (௯௮)

வேறு.

மாயவளப்பொருடேடமாநீரிற்போய்வருவார்
நேயவளப்பொருடேடநீணிலத்தின்மேற்படர்வார்
தூயவனப்பெரியோர்வாழ்தொண்டைமண்டலத்துத்
தாயவளெப்போதுமுறைதண்காஞ்சித்தலத்தணைந்தார். (௯௯)

கச்சியாந்தலநலத்தைக் கண்டிரண்டுகைகூப்பி
யுச்சிவாளிளம்பளிங்கையொத்துவளருத்தமனார்
நச்சியாரணம்பாடி நாடியநற்றவங்காட்டும்
பச்சைநாயகிசிவந்த பாதநினைந்துட்புகுவார். (௧00)

மெய்காட்டியாண்டருளும் வித்தகர்மாவடித்தேவர்
கைகாட்டுந்தொண்டரெலாங் காவிரிப்பூம்பட்டினத்து
ஐகாட்டும்பெரியோர்வந் தடைகின்றா ரொன்றடைந்தார்
மொய்காட்டுமிவரவர்கண் முன்பணிந்தாரன்பாளர். (௧0௧)

மாடநெடும்பொன்வீதிவண்ணமெலாங்கண்ணுவப்ப
நீடியசீரார்பணிந்து நீர்மழைகண்ணூற்பொழிந்து
கோடலுருவாக்காற்குணம்பாய்கொழுந்தமிழ்கள்
பாடினார்நாடிப்பரநாதன்முன்பணிந்தார். (௧0௨)

ஒன்றாகநின்றுருகி யோங்காரநீங்காம
னின்றானேயென்றன்பினின் கோலமாயிருப்பக்
குன்றாவரமளிப்பாயென்றார்குறைவறியார்
வென்றாளுமம்பிகைவாழ்மெய்க்கோயில் புக்கனரால். (௧0௩)

வேறு.

ஆருயிராமவையார்பெறுவீடுற
வாரவிலாவியமாதவன்மாதவள்
சீருறைவாள்விழிசேருறைவானரு
ளேறுறவேறுறவேயிவர்நின்றார். (௧0௪)

செங்கழுநீர்மலர்மூன்றொருதீப
மங்கலர்நான்கொருநான்கெரிதீப
மெங்களுமைக்கெனலாமிவையாவுஞ்
சங்கரனன்பர்தருக்கொடுகண்டார். (௧0௫)

தாயவணின்றுதவம்புரி காலைக்
கோயில்குலாநதிகொண்டமைகண்டார்
நாயகன்மேனிநலஞ்செய்தழும்பை
யேயவர்நாத்தழும்பேறமொழிந்தார். (௧0௬)

கச்சிநகர்க்கடலக்கடற்றோன்றும்
பச்சமுதப்பனையைப்பணிவுற்றார்
மைச்செறிகட்கடைவைத்தருள்வைத்தா
லிச்சிறுமைக்கடல்வற்றிடுமென்றார். (௧0௭)

என்றவணங்கிவலங்கொடிணங்கிக்
குன்றில்விளைந்தகொழுங்கனியுட்கொண்
டென்றுமிருங்களியின்பநிரம்ப
மன்றினடந்தொழவந்தவர்வந்தார். (௧0௮)

வேறு.

திருவேஷம்பமுடையார்க்குத் திகழ்ந்தந்தாதியொருமாலை, யி
ருபான்மெய்த்தொண்டனவெடுத்தாரியற்றொண்டறியேன்கைத்
தொண்டு, புரிவாரதனிற் காற்றொண்டுபுரியே னுண்பான்பொய்த்
தொண்டாய், வருவேனென்றார் மெய்நாட்டோர் நகைக்கவெனு
மாலையுமிசைத்தார். (௧௦௧)

இசைத்தங்கிருப்பாரோரிரவிலெரிவந்துதரப்புகுந்தாற்போ
லொசிக்கும்பசிவந்தெழவயிறேயூருண்டுறங்கனடந்தனகாண்
வசிக்குமவர்களனம்பகிராரளியாயென்றுலழுத்திடவும்
பசிக்குந்தரமேலிடவிளக்குப்படுவீடொன்றிற்படர்ந்தனரால். ()

காயும்பசியாலருட்பெரியோர்கங்குல்யாமத்தெளியராய்
வாயுந்திறவாரங்கைகொட்டமனைவாழ்பவன்சற்றறியாம
லாயுங்காமக்கள்ளனெனவந்தோவந்தோதீங்கிழைப்பத்
தீயோன்செயலையறிந்தங்கணயலானொருவன்றெரிந்தணைந்தான் )

போற்றும்பெரியோரிவர்தமைநீபுடைத்தல்பொல்லாதெனவதனை
மாற்றிக்கொடுபோயுடற்றடவிமகிழ்பாலன்னங்கறிநறுநெய் [ல்
கோற்றேனிவைகள்கலந்தூட்டிக்குளிர்சாந்தணிந்து பணிந்துசெய
சாற்றியிடீரவரவர்க்குத்தக்கதடைந்தீரென்றார்பின். (௧௧௨)

பிரியாவரனைவிடைகொடுபோய்ப்பெருங்காளத்திமலைநோக்கி
வரியார்சுரும்பர்வரியிசைக்குமலர்க்காவாலங்காட்டம்மைக்
குரியார்வணங்கிமணங்கமழுமுயர்பூங்கானநெடுஞ்சாரற்[தார். ()
பெரியோர்தவங்கள் புரிவனவுங்காண்பான் கருதிப்பெயர்ந்தணைந்

தொண்டர்திரண்டோடிப்பணிந்து தொழுதுவீதிச்சினகரத்தைக்
கண்டுவணங்கிக்கரங்கூப்பிக்கள்ளங்கொள்ளாவுளத்தார்
மண்டும்பேரன்பெனவறியாவண்ணம்பயிலுங்கண்ணப்பர்
பண்டைப்பணியைநினைந்துருகிப்பல்காலொல்கிப் பணிந்தனரால்.

பணிந்துதிருக்காளத்திமலைப்பரஞ்சோதியையும்பணிந்துபணிந்
தணிந்தபரஞ்சோதித்திருநின்றன்பென்புருகுமின்பாளர்
திணிந்தபடிவக்கொடுமுடிகடிசைகடோறுமிசையுமலைவ
துணிந்துகருணைத்திறம்பெறுவார்சூழப்போந்தார்வாழ்வுறவே. ()

போதும்போதின்மணிநகரம்புடையிலாடலிசைநோக்கி
நாதர்க்கிடுதண்டிகைத்தீபநணியவாருங்கதிக்காளற்
கேதமில்லாவுறவேயோவென்பார்முன்போம்பலயானை
சீதமதியோன்விழாவினுக்குத்திருமுன்படரப்போவென்பார். ()

ஐயன்றிருமேனியினடங்குமத்தீயுறவோவெனாநிலைவா [த
ரெய்யுஞ்சிலைவேட்டுவர்திண்ணர்க்கென்னுமுறவோபண்ணைமந்
செய்யகனிவாய்க்குறமளிர்சிவஞ்சேர்கன்னிமார்நேர்வார்
தூயசீரர்தமிழிசையோர்சுரும்பின்பாடலாமென்பார். (௧௧௭)

தவமாற்றுமலாற்றுமவர் தம்மைச்சிவகோசரியாரொன்
றுவமானத்தானினைந்துருகியொளிகூர்தென்றிசைக்கயிலைத்
தவமாமலையைச்சூழ்போந்துதொடர்ந்துபடர்ந்தத்தவத்நவரோ
டவமாறியலாக்கதியளிக்குமையன்றிருமுன்னடைந்தனரால். ()

குளிர்கூரருவித்தென்கயிலைக்கோமாற்கில்லுமெனப்பாடி [யத்
யொளியார்திருமுன்விடைகொடுபோயொற்றியூர் கைப்பற்றினரா
தளியாலயங்கள்பலபோற்றித்தண்டாமரைக்காட்டொடுமாட
வெளிமாமலைகள்கலைஞானவேலைநிலவப்பதிபோந்தார். (௧௧௯)

அடியார்திரளவ்வயிரேறக்கியடிகளடித்தாமரைபோற்றி
விடியாவிருளைவிடிவிக்கும்வீதிமதிற்கோபுரம்பணிந்து
பொடியாடியவொண்டிருமேனிப்புனிதனுனதப்புகழ்பாடி
நடியாநிற்குநாதார்தஞானப்பொருளைநணுகினரால். (௧௨௰)

குருவாய்வந்தென்குறைதீர்த்தகுன்றேருன்றக்கொழுமணியே
பெருவாழ்வாகியெனைக்கலந்துயிரியாதிருக்கும்பெருந்தேனே
யுருவாயருவாயுருவருவாயுளாயாடியமூன்றையுமொருவி
வருவாய்தருவாயென்னுயிர்வாய்மருவாய்மருவாய்மருவாயே. ()

போற்றிபோற்றிநாயேனைப்பொருளாய்க்கொண்டவருள்போற்றி
யாற்றின்வலிகூர்முகங்கோடியடக்குஞ்சடையாயடிபோற்றி
தேற்றியினியாயினுமெனைப்போற்செய்வாய்மெய்வா யருள்போற்றி
நீற்றினுள்ளேபவளவொளிநிகழுந்திகழ்வேயருள்போற்றி. (௧௨௨)

என்றென்றருளின்றிறம்போற்றியெள்ளாவுள்ளங்கனிந்திளைப்ப
மன்றுளாடியெமக்கருளுமணிமாணிக்கப்புநம்பணிந்து

நின்றுபோந்துவலஞ்சூழ்ந்துநிகழ்ந்துமகிழ்ந்தங்கிருக்கின்றார்
தென்றல்வந்துசுந்தரரைத்திருவாரூருக்கழைத்தனர். (கஉந)

மயனாலயனாலியற்றாதமணிச்சங்கிலிக்குத்தூதுபோய்
வியனாமிருகாணடந்தார்க்குவிருந்தாய்வந்தவெண்காடர்
கயனாணியகட்கணிகையர்காற்கமலச்சிலம்பினொலிமலியும்
பயனாரொற்றியூர்பற்றிப்பதிகொண்டிருந்தார்படிபோற்ற. (கஉச)

வேறு.

இருநிலமடந்தையென்னவெடுத்தவாசிரியச்செய்யு
ளொருபதுமொன்றுமொற்றியூர்த்தொகையெனப்பேரிட்ட
திருவிசைப்பாவாற்பாடித்தெளியொளியுளம்விளங்கப்
பெருநிலையுடையாரின்பப்பேறெலாம்பெற்றுளாரே. (கஉரு)

பெற்றவர்திருநீராடித்திருநீற்றின்பெற்றிமுற்றுங்
கற்றவர்புரங்கண்மூன்றுங்கற்றவர்கருத்துட்கொண்டு
செற்றவரடிகள்பாடித்தினந்தொறுநியமமாற்ற
லுற்றனருற்றவாற்றினுண்மையிங்கியம்பலுற்றேன். (கஉசு)

நம்பிடைமருதநாதனற்குருவாகிவந்து
தம்பொருடனக்குத்தந்ததண்ணளிப்பெருமையாலே
யம்பொனஞ்செழுத்தினாலுமருநியமங்கள்செய்வார்
சம்புவையொழியாப்பூசைத்தன்மையுமவற்றாற்செய்வார். (கஉஎ)

கிளர்ந்தகெற்பத்தினுள்ளுங்கெற்பகோளகையிடத்துங்
கொளுங்கெற்பநிலையத்துள்ளுங்கேவலஞ்சகலங்கூர
வளர்ந்தறிசகலந்தாமேயதீதம்போன்றதீதமன்றும்
வளங்களுங்கண்டுநீங்கிமண்டொளிகொண்டுநிற்பார். (கஉஅ)

அவத்தைகடணந்தவன்றியையனுக்காக்கையாக்கிச்
சிவத்தொழிலொவ்வெழுத்தாற் சிவலிங்கவடிவமாகிப்
பவப்பெரும்பிணிதணிப்பார்பரவுயிர்தமக்குளாக்கி
யவர்க்குளவுடலந்தாமேயாயினரொற்றியூரார். (கஉகு)

அவருயிர்தமக்கில்லாக்கியாண்டவாண்டகையார்நிற்ப
வுவரிவாய்மணற்பரப்பிலொளிவெளியிடத்திற்போந்து

கவலுறுச்சிறார்கள் சூழக்கண்டவர்தன்மையாகிப்
பவர்விளையாடலோடும்பாடலும்பயிலலுற்றார். (௧௱)

குறுமகாரணிக்குழாங்கள்குளிர்மணப்புளினப்பாங்க
ருறுதிமெய்தளர்ந்துபின்னரொன்றும்வெண்காட்டர்தம்மை
மறுதரம்புதைத்துத்தொக்கவப்புறம்பரந்துநிற்பார்
மறுகுழிப்படுத்தபின்று மன்னவர்விலகிநிற்பார். (௧௱௧)

பன்முறையித்தன்மைத்தாம்படிபடிமணலிற்காட்டி
முன்னியபட்டினத்துமுளைத்தவவடிவந்தானே
சென்னெறியிலிங்கமாகிச்செழுமணறனின்முளைத்தார்
புன்னெறிச்சிறார்களோடிப்புரத்துளார்க்குரைத்தாரன்றே (௧௱௨)

ஒற்றியூருழியுள்ளாருமற்றுளபுரியுளாரும்
பற்றியூர்ந்தடைந்துகண்டார்பட்டினக்கடவுளாரை
வெற்றியூர்மூன்றுஞ்செற்றவிமலரேயிவராமென்றார்
பெற்றியூரதிசயத்தின்பெருமையாருரைசெய்வாரே. (௧௱௩)

மலர்மழைபொழிந்தவெங்கும்வானதுந்துமிமுழங்க
நலமலிகணங்கள்சூழநாகநாட்டரம்பைமார்கள்
பலநடம்பயிலப்பூவிற்பாவையாரடியர்பாட
விலகியவிதழிமாலையீசனுக்கணிந்தாரன்றே. (௧௱௪)

புதுவார்வார்த்தைநாத்தகவாப்புவனத்துள்ளுமந்தரத்து
மகிழுந்தேவருலகுள்ளுமணிநீர்வேலிஞாலத்தும்
தருவோர்களோவிவர்பேறுந்தமக்குவருமோவெனக்களித்தார்
நகையானிலப்புரமூன்றுமெரித்தார்பெருமைசொல்வார்யார் (௧௱௫)

திருவம்பலமேமுதலாயசிவத்தானங்கள்பணிந்தனவு
மருவும்பொழுதுதிருவிசைப்பாவமுத்துந்திறமுமொற்றியூ
ரருளின்றிறத்தாற்சிவலிங்கமானவாறும்பூம்புகார்
விரவுங்குலத்தாரறிந்தோகை வெள்ளத்தழுந்தாமிதந்தெழுந்தார்.

அழுவார்தொழுவார்சென்னியின்மேலங்கைத்தலவஞ்சலி மு
கிழ்ப்பார், வழுவாநமதுகுலத்தெய்வம்வருமோகாணவினியென்பா
ர், முழுவாண்மதியிங் கெழுந்தருளப்பெறு மோவென்னமொழிகி
ன்றார், பொழுதோடிவண்விட் டவ்விடம்போய்ப்பணிவோமென்
பார்புண்ணியரோ. (௧௱௭)

சொன்னவண்ணங்கிளைகளொடுந்துழனியார்ப்பவப்பதியோ
ரன்னபெரியோர்போனநெறியவனிதலமேற்பலர்படர்வா
ரின்னவாற்முலொற்றியூரிடத்திலடைந்தார்சிவபெருமான்
றன்னைப்பணிந்திச்சிவபெருமான்றனையும்பணியாநிற்கின்முர்.

போற்றிபோற்றிநின்னிரண்டுபூமென்கமலபதம்போற்றி
தேற்றமருவும்பரநாதச்சிலம்புபோற்றிநலம்பயிலன்
பேற்றவரியபுலியதளின்மருங்குல்போற்றிநெருங்கரவந்
தோற்றுமுதரபந்தமுந்திச்சுழியும்போற்றியெழில்போற்றி. ()

புரிநூன்மார்பும்வெண்ணீறும்புயமீரைந்தும்புடைபோற்றி
வரியாரரவம்வச்சிரம்வாண்மழுவோடபயம்வலம்போற்றி
யரவார்பாசக்கயிறுமணியனலங்குசத்தோளிடம்போற்றி
கரவாதிருக்குந்திருநீலகண்டம்போற்றியொளிபோற்றி(௧௬0)

நடுவுகுணபாற்றென்றிக்குநடக்கும்வடக்குக்கிழக்கிவற்றி
னடைவுபடிகம்பொன்கருமையாத்தம்பாலாமுகம்போற்றி
முடிவிலாதமுகங்கடொறுமுக்கட்கமலபதம்போற்றி
சடையுமுடியும்பொன்னிதழித்தாமத்தொடையுந்தனிபோற்றி.

சிவமொன்முயச்சதாசிவமைந்தாகித்தெளிவுகூர்வோர்க்குப்
பவமாற்றவருமகேசமெனப்பரவுமுருவத்தைந்தாகி
யவமாற்றியமெய்க்கடவுளுடனுரும்பொருளேயடிபோற்றி
கவலாதெம்மைக்காக்கவருங்கருணாநிதியேயடிபோற்றி(௧௬௨)

என்றுபோற்றிமாபூசையியற்றிப்பணிகள்பலபுரிந்து
மன்றல்கமழுமவ்வூரில்வசித்தார்சிலவரிவர்க்காக
நன்றிபெருகுமிஞ்சியிசைநகரமதனினிதமர்ந்தார்
குன்முச்செல்வமிருமைக்கும்பெற்முர்சற்றுங்குறைவிலரோ. ()

அருளுமிலிங்கமானவன்பர்தங்காதைகேட்போர்க்
கிருளாறுஞ்செல்வமல்குமென்றுநன்னலங்கணண்ணும்
பெருமையுமறிவுமென்றும்பிறங்கியகதியுமாகுந்
திருமகள்கலைமகள்கைசேர்வதுந்திண்ணமாமே. (௧௬௪)

பட்டணத்துப்பிள்ளையார் புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

## திருச்சிற்றம்பலம்.

பதினொன்றாந்திருமுறையுள்

திருவெண்காடரென்னும்

பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

முதலாவது

# கோயில் நான்மணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

வெண்பா.

பூமேலயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம் - பாமேவு
மேத்து கந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்து கந்தான் கொற்றக் குடை. (௧)

(கலித்துறை.)

குடைகொண்டிவ் வையமெலாங் குளிர்வித்தெரிபொற்றிகிரிப் படைகொண்டிகறெறும் பார்த்திவராவதிற் பைம்பொற் கொன்றைத், தொடைகொண்டவார்சடை யம்பலத்தான்றொண்டர்க் கேவல் செய்து, கடைகொண்டபிச்சைகொண் டுண்டிங்குவாழ்தல் களிப்புடைத்தே. (௨)

(கழிநெடில்விருத்தம்.)

களிவந்தமுதூறிக் கன்மனத்தை யெல்லாங்
கசியும்படிசெய்துகண்டறிவாரில்லா
வெளிவந்தடியேன்மனம்புகுந்ததென்றால்
விரிசடையும்வெண்ணீறுஞ் செவ்வானமென்ன
வொளிவந்தபொன்னிறமுந்தொன்னடமுங்காட்டு
முடையானுயர்தில்லையம்பலமொன்றல்லா
லெளிவந்தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப்பொய்கொண்
டிடைமிடைந்தபுன்மொழியா லிச்சையுரையோமே. (௩)

(இணைக்குறளாசிரியப்பா.)

உரையின்வரையும்பொருளினளவு
மிருவகைப்பட்டவெல்லையுங்கடந்து
தம்மைமறந்துநின்னைநினைப்பவர்
செம்மைமனத்தினுந்தில்லைமன்றினுங்

மாடமம்பலவாணநீடு
குன்றக்கோமான்றன்றிருப்பாவையை
நீலமேனிமாதிருத்தங்கையைத்
திருமணம்புணர்ந்தருளான்றுபெருமநின்
ருதவிழ்கொன்றைத்தாருமேதமில்
வீரவெள்விடைக்கொடியும்போரிற்
றழங்குந்தமருகப் பறையுமுழங்கொலித்
தெய்வக்கங்கையாறும்பொய்தீர்
* விரையாக்கலியெனுமாணையுநிரைநிரை
யாயிரம்வகுத்தமாயிருமருப்பின்
வெண்ணிறச்செங்கண்வேழமும்பண்ணியல்
வைதிகப்புரவியும்வானநாடு
மையறுகனகமேருமால்வரையுஞ்
செய்வயற்றில்லையாகியதொல்பெரும்
பதியுமென்
ருெருபதினுயிரந்திருநெடுநாமமு
முரிமையிற்பாடித்திருமணப்பந்தரு
ளமரர்முன்புகுந்தறுகுசாத்திநின்
றமர்பெயரொழுதியவரிநெடும்புத்தகத்
தென்னையுமெழுதவேண்டுவனின்னரு
ளாணைவைப்பிற்காளைவணுவும்
வானுறநிமிர்ந்துகாட்டுங்
கானில்வானுளம்புங்கருடனுதலினே.

(வெண்பா.)

ஆதரித்தமாலுமறிந்திலனென்றஃதறிந்தே
காதலித்தநாயேற்குங்காட்டுமே - போதகத்தோற்
கம்பலத்தானீணுகங்கணத்தான்றெண்புலியூ
ரம்பலத்தான்செம்பொனடி. ((௫))

(கலித்துறை.)

அடியொன்றுபாதலமேழிற்குமப்புறம்பட்டதின்பான்
முடியொன்றிவ்வண்டங்களெல்லாங்கடந்தநுமுற்றும்வெள்ளைப்
பொடியொன்றுதோளெட்டுத்திக்கின்புறத்தனபூங்கரும்பின்
செடியொன்றுதில்லைச்சிற்றம்பலத்தான்றன்றிருநடமே. (௬)

---

* கலியென்பதனை விகுதிகுன்றிய முதனிலைத்தொழிற்பெயராக்கிப் பொய்தீர்விரையாக்கலியென்பதனுக்கு வேதம், என்றுபொருள்கொள்க. அதுவேயவனதாணையாதலை "வேதந்தானேநமதாணைச்சத்திவடிவாய்,, என்னும்புராணக்கூற்றானுமுணர்க. இதனுக்குச்சத்தியமென பொருள்கூறுவாருமுளர்.

(கழிநெடில்விருத்தம்.)

நடமாடியேழுலகுமுய்யக்கொண்ட
நாயகரோநான்மறையோர்தங்களோடுந்
திடமாடமதிட்டில்லைக்கோயில்கொண்ட
செல்வரோயுமதருமைதேராவிட்ட
ரிடமாடியிருந்தவளும் வில்க்காவிட்டா
லென்போல்வார்க்குடனிற்கவியல்வதன்று
தடமாலைமுடிசாய்த்துப்பணிந்தவானோர்
* தஞ்சுண்டாயங்கருதீநஞ்சுண்டோ. (எ)

(நேரிசையாசிரியப்பா.)

நஞ்சுமிழ்பகுவாய்வெஞ்சினமாசுணந்
தன்முதன்முருக்கநென்முதற்சூழ்ந்த
நீர்ச்சிறுபாம்புதன்வாய்க்கெதிர்வந்த
தேரையைவவ்வியாங்கியான்முன்
கருவிடைவந்தவொருநாட்டொடங்கி
மறவாமறலிமுறைபிறழ்பேழ்வா
யயிற்றலையன்னவெயிற்றிடைக்கிடந்தாங்
கருணனியின்றியொருவயிரோம்பற்குப்
பல்லுயிர்செகுத்துவல்லிதினருந்தி
யயர்த்தனனிருந்தும்போலும்பெயர்த்துநின்
றெண்டோள்வீசிக்கண்டோருருகத்
தொல்லெயிலுடுத்ததில்லைமூதூ
ராடுமம்பலக்கூத்தனைப்
பாடுதல்பரவுதல்பணிதலோவிலமே. (அ)

(வெண்பா.)

இலவிதழ்வாய்வீழ்வாரிகழ்வாரவர்தங்
கலவிகடைக்கணித்துங்காணே - னிலகுமொளி
யாடகஞ்சேரம்பலத்தேயாளுடையார்நின்றாடு
நாடகங்கண்டன்பானநான். (கூ)

(கலித்துறை.)

நானேபிறந்துபயன்படைத்தேனயனாரணனெங்
கோனேயெனத்தில்லையம்பலத்தேநின்றுகூத்துகந்த

---

* தஞ்சமெனற்பாலது - தஞ்செனக்குறைந்துநின்றது.

தேனே திருவுள்ளமாகியென்றீமையெல்லாமறுத்துத்
தானேபுகுந்தடியேன்மனத்தேவந்துசந்திக்கவே. (௧௦)

(கழிநெடில்விருத்தம்.)

சந்துபுனையவெதும்பிமலரணைதங்கவெருவியிலங்குகலையொடு
சங்குகழலநிறைந்தவயலவர்தஞ்சொனலியமெலிந்துகிளியொடு
பந்துகழல்கண்மறந்துதளிர்புரைபண்டைநிறமுமிழந்துநிறையொடு
பண்புதவிரவனங்கனவனொடுநண்புபெருகவிளைந்தவினையன
நந்திமுழவுதழங்கமலைபெறுநங்கைமகிழவணிந்தவரவுக
ணஞ்சுபிழியமுரன்றுமுயலகனொந்துநரலவலைந்தபகிரதி
யந்திமதியொடணிந்துதிலைநகரம்பொனணியுமரங்கினடநவி [மே.
லங்கணரசையடைந்துதொழுதிவளன்றுமுதலெதிரின்றுவளையு

(நிலமண்டிலவாசிரியப்பா.)

வரையொன்றுநிறுவியரவொன்றுபிணித்துக்
கடறடவாகமிடலொடும்வாங்கித்
திண்டோளாண்டதண்டாவமரர்க்
கமிர்துணவளித்தமுதுபெருங்கடவுள்
கடையுகஞ்சென்ற காலத்துநெடுநில
மாழிப்பரப்பிலாழ்வதுபொருஅ
தஞ்சேலென்றுசெஞ்சேலாகித்தன்
றெய்வவுதரத்துச்சிறுசெலுப்புரையிற்
பௌவமேழுபட்டதுபௌவத்தோ
டுலகுகுழைத்தொருநாளுண்டது
முலகமூன்றுமளந்துழியாங்கவ
னீரடிநிரம்பிற்றுமிலவேதேரி
னுரைப்போர்க்கல்லதவுன்குறைவின்றே
யினையனாகியதனிமுதல்வானவன்
கேழற்றிருவுருவாகியாழத்
தடுக்கியவேழுமெடுத்தனனெடுத்தெடுத்
தூழியூழிகீழுறக்கிளைந்துங்
காண்பதற்கரியநின்கழலும்வேண்டுபு
நிகிலலோகமுநெடுமறைத்தொகுதியு
மகிலசராசரமனைத்துமுதவிய
பொன்னிறக்கடவுளன்னமாகிக்

காண்டிலாதநின்கதிர்நெடுமுடியு
மீங்கிவைகொண்டுநீங்காதுவிரும்பிச்
சிறியபொதுவின்மருவின்றிவிளங்கி
யேவருங்காணவாடுதியதுவெனக்
கதிசயம்விளைக்குமன்றேயதிசயம்
விளையாதுமொழிந்ததெற்றைவளையாது
கல்லினும்வலிததுநல்லிதிற்செல்லாது
தான்சிறிதாயினுமுள்ளிடைநிரம்ப
வான்பொயச்சமாயாவாசை
மிடைந்தனகிடப்பவிடம்பெறலருமையி
லைவர்கள்வர்வல்லிதிற்புகுந்து
மண்மகன்றிகிரியிலெண்மடங்குசுழற்ற
வாடுபுகிடந்தபீடினெஞ்சத்து
நுழைந்தனைபுகுந்து தழைந்தநின்சடையுஞ்
செய்யவாயுமையமர்கண்டமு
நெற்றியிற்றிகழ்ந்தவொற்றைநாட்டமு
மெடுத்தபாதமுந்தடுத்தசெங்கையும்
புள்ளியாடையுமொள்ளிதின்விளங்க
நாடகமாடுதிநம்பகூடும்
வேதநான்கும்விழுப்பெருமுனிவரு
மாதிநின்றிறமாதலின்மொழிவது
பெரியதிற்பெரியையென்றுமன்றே
சிறியதிற்சிறியையென்றுமன்றே
நிறைபொருண்மறைகணான்குநின்னறைகழ
லிரண்டொடுமறிவினிலார்த்துவைத்த
மறையவர்தில்லைமன்றுள்கிழவோனே. (௧௨)

(வெண்பா.)

கிழவருமாய்நோய்மூப்புக்கீழ்ப்பட்டுக்காமத்
துழவரும்போயோயுமாகண்டோ - மொழிதெரிய
வாயினாலிப்போதேமன்றினடமாடு
நாயனாஒன்றுரைப்போநாம். (௧௩)

(கலித்துறை.)

நாமத்தினாலென் றனாத்திருத்தேனறைமாமலர்சேர்
தாமத்தினாலுன்சரண்பணியேன்சார்வதென்கொடுநான்

வாமத்திலேயொருமானைத்தரித்தொருமானைவைத்தாய்
சேமத்தினுனுன்றிருத்தில்லைசேர்வதோர்செந்நெறியே. (கச)

(கழிநெடில்விருத்தம்.)

நெறிதருகுழலையறலென்பர்க ணிழலெழுமதியநுதலென்பர்க
ணிலவினும்வெளிதுநகையென்பர்கணிறம்வருகலசமுலையென்பர்
ளறிகுவதரிதிவிடையென்பர்க ளடியிணைகமலமலரொன்பர்க [க
ளவயவமிணையமடமங்கைய ரழகியரமையுமவரொன்செய
மறிமழுவுடையகரனென்கிலர் மறலியைமுனியுமரனென்கிலர்
மதிபொதிசடிலதரனென்கிலர் மலைமகண்மருவுபுயனென்கிலர்
செறிபொழினிலவுதில்லையென்கிலர் திருநடநவிலுமிறையென்கிலர்
சிவகதியருளுமரசென்கிலர் சிலர்நரகுறுவரறிவின்றியே. (கரு)

(நேரிசையாசிரியப்பா.)

அறிவிலொழுக்கமும் பிறிதுபடுபொய்யுங்
கடும்பிணித்தொகையு மிடும்பையீட்டமு
மினையனபலசரக்கேற்றிவினையெனுந்
தொன்மீகாமனுய்ப்பவந்நிலைக்
கருவெனுநெடுநகரொருதுறைநீத்தத்துப்
புலனெனுங்கோண்மீனலமந்துதொடரப்
பிறப்பெனும் பெருங்கடலுறப்புகுந்தலைக்குந்
துயர்த்திரையுவட்டிற்பெயர்ப்பிட மயர்த்துக்
குடும்பமென்னுநெடுங்கல்வீழ்த்து
நிறையெனுங்கூம்பு முரிந்துகுறையா
வுணர்வெனுநெடும்பாய் கிறிப்புணரு
மாயப்பெயர்ப்படுகாயச்சிறைக்கலங்
கலங்குபுகவிழாமுன்னமலங்கன்
மதியுடனணிந்தபொதியவிழ்சடிலத்துப்
பையரவணிந்ததெய்வநாயக
தொல்லெயிலுடுத்ததில்லைகாவல
வம்பலர்தும்பையம்பலவாணநின்
னருளெனுநலத்தார்பூட்டித்
திருவடிநெடுங்கரைசேர்த்துமா செய்யே. (கசா)

(வெண்பா.)

செய்யதிருமேனிச்சிற்றம்பலவருக்கென்
றையல்வளைகொடுத்தல்சாலுமே - யையன்றோர்

சேயேவருமளவிற் சிந்தாதமாத்திரமே
தாயேநமதுகையிற்சங்கு. (கஎ)

(கலித்துறை.)

சங்கிடத்தானிடத் தான்றனதாகச் சமைந்தொருத்தி
யங்கிடத்தாடில்லையம்பலக்கூத்தற்கவிர்சடைமேற்
கொங்கிடத்தார்மலர்க்கொன்றையென்றுயெங்கைநீயுமொரு
பங்கிடத்தான்வல்லையேலில்லையேயுன்பசப்பொழியே. (கஅ)

(கழிநெடில்விருத்தம்.)

ஒழிந்ததெங்களூற வென்கொலோவெரியிலொன்னலார்கள் புரமுன்றொர்நாள், விழுந்தெரிந்துநுகளாகவென்றிசெய்த வில்லிதில்லைநகர்போலியார், சுழிந்தவுந்தியி லழுந்திமேகலை தொடக்கநின்றவர்நடக்கநோக், தழிந்தசிந்தையினும் வந்ததாகிலுமொர்சிந்தையாயொழிவதல்லவே. (கக)

(நேரிசையாசிரியப்பா.)

அல்லல்வாழ்க்கை வல்லிதிற்செலுத்தற்குக்
கைத்தேருழந்துகார்வருமென்று
வித்துவிதைத்தும் விண்பார்த்திருந்துங்
கிளையுடன்றவிரப்பொருளுடன்கொண்டு
முளைமுதிர்பருவத்துப் பதியெனவழங்கியு
மருளாவயவரம்பிடைநடந்து
மிருளுறுபவ்வத்தெந்திரங்கடாஅய்த்
துன்றுதிரைப்பரப்பிற்குன்றுபார்த்தியங்கியு
மாற்றல்வேந்தற்குச்சோற்றுக்கடன்பூண்டுந்
தாளுழந்தோடியும் வாளுழந்துண்டு
மறியாவொருவனைச்செறிவந்துதெருட்டியுஞ்
சொற்பலபுனைந்துங்கற்றனகழறியுங்
குடும்பப்பாச நெடுந்தொடர்ப் பூட்டி
யையவரைந்திடத்திர்ப்பநொய்திற்
பிறந்தாங்கிறந்து மிறந்தாங்குபிறந்துங்
கணத்திடைத்தோன்றிக் கணத்திடைக்கரக்குங்
கொப்புட்செய்கையொப்பின்மின்போ
லுலப்பில்யோனிக்கலக்கத்துமயங்கியு
நெய்யெரிவுளர்த்துப்பெய்முகில்பெயறருந்

தெய்வவேதியர்தில்லைமூதூ
ராடகப்பொதுவினாடகநவிற்றுங்
கடவுட்கண்ணுதனடமுயன்றெடுத்த
பாதப்போதும்பாய்புலிப்பட்டு
மீதியாத்தசைத்தவெள்ளெயிற்றரவுஞ்
சேயுயரகலத் தாயிரங்குடுமி
மணிகிடந் திமைக்குமொருபேராரமு
மருள்பொதிந்தலர்ந்ததிருவாய்மலரு
நெற்றியிற்றிகழ்ந்தவொற்றைநாட்டமுங்
கங்கைவழங்குந்திங்கள்வேணியுங்
கண்ணிடைப்பொறித்து மனத்திடையழுத்தியாங்
குண்மகிழ்ந்துறைக்கவுறுதவஞ்செய்தன
னான்முகன்பதத்தின் மேனிகழ்பதந்தா
னுறுதற்கரியதுமுண்டோ
பெறுதற்கரியதோர் பேறுபெற்றேற்கே. (உ0)

(வெண்பா.)

பெற்றோர்பிடிக்கப்பிழைத்துச்செவிலியர்கள்
சுற்றோடவோடித்தொழாநிற்கு—மொற்றைக்கைம்
மாமறுகச்சீறியசிற்றம்பலத்தான்மான்றேர்போங்
கோமறுகிற்பேதைக்குழாம். (உக)

(கலித்துறை.)

பேதையெங்கேயினித்தேறியுய்வாள்பிரமன்றனக்குத்
தாதைதன்றாதையென்றேத்தும்பிரான்றண் புலிசைப்பிரான்
* கோதையந்தாமத்தன்கொன்றைகொடானின்றுகொல்லவெண்ணி
யூதையுங்காருந்துளியொடுங்கூடியுலாவியவே. (உஉ)

(கழிநெடில்விருத்தம்.)

உலவுசலதிவாழ்விடமமரர்தொழவுண்டவெனை
யுகருமொருவருமழியினிறுதி யொருவராமழிய
புலவுகமழ் 0 கரோடிகையுடையபுனிதர்பூசுரர்
புலிசையலர்செய்போதணி பொழிலினிழலின்வாழ்வதோர்
கலவமயிலனார்சுருள்கரியகுழலினார்குயில்
கருதுமொழியினார்கடைநெடியவிழியினாரித
ழிலவிலழகியாரிடைகொடியின்வடிவினார்வடி
வெழுதுமருமையாரொன திதயமுழுதுமாள்வரோ. (உங)

* கோதையந்தாமத்தண் கொன்றையென்பதூஉம்பாடம்.
0 கரோடிகை-எ-து-தலைமாலை.

(இணைக்குறளாசிரியப்பா.)

ஆளெனப்புதிதின்வந்தடைந்திலமத்தநின்
ருளினேவறலையினியற்றி
வழிவழிவந்தமரபினமொழிவது
ஐந்தெழுத்தவையெஞ்சிந்தையிற்கிடத்தி
நனவேபோலநாடொறும்பழகிக்
கனவிலுநவிற்றுங் காதலேம்வினைகெடக்
கேட்பதுநின்பெருங்கீர்த்திமீட்பது
நின்னெறியல்லாப் புன்னெறிபடர்ந்த
மதியினெஞ்சத்தை வரைந்துநிதியென
வருத்திசெய்திடுவ துருத்திரசாதனங்
காலையுமாலையுங்கால்பெயர்த்திடுவதுன்
னாலயம்வலம்வருதற்கேசால்பினிற்
கைகொடுகுயிற் றுவதையநின்னது
கோயிற்பல்பணி குறித்தேயோயா
துருகிநின்னினைந் தருவிசோரக்
கண்ணிற்காண்பதெவ் வுலகினுங்காண்பன
வெல்லா
நீயேயாகிநின்றதோர்நிலையே
நாயேன்
றலைகொடுசார்வதுன்சரண்வழியல்லா
லலைகடல்பிறழினுமடாதேயதனாற்
பொய்த்தவவேடர்கைத்தகப்படுத்தற்கு
வஞ்சச்சொல்லின்வார்வலைபோக்கிச்
சமயப்படுகுழிசமைத்தாங்கமைவயின்
மானிடமாக்களைவலியப்புகுத்து
மாறுவிரதத்தகப்படுத்தாழ்த்து
வளைவுணர்வெனக்குவருமோவளர்தரு
நுரையுந்திரையு * நொப்புறுகொட்பும்
வரையில்சீகர வாரியுங்குரைகடற்
பெருக்குஞ்சிறுக்கும் பிறங்குவதோன்றி
யெண்ணிலவாகி யிருங்கடலடங்குந்
தன்மைபோலச்சராசரமனைத்து
நின்னிடைத்தோன்றி நின்னிடையடங்குநீ

* நொப்பு - எ-து - தடை.

யொன்றினுந்தோன்ருயொன்றினுமடங்காய்
வானோர்க்கரியாய்மறைகளுக்கெட்டாய்
நான்மறையாளர் நடுவுள்புக்கடங்கிச்
செம்பொற்றில்லைமூதா
ரம்பலத்தாடு மும்பர்நாயகனே. (உச)

(வெண்பா.)

நாயனையவென்னைப்பொருட்படுத்திநன் களித்துத்
தாயனையனுயருளுந்தம்பிரான்—றூயவிரை
மென்றுழாய்மாலொடயன்றேடவியன் றில்லை
மன்றுளேயாடுமணி. (உரு)

(கலித்துறை.)

மணிவாய்முகிழ்ப்பத்திருமுகம்வேர்ப்பவம்மன்றுக்கெல்லா
மணியாயருணடமாடும்பிரானையடைந்துருகிப்
பணியாய்புலன்வழிபோநெஞ்சமேயினிப்பையப்பையப்
பிணியாய்க்கடைவழிசாதியெல்லோரும்பிணமென்னவே. (உசா)

(கழிநெடில்விருத்தம்.)

என்னுமினிமடவரலாய்செய்குவ தினமாய்வண்டுகண்மலர்கிண்டித், தென்னுவெனமுரல்பொழில்சூழ்தில்லையுளரனூர்திருமுடியணிதாமந், தன்னுலல்லதுதீராதென்னிடர்தகையாதுயிர்கருமுகிலேறி, மின்னுநின்றதுதுளிவாடையும்வர வீசாநின்றதுபேசாயே.(உஎ)

(இணைக்குறளாசிரியப்பா.)

பேசுவாழிபேசுவாழி
யாசையொடுமயங்கிமாசுறுமனமே
பேசுவாழிபேசுவாழி
கண்டனமறையுமுண்டனமலமாம்
பூசினமாசாம்புணர்ந்தனபிரியு
நிறைந்தனகுறையு முயர்ந்தனபணியும்
பிறந்தனவிறக்கும்பெரியனசிறுக்கு
மொன்றொன்றொருவழிநில்லாவன்றியுஞ்
செல்வமொடுபிறந்தோர் தேசொடுதிகழ்ந்தோர்
கல்வியிற்சிறந்தோர் கடுந்திறன்மிகுந்தோர்
கொடையிற்பொலிந்தோர படையிற்பயின்றோர்
குலத்தினுயர்ந்தோர் நலத்தினின்வந்தோ
ரெனையரொங்குலத்தின ரிறந்தோரனையவர்

பேருநின்றிலபோலுந்தேரி
னீயுமஃதறிதியன்றேமாயப்
பேய்த்தேர்போன்றுநீப்பருமுறக்கத்துக்
கனவேபோன்றுநனவுபெயர்பெற்ற
மாயவாழ்க்கையைமதித்துக்காயத்தைக்
கல்லினும்வலிதாக் கருதிப்பொல்லாத்
தன்மையரிழிவுசார்ந்தனைநீயு
நன்மையிற்றிரிந்த புன்மையையாதலி
னழுக்குடைப்புலன்வழி யிழுக்கத்திடைமுகி
வளைவாய்த்தூண்டிலி னுள்ளிரைவிழுங்கும்
பன்மீன்போலவு
மின்னுபுவிளக்கத்துவிட்டில்போலவு
மாசையாம்பரிசத் தியானைபோலவு
மோசையின்விளிந்த புள்ளுப்போலவும்
வீசியமணத்தின் வண்டுபோலவு
முறுவதுணராச் செறுவுழிச்சேர்ந்தனை
நுண்ணூனூற்றுத்தன்னகப்படுக்கு
மறிவில்கீடத்து நுந்துழிபோல
வாசைச்சங்கிலிப் பாசத்தொடர்ப்பட்
டிடர்கெழுமனத்திறே டியற்றுவதறியாது
குடர்கெழுசிறையறைக் குறங்குபுகிடத்தி
கறவைநினைந்த கன்றெனவிரங்கி
மறவாமனத்து மாசறுமடியார்க்
கருள்சுரந்தளிக்கு மற்புதக்கூத்தனை
மறையவர்தில்லை மன்றுளாடு
மிறையவனென்கிலை யென்னினைந்தனையே. (உ௦)

(வெண்பா.)

நினையார்மெலியார்நிறையழியார்வாளாப்
புனைவார்க்குக்கொன்றைபொதுவோ-வனைவீரு
மெச்சியேகாணவியன்றில்லையானருளென்
பிச்சியேநாளைப்பெறும். (உக)

(கலித்துறை.)

பெறுகின்றவெண்ணிலிதாயரும்பேறுறும்யானுமென்னை
யுறுகின்றதுன்பங்களாயிரகோடியுமோய்வொடுஞ்சென்

றிறுகின்றநாள்களுமாகிக்கிடந்தவிடுக்கணெல்லா
மறுகின்றன தில்லையாளுடையான்செம்பொனம்பலத்தே. (௩௰)

(கழிநெடில்விருத்தம்.)

அம்பலவரங்கணரடைந்தவர்தமக்கே
யன்புடையரொன்னுமிதெனுனையயுரித்துக்
ம்பலமுவந்தருளுவீர்மதனன்வேவக்
கண்டருளுவீர்பெரியகாதலறியாதே
வம்பலர்நிறைந்துவசை பேசவொருமாடே
வாடையுயிரீரமணிமாமையுமிழந்தென்
கொம்பலமருந்தகமைகண்டுதகவின்றிக்
கொன்றையருளீர்கொடியிரொன்றருளுவீரோ. (௩௧)

(இணைக்குறளாசிரியப்பா.)

அருளுவாழியருளுவாழி
புரிசடைக்கடவுளருளுவாழி
தோன்றுழித்தோன்றிநிலைதவக்கறங்கும்
புற்புதச்செவ்வியின்மக்களியாக்கைக்கு
நினைப்பினுங்கடிதே யிளமைநீக்க
மதனினுங்கடிதேமூப்பின்முடிச்சி
யதனினுங்கடிதேகதுமெனமரணம்
* வாணாள்பருகியுடம்பைவறிதாக்கி
நாணாள்பயின்றநல்காக்கூற்ற
மினையதன்மையதிதுவேயிதனை
யெனதெனக்கருதியிதற்கென்றுதொடங்கிச்
செய்தனசிலவேசெய்வனசிலவே
செய்யாநிற்பனசிலவேயவற்றிடை
நன்றென்பசிலவேதீதென்பசிலவே
யொன்றினும்படாதனசிலவேயென்றிவை
கணத்திடைநினைந்துகளிப்பவுங்கலுழ்பவுங்
கணக்கில்கோடித்தொகுதியவைதா
மொன்றொன்றுணர்வுழிவருமோவனைத்து
மொன்றாவுணர்வுழிவருமோவென்றொன்று
தெளிவுழித்தேறல்செல்லேமளிய
மனத்தின்செய்கைமற்றிதுவேநீயே
யரியைசாலவெம்பெருமதெரிவுறி

* வாழ்நாள் - வாணாளெனமரீஇயது.

துண்டாய்த்தோன்றுவயாவையுநீயே
கண்டனையவைநினைக்காணுவதுதா
னின்வயின்மறைத்தோயல்லையுன்னை
மாயாய்மன்னினைநீயேவாழி
மன்னியுஞ்சிறுமையிற்கரந்தோயல்லை
பெருமையிற்பெரியோய்பெயர்த்துநீயே
பெருகியுஞ்சேணிடைநின்றோயல்லை
தேர்வோர்க்குத்தம்மினுமணியைநீயே
நண்ணியுமிடையொன்றின்மறைந்தோயல்லை
யிடையிட்டுநின்னைமறைப்பதுமில்லை
மறைப்பினுமதுவு
நீயேயாகிநின்றதோர்நிலையே
அஃதான்று
நினைப்பருங்காட்சிநின்னிலையிதுவே
நினைப்புறுங்காட்சியென்னிலையதுவே
யினிநனியிரப்பதொன்றுடையமனமருண்டு
புன்மையினினைத்துப்புலன்வழிபடரினு
நின்வயினினைந்தேமாகுதனின்வயி
னினைக்குமாநினைக்கப்பெறுதலனைத்தொன்று
நீயேயருளல்வேண்டும்வேய்முதிர்
கயிலைபுல்லெனவெறிவிசும்புவறிதாக
விம்பருய்யவம்பலம்பொலியத்
திருவளர்தில்லைமூதூ
ரருநடங்குயிற்றுமாதிவானவனே. (௩௨)

(வெண்பா.)

வானோர்பணியமணியாசனத்திருக்கு
மானதசெல்வத்தரசன்றே—மானுகம்
பந்திப்பார்நின்றடும்பைம்பொன்னினம்பலத்தே
வந்திப்பார்வேண்டாதவாழ்வு. (௩௩)

(கலித்துறை.)

வாழ்வாகவுந்தங்கள்வைப்பாகவுமறையோர்வணங்க
வாள்வாய்திருத்தில்லையம்பலத்தாயுன்னையன்றியொன்றைத்
தாழ்வாரொறிவார்கடனஞ்சையுண்டிலையாகிலன்றே
மாள்வார்சிலரையன்றோதெய்வமாகவணங்குவதே. (௩௪)

(கழிநெடில்விருத்தம்.)

வணங்குமிடையீர்வறிதுவல்லியிடையாண்மேன்
மாரசரமாரிபொழியப்பெறுமனத்தோ
டிணங்கியிவடானுமெலியப்பெறுமிடர்க்கே
பூதையெரிதூவியுலவப்பெறுமடுத்தே
பிணங்கியரவோடுசடையாடநடமாடும்
பித்தனெனவும்மிதயமித்தனெயுமோரீ
ரிணங்குவெறியாடுமறியாடுமதுவீரு
மையலையுமல்லலையுமல்லதறியீரோ. (௩௯)

(நேரிசையாசிரியப்பா.)

ஈரவேரித்தார் வழங்குசடிலத்துக்
குதிகொள்கங்கைமதியின்மீதசைய
வண்டியங்குவளைப்பிணெண்டோட்செல்வ
வொருபாற்றேடுமொருபாற்குழையு
மிருபாற்பட்ட மேனியெந்தை
யொல்லொலிப்பழனத் தில்லைமூதூ
ராடகப்பொதுவி னடகநவிற்று
மிமையாநாட்டத் தொருபெருங்கடவுள்
வானவர்வணங்குந் தாதையானே
மதுமழைபொழியும் புதுமந்தாரத்துத்
தேனியங்கொருசிறைக்கானகத்தியற்றிய
தெய்வமண்டபத் தைவகையமளிச்
சிங்கஞ்சுமப்ப வேறிமங்கைய
ரிமையாநாட்டத் தமையாநோக்கத்
தம்மார்புபருகச் செம்மாந்திருக்கு
மானுச்செல்வத்து வானோரின்ப
மதுவேயெய்தினுமெய்துககதுமெனத்
தெறுசொலாளருறுசினந்திருகி
யெற்றியுமீர்த்துங் குற்றங்கொளீஇ
யீர்ந்தும்போழ்ந்துமெற்றுபுகுடைந்தும்
வார்ந்துங்குறைத்து மதநாய்க்கீந்துஞ்
செக்குரற்பெய்துந் தீநீர்வாக்கியும்
புழுக்குடையழுவத் தழுக்கியல்சேற்றுப்
பன்னெடுங்கால மழுத்தியின்று
வளர்யிறண்டத்து மாருக்கடுந்துயர்
விளையஞ்சேரினுஞ் சேர்கவுளாயிடை

யேறொன்னையாளுதுவிரும்பி
நல்லனெனினு மென்கவவரோ
யல்லனெனினு மென்கணில்லா
திருவொடுதிளைத்துப் பெருவளஞ்சிதையா
இன்பத்தழுந்தினு மழுந்துகவல்லாத்
துன்பந்துதையினுந் துதைகமுன்பி
லிளமையொடுபழகிக் கழிமூப்புக்குறுகா
தென்றுமிருக்கினு மிருக்கவன்றி
யின்றேயிறக்கினு மிறக்கவொன்றினும்
வேண்டலுமிலனே வெறுத்தலுமிலனே
யாண்டகைக்குரிசினின் னடியரொடுங்குழுமித்
தெய்வக்கூத்தநின் செய்யபாதமு
மடையவுமணுகவும்பெற்ற
கிடையாச்செல்வங் கிடைத்தலானே. (௧௬)

(வெண்பா.)

ஆனேறேபோந்தாலழிவுண்டேயன்புடைய
நானேதான்வாழ்ந்திடினுநன்றன்றே—வானோங்கு
மாமாண்பொழிற்றில்லைமன்றைப்பொலிவித்த
கோமானையித்தெருவேகொண்டு. (௧௭)

(கலித்துறை.)

கொண்டல்வண்ணத்தவனான்முகனிந்திரன்கோமகுடத்
தண்டர்மிண்டித்தொழுமம்பலக்கூத்தனுக்கன்புசெய்யா
மிண்டர்மிண்டித்திரிவாரெனக்கென்னினிநானவன்றன்
றொண்டர்தொண்டர்க்குத்தொழும்பாய்த்திரியத்தொடங்கினனே()

(கழிநெடில்விருத்தம்.)

தொடரநகைத்தங்கமுன்புளவாயின
  தொழில்கண்மறுத்தொன்றுமொன்றியிடாதொரு
  சுளிவுதலைக்கொண்டுபுன்புலைவாரிக
  டிளை யொழுகக்கண்டுசிந்தனையோய்வொடு
நடைகெடமுற்கொண்டபெண்டிர்பொருவொரு
  கடலைநமக்கென்று வந்தனபேசிட
  நலியிரு மற்கஞ்சியுண்டிவெருவிழு
  கரகவுடற்கன்புகொண்டலைவேனினி
மிடலொடியப்பண்டி லங்கையர்கோனொரு
  விரலினழுக்குண்டுபண்பலபாடிய

விரகுசெவிக்கொண்டுமுன்புளதாகிய
வெகுளிதவிர்த்தன்றுபொன்றியிடாவகை
திடமருள்வைக்குஞ்செழுஞ்சுடரூறிய
தெளியமுதத்தின் கொழுஞ்சுவைநீடிய
தில்லைநகரிற்செம்பொனம்பலமேவிய
சிவனைநினைக்குந்தவஞ்சதுராவதே. (௩௯)

(நேரிசையாசிரியப்பா.)

சதுர்முகன் றந்தைக்குக்கதிர்விடுகடவு
ளாழிகொடுத்தபேரருள்போற்றி
முயற்சியொடுபணிந்த வியக்கர்கோனுக்கு
மாநிதியிரண்டுமொருப்பெருவளத்
தளகையொன்றுதளர்வின்றிநிறுவிய
செல்வங்கொடுத்தசெல்வம் போற்றி
தாணிழலடைந்தமாணிக்காக
நாண்முறைபிறழாது கோண்முறைவலித்துப்
பதைத்துவருங்கூற்றைப்படிமிசைத்தெறிக்க
வுதைத்துயிரளித்தவுதவிபோற்றி
குலைகுலைகுலைந்துநிலையாத்தேவர்
படுபேரவலமிடையின்றிவிலக்கிக்
கடல்விடமருந்தினகருணைபோற்றி
தவிராச்சீற்றத் தவுணர்மூவெயி
லொல்லனல்கொளுவியொருநொடியொடிபட
வில்லொன்றுவளைத்தவீரம்போற்றி
பூமென்கரும்பொடுபொடிபடநிலத்துக்
காமனைப்பார்த்த கண்ணுதல்போற்றி
தெய்வயாளிகைமுயன்று கிழித்தெனக்
கரியொன்றுரித்த பெருவிறல்போற்றி
பண்டுபெரும்போர்ப்பார்த்தனுக்காகக்
கொண்டுநடந்தகோலம்போற்றி
விரற்பதமொன்றில் வெள்ளிமலையெடுத்த
வரக்கனைநெரித்தவாண்மைபோற்றி
விலங்கல்விண்டுவிழுந்தெனமுன்றாட்
சலந்தரற்றடிந்த தண்டம்போற்றி
தாதையையெறிந்தவேதியச்சிறுவற்குப்
பரிகலங்கொடுத்ததிருவுளம்போற்றி
நின்முதல்வழிபடத்தன்மகற்றடிந்த

தொண்டர்மனையிலுண்டல்போற்றி
வெண்ணெயுண்ணவெண்ணுபுவந்து
நந்தாவிளக்கை நந்துப் பெயர்த்து
தாவுபுல்லெலிக்குமூவுலகாள
நொய்தினிலளித்தகைவளம்போற்றி
பொங்குளையழல்வாய்ப்புகைவிழியொருதனிச்
சிங்கங்கொன்றசேவகம்போற்றி
வரிமிடற்றெறுழ்வலிமணியுகுபகுவா
யுரகம்பூண்டவொப்பனைபோற்றி
கங்கையுங்கடுக்கையுங் கலந்துழியொருபாற்
றிங்கள்சூடியசெஞ்சடைபோற்றி
கடவுளிருவரடியுமுடியுங்
காண்டல்வேண்டக்கனற்பிழம்பாகி
நீண்டுநின்ற நீளம்போற்றி
யாலம்பில்குநின் சூலம்போற்றி
கூறுதற்கரியநின்னேறுபோற்றி
யேகவெற்பன்மகிழுமகட்கிடப்
பாகங்கொடுத்தபண்புபோற்றி
தில்லைமாநகர்போற்றிதில்லையுட்
செம்பொனம்பலம்போற்றியம்பலத்
தாடுநாடகம்போற்றியென்றுங்
கென்றும்போற்றினுமென்றனக்கிறைவ
வாற்றலில்லையாயினும்
போற்றிபோற்றிநின்பொலன்பூவடிக்கே. (௪0)

திருச்சிற்றம்பலம்.

கோயில் நான்மணிமாலைமுற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பதினொன்றாந் திருமுறையுள்

திருவெண்காடனென்னும்

# பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

இரண்டாவது

திருவிடைமருதூர்

# மும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

இணைக்குறளாசிரியப்பா.

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலு மலம்பப் புனைந்து
கூற்றி னாற்றன் மாற்றிப் போற்றுநர்
வலம்புரி நெடுமா லேனமாய் நிலம்புக்
காற்றலி னகழந் தோற்றுது நிமிர்ந்து
பத்தி யடியவர் பச்சிலை யிடினு
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபாற் றிருவடி யகஞ்சேந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யிற் றோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினு நொந்து தேவர்
மடவரன் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியு மனிச்சமு மெஞ்ச வெஞ்சாத்
திருவொடும் பொலியு மொருபாற் றிருவடி
நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்க மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறுத்துப்
பொலிந்துள தொருபாற் றிருவிடை யிலங்கொளி
யாத்த வாடை விரித்து மீதுறீஇ
யிரங்குமணி மேகலை யொருங்குடன் சாத்திய
மருங்கிற் றுகு மொருபாற் றிருவிடை

செங்க ணரவும் பைங்க ணுமையுங்
கேழற் கோடும் வீழ்திர ளக்கு
நுடங்கு நூலு மிடங் கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற் பென்ன
வொளியுடன் றிகழு மொருபா லாகம்
வாரும் வடமு மேர்பெறப் புனைந்து
செஞ்சாந் தணிந்து குங்கும மெழுதிப்
பொற்றா மரையின் முற்றா முகிழென
வுலகே ழீன்று நிலையிற் றளரா
முலையுடன் பொலியு மொருபா லாக
மயில்வா யரவம் வயின்வயி னணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவுந்
தமருகப் பறையு மமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபாற் றிருக்கரஞ் செறிந்த
சூடகம் விளங்கிய வாடகக் கழங்குட
னம்மென் பந்து மம்மென் கிள்ளையுந்
தரித்தே திகழு மொருபாற் றிருக்கர
மிரவியு மெரியும் விரவிய வெம்மையி
னொருபால் விளங்குந் திருநெடு நாட்ட
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டு நீர்க் குவளையிற் குளிர்ந்து நிறம்பயின்
றெம்மனோர்க் கடுத்த மம்மர்க் கிரங்கி
யுலகேழ் புரக்கு மொருபா னாட்ட
நொச்சிப் பூவும் பச்சை மத்தமுங்
கொன்றைப் போது மென்றுணர்த் தும்பையுங்
கங்கை யாறும் பைங்கட் டலையு
மரவு மதியமும் விரவித் தொடுத்துச்
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பிற் றிரித்தனைய வுருக்கிளர் சடிலமொடு
நான்முகங் கரந்த பானிற வன்னங்
காணா வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே யொருபாற் றிருமுடி
பேணிய
கடவுட் கற்பின் மடவரன் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை

நீலக் குழன்மிசை வளைஇ மேனிவந்து
வண்டுந் தேனுங் கிண்டுபு திளைப்பத்
திருவுடன் பொலியு மொருபாற் றிருமுடி
யினைய வண்ணத்து நினைவருங் காட்சி
யிருவயி னுருவு மொரு வயிற் றாகி
வலப்பா னாட்ட மிடப்பா னோக்க
வாணுதல் பாக நாணுதல் செய்ய
வலப்பாற் றிருக்கர மிடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்
குலக மேழும் பன்முறை யீன்று
மருதிடங் கொண்ட வொருதனிக் கடவுணின்
திருவடி பரவுதும் யாமே நெடுநா
ளிறந்தும் பிறந்து மிளைத்தன மறந்துஞ்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே. (க)

## நேரிசைவெண்பா.

பொருளுங் குலனும் புகழுந் திறனு
மருளு மறிவு மனைத்து - மொருவர்
கருதாவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாவென் பார்க்கு வரும். (௨)

## கட்டளைக்கலித்துறை.

வருந்தே னிறந்தும் பிறந்து மயக்கும் புலன் வழிபோய்ப்
பொருந்தே னரகிற் புகுகின்றி லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றி லாசையின்றி
யிருந்தே னினிச்சென் றிரவே னொருவரை யாதொன்றுமே. (௩)

## நேரிசையாசிரியப்பா.

ஒன்றினோ டொன்று சென்றுமுகி றடவி
யாடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
வோவநூற் செம்மைப் பூவியல் வீதி
குயிலென மொழியு மயிலியற் சாயன்
மான்மாற விழிக்கு மானார் செல்வத்
திடைமரு திடங்கொண் டிருந்த வெந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்ற
லாரணந் தொடராப் பூரண புராண

நாரண னறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடரொளி யாதித் தனிப்பொரு
ளேக நாயக யோக நாயக
யானொன் றுணர்த்துவ துளதே யான்முன்
னனந்தலை யுலகத் தனந்த யோனியிற்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழீஇத்
தோற்றும் பொழுதி னீற்றுத் துன்பத்
தியாயுறு துயரமு மியானுறு துயரமு
மிறக்கும் பொழுதி னறப்பெருந் துன்பமு
நீயல தறிகுநர் யாரோ யதனா
லியா னினிப் பிறத்த லாற்றே னஃதான்
றுற்பவந் துடைத்த னிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியி னில்லையந் நெறிக்கு
வேண்டலும் வெறுத்தலு மாண்டொன்றிற் படரா
வுள்ளமொன் றுடைமை வேண்டு மஃதன்றி
யைம்புல னேவ லாணைவழி நின்று
தானல தொன்றைத் தானென நினையு
மிதுவென துள்ள மாதலி னிதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙன முன்னங்
கற்புணை யாகக் கடனீர் நீந்தின
ரெற்பிற ருளரோ விறைவ கற்பங்
கடத்தல் யான் பெறவும் வேண்டும் கடத்தற்கு
நினைத்தல் யான்பெறவும் வேண்டு நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டு நஞ்சுபொதி
யுறையெயிற் றுரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே. (௪)

## நேரிசைவெண்பா.

கண்ணென்று நந்தமக்கோர் காப்பென்றுங் கற்றிருக்கு
மெண்ணென்றுமூல வெழுத்தென்று—மொண்ணை
மருதவப்பா வென்றுமுனை வாழ்த்தாரோன் மற்றுங்
கருதவப்பா லுண்டோ கதி. (௫)

## கட்டளைக்கலித்துறை.

கதியா வதுபிறி தியாதொன்று மில்லைகளே பரத்தின்
பொதியா வதுசுமந் தான்விழப் போமிது போனபின்னர்

விதியா மெனச் சிலர் நோவதல் லாலிதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ லேசென்று வாழ்த்துவதே. (அ)

இணைக்குறளாசிரியப்பா.

வாழ்ந்தன மென்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்கா
துண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
யவியுடு நர்க்குச் சுவைபல பகர்ந்தே
யாரா வுண்டி யயின்றன ராகித்
தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமுங் குலனு மொழுக்கமுங் கல்வியுந்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் னின்றுதன் னேவல் கேட்குஞ்
சிறுஅர்த் தொகுதியி னுறுஅப் பேசியும்
பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்று
மெய்யு மானமு மேன்மையு மொரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய வந்திலைச்
சாவுழிச் சாஅந் தகைய ளாயினு
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோ ளொருத்தி யுண்டிவேட் டிருப்ப
வெள்ளுக் கெண்ணெய்போ லத்தள் ளாது
பொருளி னளவைக்குப் போகம்விற் றுண்ணு
மருளின் மடந்தைய ராகந் தோய்ந்து
மாற்றல் செல்லாது வேற்றோர் மனைவயிற்
கற்புடை மடந்தையர் பொற்பு நனி கேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியு
நச்சி வந்த நல்கூர் மாந்தர் தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியி
னகமலர்ந் திவார் போல முகமலர்ந்
தினிது மொழிந்தாங் குதவுத லின்றி
நாளு நாளு நாள்பல கழித்தவர்
தாளி னூற்றலுந் தவிர்த்துக் கேளிகழ்ந்
திகழும் பரமு மில்லை யென்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
யின்னி னனையதன் செல்வத்தை விரும்பித்

தன்னையு மொருவ ராக வுன்னு
மென்னையோர் வாழ்வும் வாழ்க்கையு நனைமலர்க்
கியோசனை கமழு முற்பல வாவியிற்
பாசடைப் பரப்பிற் பானிற வன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த் தொழில் புரியும் பொருகா விரியு
மருதமுஞ் சூழ்ந்த மருத வாண
சுருதியுந் தொடராச் சுருதி நாயக
பத்தருக் கெய்ப்பினில் வைப்பென வுதவு
முத்தித் தாள மூவா முதல்வ நின்
திருவடி பிடித்து வெருவால் விட்டு
மக்களு மனைவியு மொக்கலுந் திருவும் *
பொருளென நினையா துன்னரு ளினைநினைக்
கிந்திரச் செல்வமு மெட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தன னொதுங்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவண
மறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவ லோடொன் றுதவுழி யெடுத்தாங்
கிடுவோ ருளரெனி னிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி
யோவாத் தகவெனு மரிவையைத் தழீஇ
மகவெனப் பல்லுயி ரனைத்தையு மொக்கப்
பார்க்குநின்
செல்வக் கடவுட் டொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கி னுற்றநா யேற்குக்
குளப்படி நீரு மளப்பருந் தன்மைப்
பிரளயச் சலதியு மிருவகைப் பொருளு
மொப்பினு மொவ்வாத் துப்பிற் றுகளி
னின்சீ ரடியார் தஞ்சீ ரடியார்க்
கடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
காற்றலை யேவலென் றலைத்தலை யேற்றுக்
கண்டது காணி னல்லதொன்
றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே. (௭)

நேரிசைவெண்பா.

பிறிந்தே னரகம் பிறவாத வண்ண
மறிந்தே னணங்குவே ளம்பிற்—செறிந்த

பொருதவட்ட விற்பிழைத்துப் போகேதேன் புராணன்
மருதவட்டந் தன்னுளே வந்து. (அ)

## கட்டளைக்கலித்துறை.

ஊந்திக்கண்டாயடி யானைக்கண்டான்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாயரன் செம்பொற் கழறிரு மாமருதைச்
சந்திக்கண் டாயில்லை யாயினமன்றமர் தாங்கொடுபோ
யுந்திக்கண் டாய்வினை யத்துன்னை வீழ்த்தி யுழக்குவரே. (கூ)

## இணைக்குறளாசிரியப்பா.

உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ
கழப்பின் வாராக் கையறவுளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற வகழ்ந்து போக்கித் தூர்வைசெய்
தன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனு மெருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலு
மார்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்
பட்டி யஞ்சினுக் கஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை யிளந்தளிர் காட்ட வருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையி னோங்கி
மெய்ம்மயிர் புளக முகிழ்த்திட் டம்மெனக்
கண்ணீ ரரும்பிக் கடிமலர் மலர்ந்து
புண்ணிய
வஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றுந்
தோளிரு நான்குஞ் சுடர்முக மைந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
யறுசுவை யதனினு முறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருஞ்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர

வெம்மனோர்க ளினிதினி தருந்திச்
செம்மாந் திருப்பச் சிலரிதின் வாராது
மனமெனும் புனத்தை வறும் பாழாக்கிக்
காமக்காடுமூடித் தீமைசெய்
யைம்புலவேட ராறலைத்தொழுக
வின்பப் பேய்த்தே ரொட்டா தோடக்
கல்லா வுணர்வெனும் புல்வா யலமர
விச்சைவித் ததிர்த்தூழி யானெனப் பெயரிய
நச்சு மாமர நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பஃறழை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கு முதவா
திமைப்பிற் கழியு மியற்கையோ ருடைத்தே. (௧௰)

(நேரிசைவெண்பா.)

உடைமணியி னோசைக் கொதுங்கி யரவம்
படமொடுங்கப் பையவே சென்றங்—கிடைமருத
னையம் புகுவ தணியிழையார் மேலனங்கன்
கையம் புக வேண்டிக் காண். (கக)

(கட்டளைக்கலித்துறை.)

காணீர் கதியொன்றுங் கல்லீரெழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீரவன்புக ழாசைப்பட்டுப்
பூணீ ருருத்திர சாதனநீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெளிதோ மருதப்பிரான்கழல் மேவுதற்கே. (கஉ)

(இணைக்குறளாசிரியப்பா.)

மேவிய புன்மயிர்த் தொகையோ வம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
யூறு முதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கு மெலும்போ வெலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்
றூறும் புழுவி னொழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்

கட்டிய நரம்பின் கயிற்று வுடம்பிற்குட்
பிரி யாதொறுக்கும் பிணியோ * தெரியா
தின்ன தியானென் றறியே னென்னை
யெங்குந் தேடினன் யாதிலுங் காணேன்
முன்னம்
வரைத்தனி வில்லாற் புரத்தையழ லூட்டிக்
கண் படையாகக் காமனை யொருநா
ளுண்பொடி யாக நோக்கியண் டத்து
வியா வமரர் வியவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
யிருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்கா
நவமணி முகிழ்த்த புதுவெயி லெறிப்ப
வெண்ணருங் கோடி யிருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
றெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றனன் பெற்றபின்
னின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலு
மென்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டே
னின்னிலை யனைத்தினுங் கண்டே னென்னை
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணுந் தன்மை யோரே. (கரு)

(நேரிசைவெண்பா.)

ஓராதே யஞ்செழுத்து முன்னுதே பச்சிலையு
நேராதே நீரு நிரப்பாதே—யாராயோ
வெண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாத
நண்ணுவா மென்னு மது நாம். (கசு)

(கட்டளைக்கலித்துறை.)

நாமே யிடையுள்ள வாறறிவாமினி நாங்கள்சொல்ல
லாமே மருதன் மருதவனத்தன்ன மன்னவரைப்
பூமேலணிந்து பிழைக்கச்செய் தாரொரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ளைப்பாரமேற்றுத றக்கதன்றே. (கஎ)

* தெரிதரவெனவும்பாடம்.

(நேரிசையாசிரியப்பா.)

அன்றினர் புரங்க ளழலிடை யவியக்
குன்றுவளைத் தெய்த குன்றாக் கொற்றத்து
நுண்பொடி யணிந்த வெண்டோட் செல்வ
கயிலைநடந் தனைய வுயர்நிலை நோன்றாட்
பிறைசெறித் தன்ன விருகோட் டொருதிமிற்
பானிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட் டிமயச் செல்வன்
மணியெனப் பெற்ற வணியிய லன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசு மயிலிளம் பேடை
கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வைய மேழும் பன்முறை யீன்ற
வைய திருவயிற் றம்மை பிராட்டி
மறப்பருஞ் செய்கை யறப்பெருஞ் செல்வி
யெமையா ளுடைய வுமையா ணங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பனைக்கைபோன் றனைய
தழைசெவி யெண்டோட் டலைவன் றந்தை
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வே
லமரர்த் தாங்குங் குமரன் றந்தை
பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கு
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்ற முளதோ நின்னினைந்
தெண்ணருங் கோடி யிடர்ப்பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
திறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிக டமதே பாவம் யாதெனின்
முறியாப் பெருக்கன் முப்பழங் கலந்த
வறுசுவை யடிசி லட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துத
லயினியின் குற்ற மன்று வெயிலின்வைத்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப

மடாஅ வொருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்ற மன்று கண்ணகன்று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
வடிபெயர்த் திடுவா ளொருவ
னெடிது வருந்துத லிழற்றீங் கன்றே. (கசு)

(நேரிசைவெண்பா.)

அன்றென்று மாமென்று மாறுசம யங்க
ளொன்றொன்றொ டொவ்வா துரைத்தாலு—மென்று
மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு
மருதனையே நோக்கி வரும். (கஎ)

(கட்டளைக்கலித்துறை.)

நோக்கிற்றுக் காம னுடல்பொடியாக நுதிவிரலாற்
றாக்கிற்றரக்கன் றலைகீழ்ப் படத்தன் சுடர்வடிவா
ளோக்கிற்றுத்தக்கன் றலையுருண் டோடச் சலந்தரனைப்
போக்கிற் றுயிர்பொன்னி சூழ்மருதாளுடைப் புண்ணியமே.

(நேரிசையாசிரியப்பா.)

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த கைலை நாயக
காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பொருவிடைப் பாக
வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தி யாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினுங் கரந்தை யாயினும்
பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்
கருவிடைப் புகாமற் காத்தருள் புரியுந்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கண்
மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவருங்
காடு மலையும் புக்குக் கோடையிற்
கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி

யைவகை நெருப்பி னடுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலு
நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்
சடையைப் புனைந்துந் தலையைப் பறித்து
முடையைத் துறந்து முண்ணு தழன்றுங்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவு நீரும் வந்தன வருந்தியுங்
களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டுந
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவ
ரம்மை முத்தி யடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்ப
ரீங்கிவை செய்யா தியாங்க ளெல்லாம்
பழுதின் றுயர்ந்த வெழுநிலை மாடத்துஞ்
செந்தா துதிர்ந்த நந்தா வனத்துந்
தென்ற லியங்கு முன்றி லகத்துந்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலு
மயிற் பெடையாலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி யாண்டாண் டிட்ட
மருப்பி னியன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டின் மீமிசைப் படுத்த
வைவகை யமளி யணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுட் பெய்த பதநுண் பஞ்சி
னெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயன் மீது பரிபுர மிழற்றச்
சாயலன் னத்தின் றளர்நடை பயிற்றிய
பொற்றே ரணத்தைச் சுற்றிய துகிலென
வம்மென் குறங்கி னும்மென் கலிங்கங்
கண்ணு மனமுங் கவற்றிப் பண்வர
விரங்குமணி மேகலை யொருங்குடன் கிடந்த
வாடர வல்கு லரும்பெற னுசுப்பு
வாட வீங்கிய வனமுலை கதிப்ப
வணியியல் கமுகை யலங்கரித் ததுபோன்
மணியிய லாரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கு மணிகெழு மென்றோள்
விரித்த சாந்தின் மிசைவிரித் திட்ட
வுத்தரி யப்பட் டொருபா லொளிதர

வள்ளை வாட்டிய வொள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரள நிரைத்தாங்
கொழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் வேலுங் காம பாணமு
மால காலமு மனைத்துமிட் டமைத்த
விரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை யலங்கல் குழன்மிசைப் பொலியு
மஞ்சொன் மடந்தைய ராகந் தோய்ந்துஞ்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்து
மறுசுவை யடிசில்வறிதிருந்தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்துப்
பூசுவன பூசியும் புனைவன புனைந்துந்
தூசி னல்லன தொடையிற் சேர்த்தியு
மைந்து புலன்களு மார வார்ந்து
மைந்தரு மொக்கலு மனமகிழ்ந் தோங்கி
யிவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை
மந்திரவெழுத் தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலி னந்த
முத்தியு மிழந்தில முதல்வ வத்திற
நின்னது பெருமை யன்றோ வென்னெனின்
வல்லா னொருவன் கைம்முயன் றெறியினு
மாட்டா வொருவன் வாளா வெறியினு
நிலத்தின் வழாஅக் கல்லே போ
னலத்தின் வழார்நின் னுமைவின் றோரே. (௧௯)

(நேரிசைவெண்பா.)

நாமவிற் றுய்மனனே நாரியர்கடோ டோய்ந்து
காமவிற்றிக் கழிந் தொழிய—லாமோ
பொருத வனத்தானையுரி போர்த்தருளு மெங்கண்
மருத வனத் தானை வளைந்து. (௨௦)

(கட்டளைக்கலித்துறை.)

வளையார்பசியின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிளையார்தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வந்
தளையார்நரகினுக் கென்கடவார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையானிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. (௨௧)

(நேரிசையாசிரியப்பா.)

அடிசார்ந் தவர்க்கு முடியா வின்ப
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமு நடுவு முடிவு மின்றிக்
கால மூன்றுங் கடந்த கடவு
ளுளக்கணுக் கல்லா தூன் கணுக்கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதிச் சுடரொளி
யெறும்புத் துளையி னிருசெவிக் கெட்டா
துறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறித் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேற
றுண்டத் துளையிற் பண்டைவழி யன்றி
யறிவி னுறு நறிய நாற்ற
மேனைய தன்மையு மெய்தா தெவற்றையுந்
தானே யாகி நின்ற தற்பரந்
தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதிற் றோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினு
மிருள்புரை கண்டத் தேக நாயக
சுருதியு மிருவருந் தொடர்ந்து நின்றலமர
மருதிடங் கொண்ட மருத மாணிக்க
வுமையாள் கொழுந வொருமூன் றாகிய
விமையா நாட்டத் தென்றனி நாயக
வடியே னுறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கன்மனக்கயவ ரொடு
நெடுநாட் பழகிய கொடுவினை யீர்ப்பக்
கருப்பா சயமெனு மிருட்சிறை யறையிற்
குடரொன்சங்கிலி பூண்டு தொடர் பட்டுக்
கூட்டுச் சிறைப் புழுவி னீட்டுமலத்தழுந்தி
யுடனே வருந்தி நெடுநாட் கிடந்து
பல்பிணி பெயர்பெற் றல்லற் படுத்துந்
தண்டலுளர் மிண்டி வந் தலைப்ப
வுதரநெருப்பிற் பதை பதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமொத் துண்டுங்
கிடத்த னிற்ற னடத்தல் செல்லா
திடங்குறை வாயிலின் முடங்கி யிருந்துழிப்
பாவப் பகுதியி லிட்டுக் காவற்
கொடியோ னாவனா யேவி நெடிய

வாசைத் தனையி லென்னையு முடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்
பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியு
மைவருங் கடுப்ப வவாவது கூட்டி
யீண்டின கொண்டு மீண்டு வந்துழி
யிட்டுழி யிடாது பட்டுழிப் படாஅ
திந்நா ளிடுக்க ணெய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடு நெறிகாணே
னின்னை யடைந்த வடியா ரடியார்க்
கென்னையு மடிமை யாகக் கொண்டே
யிட்ட பச்சிலைகொண் டொட்டி யறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமற்
காத்தருள் செய்ய வேண்டுந்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே. (உஉ)

(நேரிசைவெண்பா.)

சடைமே லொருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமே லொருத்தி பொலிய—விடையேபோய்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்ப
தெங்கே யிருக்க விவள். (உங)

(கட்டளைக்கலித்துறை.)

இருக்கு மருதினுக் குள்ளிமையோர்களு நான்மறையு
நெருக்கு நெருக்கத்து நீளகத்துச்சென்று மீளவொட்டாத்
திருக்குமறுத்தைவர் தீமையுந் தீர்த்துச்செவ் வேமனத்தை
யொருக்குமொருக்கத்தி னுள்ளே முளைக்கின்ற வொண்சுடரே

(நேரிசையாசிரியப்பா.)

சுடர்விடு சூலப் படையினை யென்றும்
விடையுகந் தேறிய விமல வென்று
முண்ணு நஞ்ச முண்டனை யென்றுங்
கண்ணுற் காமனைக் காய்ந்தனை யென்றுந்

திரிபுர மெரித்த சேவக வென்றுங்
கரியுரி போர்த்த கடவு ளென்று
முரகம் பூண்ட வுரவோ யென்றுஞ்
சிரகஞ் செந்தழ லேந்தினை யென்றும்
வலந்தரு காலனை வதைத்தனை யென்றுஞ்
சலந்தர னுடலந் தடிந்தனை யென்று
மயன்சிர மொருநா ளரிந்தனை யென்றும்
வியந்தவா ளரக்கனை மிதித்தனை யென்றுந்
தக்கன் வேள்வி தகர்த்தனை யென்று
முக்கிரப் புலியுரி யுடுத்தனை யென்று
மேனமு மன்னமு மெட்டா தலமர
வானங் கீழ்ப்பட வளர்ந்தனை யென்றுஞ்
செழுநீர் ஞாலஞ் செகுத்துயி ருண்ணு
மழல்விழிக் குறளை யமுக்கினை யென்று
மினையன வினையன வெண்ணில் கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயிற் புகழ்த
றுளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலி
னளப்பரும் பெருமைநின் னளவல தாயினு
மொன்றி னேயாப் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவ னாதலி னென்னை
யிடுக்கண் களையா வல்லற் படுத்தா
தெழுநிலை மாடத்துச் செழுமுகி லுறங்க
வடித்துத் தட்டி யெழுப்புவ போல
நுண்டுகிற் பதாகை கொண்டுகொண் டுகைப்பத்
துயிலி னீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுட
ரருள்சுரந் தளிக்கு மற்புதக் கூத்த
கல்வி னெறிந்த பொல்லாப் புத்த
னின் னினைந் தெறிந்த வதனு
லன்னவன் றனக்கு மருள்பிழைத் தின்றே. (உரு)

(நேரிசைவெண்பா.)

இன்றிருந்து நாளை யிறக்குந் தொழிலுடைய
புன்றலைய மாக்கள் புகழ்வரோ—வென்றிமழு
வாளுடையான் றெய்வ மருதுடையா னாயேனை
யாளுடையான் செம்பொ னடி. (உசு)

(கட்டளைக்கலித்துறை.)

அடியாயிரந்தொழி லாயிரவாயிர மாயிரம் பேர்
முடியா யிரங்கண் கண்மூவாயிரமுற்று நீறணிந்த
தொடியா யிரங்கொண்ட தோளிரண்டாயிர மென்றுநெஞ்சே
படியாயிராப்பகற் றென்மருதாளியைப் பற்றிக் கொண்டே.

(இணைக்குறளாசிரியப்பா.)

கொண்டலி னிருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வா னுருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
யயிரா வணத்துறை யாடு மப்ப
கைலாய வாண கௌரி நாயக
நின்னருள் சுரந்து பொன்னடி பணிந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோ
ரிமையா நெடுங்க ணுமையா ணங்கையு
மழைக்கட் டடத்துப் புழைக்கைப் பிள்ளையு
மமரர்த் தாங்குங் குமர வேளுஞ்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனுந்
தாருகற் செற்ற வீரக் கன்னியும்
பூவின் கிழத்தியு நாவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி யுருத்திரரு
மாறுப் பெருந்திறல் வானோர் தலைவனுஞ்
செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவருஞ்
சந்திர னொருவனுஞ் செந்திக் கடவுளு
நிருதியுஞ் சமனுஞ் சுருதிக ளொன்றும்
வருணனும் வாயுவு மிருநிதிக் கிழவனு
மெட்டு நாகமு மட்ட வசுக்களு
மூன்றுகோடி யான்ற முனி வரும்
வசிட்டனுங் கபிலனு மகத்தியன் முனுந்
தும்புரு நாரத னொன்றிரு திறத்தரும்
வித்தகப் பாடன் முத்திறத் தடியருந்

திருந்திய வன்பின் பெருந்துறைப் பிள்ளையு
மத்தரு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்துங்
குவளைப் புனலிற் றவளைய ரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிரை யெள்ளத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்கவேண்டுமென்றடுத்தடுத்திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துங்
காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மளித்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவரு
மினைய தன்மைய ரெண்ணிறந் தோர்க
ளனைவரு நிற்க யானு மொருவன்
பத்தி யென்பதோர் பாடு மின்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையே
னின்னை
யிறைஞ்சில னாயினு மேத்தில னாயினும்
வருந்தில னாயினும் வாழ்த்தில னாயினுங்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்து நன்மை தீமை

யானவை நின்செய லாதலி
ஞனே யமையு நலமில் வழிக்கே. (உ௮)

(நேரிசைவெண்பா.)

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்க ளெல்லாம்—பொழில்சூழ்
மருதிடத்தா னென்றொருகால் வாய்கூப்ப வேண்டா
கருதிடத்தா நில்லா கரந்து. (உ௯)

(கட்டளைக்கலித்துறை.)

கரத்தினன் மாலவன் கண்கொண்டுநின் கழல் போற்றநல்ல
வரத்தினையீயு மருதவப்பாமதி யொன்றுமில்லேன்
சிரத்திலு மாயென்றன் சிந்தையுளாகிவெண் காடனென்னுந்
தரத்திலுமாயது நின்னடியார் தெய்வத் தாமரையே. (௩0)

திருச்சிற்றம்பலம்.

## திருவிடைமருதூர் - மும்மணிக்கோவை

## முற்றிற்று.

கணபதிதுணை.

# திருச்சிற்றம்பலம்.

பதினொன்றாந் திருமுறையுள்

திருவெண்காடனென்னும்

## பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

மூன்றாவது

திருக்கழுமல

# மும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

(இணைக்குறளாசிரியப்பா.)

திருவளர்பவளப் பெருவரைமணந்த
மரகதவல்லி போலொருகூறின்
இமயச்செல்வி பிரியாதுவிளங்கப்
பாய்திரைப்பரவை மீமிசைமுகிழ்த்த
அலைகதிர்ப்பரிதி யாயிரந்தொகுத்த
வரன்முறைதிரியாது மலர்மிசையிருந்தெனக்
கதிர்விடுநின்முகங் காண்டொறுங்காண்டொறும்
முதிராவிளமுலை முற்றாக்கொழுந்தின்
திருமுகத்தாமரைச் செவ்வியின்மலரநின்
தையல்வாணுதற் றெய்வச்சிறுபிறை
இளநிலாக்காண்டொறு மொளியொடும்புணர்ந்தநின்
செவ்வாய்க்குமுதஞ் செவ்விசெய்யநின்
செங்கைக்கமல மங்கைவனமுலை
அமிர்தகலச மமைவினேந்த
மலைமகடனாது நயனக்குவளைநின்
பொலிவிரைமலர மறையோர்கழுமல
நெறிநின்றுபொலிய நாகர்நாடு
மீமிசையிருந்து மீமிசையுலகம்
கீழ்முதற்றாழ்ந்து

ஒன்றாவந்த குன்றாவெள்ளத்
துலகமூன்றுக்குங் களைகணாகி
முதலில்கால மினிதுவீற்றிருந்துழித்
தாதையொடுவந்த வேதியச்சிறுவன்
தளர்நடைப்பருவத்து வளர்பசிவருத்த
அன்னாயோவென் றழைப்பமுன்னின்று
ஞானபோனகத்தரு ளட்டிக்குழைத்த
ஆனாத்திரளை யவன்வயினருள
அந்தணன்முனிந்து தந்தாரியாரென
அவனைக்காட்டுவ னப்பவானார்
தோடுடைய செவியனென்றும்
பீடுடைய பெம்மானென்றும்
கையிற் சுட்டிக்காட்ட
ஐயநீவெளிப்பட் டருளினையாங்கே. (௧)

(வெண்பா.)

அருளின்கடலடியே னன்பென்னுமாறு
பொருளின்றிரள்புகலி நாதன்—இருள்புகுதுங்
கண்டத்தானென்பாரைக் காதலித்துக்கைதொழுவார்
அண்டத்தார்தாமா ரதற்கு. (௨)

(கட்டளைக்கலித்துறை.)

ஆரணநான்கிற்கு மப்பாலவனறி யத்துணிந்த
நாரணனான்முக னுக்கரியானடி வாய்நிறைந்த
பூரணனெந்தை புகலிப்பிரான் பொழிலத்தனைக்குங்
காரணனந்தக் கரணங்கடந்த கருப்பொருளே. (௩)

(இணைக்குறளாசிரியப்பா.)

கருமுதற்றொடங்கிப் பெருநாளெல்லாம்
காமம்வெகுளி கழிபெரும்பொய்யெனும்
தூய்மையில்குப்பை தொலைவின்றிக்கிடந்ததை
அரிதினிகழ்ந்து போக்கிப்பொருதிறன்
மையிருணிறத்து மதமுடையடுசினத்
தைவகைக்கடாவும் யாப்பவிழ்த்தகற்றி
அன்புகொடுமெழுகி யருள்விளக்கேற்றித்
துன்பவிருளைத் துறந்துமுன்புற
மெய்யெனும்விதானம் விரித்துநொய்ய
கீழ்மையிற்றொடர்ந்து கிடந்தவென்சிந்தைப்

பாழறையுணக்குப் பள்ளியறையாக்கிச்
சிந்தைத்தாமரைச் செழுமலர்ப்பூந்தவி
சென்றைநீயிருக்க விட்டனனிந்த
நெடுநிலவளாகமு மடுகதிர்வானமும்
அடையப்பரந்த வாதிவெள்ளத்து
நுரையெனச்சிதறி யிருசுடர்மிதப்ப
வரைபறித்தியங்கு மாருதங்கடுப்ப
மாலும்பிரமனு முதலியவானவர்
காலமிதுவெனக் கலங்காநின்றுழி
மற்றவருய்யப் பற்றியபுணையாய்
மிகநனிமிதந்த புகலிநாயக
அருணணிசுரக்கும் பிரளயவிடங்கநின்
செல்வச்சிலம்பு மெல்லெனமிழற்ற
அமையாக்காட்சி யிமயக்
கொழுந்தையுமுடனே கொண்டிங்
கெழுந்தருளத்தகு மெம்பெருமானே. (௪)

(வெண்பா.)

மானுமழுவுந் திருமிடற்றில் வாழுமிரு
டானும்பிறையுமே தாங்கிநிற்கும்—வானவர்க்கு
வெள்ளத்தேதோன்றிக் கழுமலத்தேவீற்றிருந்தென்
உள்ளத்தேநின்ற வொளி. (௫)

(கட்டளைக்கலித்துறை.)

ஒளிவந்தவாபொய்மனத்திருணீங்கவென்னுள்ளவெள்ளம்
தெளிவந்தவாவந்துதித்தித்தவாசிந்தியாததொரு
களிவந்தவாவன்புகைவந்தவாகடைசாரமையத்
தெளிவந்தவாநங்கழுமலவாணர்தம்மின்னருளே. (௬)

(இணைக்குறளாசிரியப்பா.)

அருள்பழுத்தளிந்த கருணைவான்கனி
ஆராவின்பத் தீராக்காதல்
அடியவர்க்கமிர்த வாரிநெடுநிலை
மாடக்கோபுரத் தாடகக்குடுமி
மழைவயிறுகிழிக்குங் கழுமலவாணநின்
வழுவாக்காட்சி முதிராவிளமுலைப்
பாவையுடனிருந்த பரமயோகி
யாரென்றுணர்த்துவ னெந்தைமேனாள்

அகிலலோகமு மனந்தயோனியும்
நிகிலமுந்தோன்றநீ நினைந்தநாடொடங்கி
எனைப்பலயோனியு நினைப்பரும்பேதத்
தியாரும்யாவையு மெனக்குத்தனித்தனித்
தாயராகியுந் தந்தையராகியும்
வந்திலாதவ ரில்லையானவர்
தந்தையாகியுந் தாயராகியும்
வந்திராதது மில்லைமுந்து
பிறவாநிலனு மில்லையவ்வயின்
இறவாநிலனு மில்லைபிறிதில்
எனைத்தின்றுவுயிர்களு மில்லையானவை
தமைத்தின்றொழிந்தது மில்லையனைத்தே
காலமுஞ்சென்ற தியானிதன்மேலினி
இளைக்குமா றிலனேநாயேன்
அந்தரச்சோதிநின் னஞ்செழுத்துநவிலும்
தந்திரம்பயின்றது மிலனேதந்திரம்
பயின்றவர்ப்பயின்றது மிலனேயாயினும்
இயன்றதோர்பொழுதி னிட்டதுமலராச்
சொன்னதுமந்திர மாகவென்னையும்
இடர்ப்பிறப்பிறப்பெனு மிரண்டின்
கடற்படாவகை காத்தனின் கடனே. (எ)

(வெண்பா.)

கடலானகாமத்தே காருழ்வர் துன்பம்
அடலாமுபாயமறியார்—உடலாம்
முழுமலத்தையோர்கிலார் முக்கட்பெருமான்
கழுமலத்தைக் கைதொழாதார். (அ)

(கட்டளைக்கலித்துறை.)

தொழுவாளிவள்வளைதோற்பாளிவளிடர்க்கேயலர்கொண்
டெழுவாளெழுகின்றதென்செயவோவென்மனத்திருந்துங்
கழுவாமணியைக்கழுமலவாணனைக்கையினிற்கொள்
மழுவாளனைக்கண்டுவந்ததென்றுலோர்வசையில்லையே. (௯

## (இணைக்குறளாசிரியப்பா.)

வஞ்சியில்காட்சி யிசைநனிவிளங்க
முன்னாணிகழ்ந்த பன்னீருகத்து
வேறுவேறுபெயரி னூறின்றியன்ற
மையறுசிறப்பிற் றெய்வத்தன்மைப்
புகலிநாயக வியல்விடைப்பாக
அமைநாண்மென்றோ ளுமையாள்கொழுந
குன்றுகுனிவித்து வன்றோளவுணர்
மூவெயிலெரித்த சேவகத்தேவ
இளநிலாமுகிழ்க்கும் வளர்சடைக்கடவுணின்
நெற்றியிற்சிறந்த வொற்றைநாட்டத்துக்
காமனைவிழித்த மாமுதுதலைவ
வானவரறியா வாதியானே
கல்லாவுடம்பிற் புல்லறிவுதொடர
மறந்துநோக்கும் வெறுந்தண்ணாட்டத்துக்
காண்டொறுங்காண்டொறு மெல்லாமியாண்டை
யாயினும்பிறவு மென்னதும்பிறரதும்
ஆவனபலவு மழிவனபலவும்
போவதும்வருவது நிகழ்வதுமாகித்
தெண்ணீர்ஞாலத்துத் திரண்டமணலினும்
எண்ணில்கோடி யெனைப்பலவாகி
இல்லனவுளவா யுள்ளனகாணாப்
பன்னாளிருள்வயிற் பட்டேனன்னதும்
அன்னதாதலி னடுக்குமதென்னெனின்
கட்புலன்றெரியாது கொட்புறுமொருவற்குக்
குழிவழியாகி வழிகுழியாகி
ஒழிவின்றன்றி யொன்றுதடுமாறி
வந்தாற்போல வந்ததுபோல
எந்தைநின்
திருவளர்நாட்டங் கருணையிற்பெறலும்
யாவையுமெனக்குப் பொய்யெனத்தோன்றி
மேவருநீயே மெய்யெனத்தோன்றினை
ஓவியப்புலவன் சாயல்பெறவெழுதிய
சிற்பவிகற்ப மெல்லாமொன்றில்

தவிராதுதட்டினர் தமக்குச்
சுவராய்த்தோன்றுந் துணிவுபோன்றனவே. (௬0)

(வெண்பா.)

எனவேயெழுந்தாளொன் செய்கிற்பாளின்னம்
சினவேறுகாட்டு கிறொன்று—மினவேகப்
பாம்புகலியாகிமிரும் பன்றூச்சடைமுடிநம்
பூம்புகலியானிதழிப் போது. (௬௧)

(கட்டளைக்கலித்துறை.)

போதும்பெருவிடிற் பச்சிலையுண்டுபுனலுண்டெங்கும்
ஏதும்பெருவிடினெஞ்சுண்டின்றேயிணையாகச்செப்பும்
சூதும்பெறுமுலைப்பங்கர்தென்றோணிபுரேசர்வண்டின்
தாதும்பெருதவடித்தாமனாசென்றுசார்வதற்கே. (௬௨)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழுமல - மும்மணிக்கோவை

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# திருச்சிற்றம்பலம்.

பதினொன்றாந் திருமுறையுள்

திருவெண்காடனென்னும்

## பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

நான்காவது

# திருவொற்றியூர்த்

## திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியப்பா.

இருநிலமடந்தை யியல்பினினுடுத்த
பொருகடன்மேகலை முகமெனப்பொலிந்த
ஒற்றிமாநக ருடையோயுருவின்
பெற்றியொன்றாப் பெற்றோரியாரே
மின்னினியலின பிறங்குநின் சடையே
மன்னியவண்டநின் சென்னியின்வடிவே
பாவகன்பரிதி பனிமதிதன்னொடு
மூவகைச்சுடருநின் னுதனேர்நாட்டம்
தண்ணொளியாரந் தாராகணமே
விண்ணவர்முதலா வேறோரிடமாக்
கொண்டுறைவிசும்பே கோலநின்னாகம்
எண்டிசைதிண்டோ ளிருங்கடலுடையே
அணியுடையல்குலு மவனிமண்டலமே
மணிமுடிப்பாந்தணின் றாளிணைவழக்கே
ஒழியாதோடிய மாருதமுயிர்ப்பே
வழுவாவோசை முழுதுநின்வாய்மொழி
வானவர்முதலா மன்னுயிர்பரந்த
ஊனமின்ஞானத் தொகுதிநின்னுணர்வே
நெருங்கியவுலகினி னீர்மையுநிற்றலும்
சுருங்கலும்விரிதலுந் தோற்றநிற்றொழிலே
அமைத்தலுமழித்தலு மாங்கதன்முயற்சியும்
இமைத்தலும்விழித்தலு மாகுநின்னியல்பே

என்றிவைமுதலா வியல்புடைவடிவினோ
டொன்றியதுப்புரு விருவகையாகி
முத்திறக்குணத்து நால்வகைப்பிறவி
அத்திறத்தைம்பொறி யறுவகைச்சமயமோ
டேழுலகாகி யெண்வகைமூர்த்தியோ
டூழிதோறூழி யெண்ணிறந்தோங்கி
எவ்வகையளவினிற் கூடியின்
றவ்வகைப்பொருளுநீ யாகியவிடத்தே. (௧

இடத்துறைமாதரோ டொருடம்பென்றும்
நடத்தினைநள்ளிரு ணவிற்றினையென்றும்
புலியதளென்பொடு புனைந்தோயென்றும்
பலிதிரிவாழ்க்கை பயின்றோயென்றும்
திருவமர்மாலொடு திசைமுகனென்றும்
அருவமுமுருவமு மானாயென்றும்
உளனேயென்று மிலனேயென்றும்
தளரானென்றுந் தளர்வோனென்றும்
ஆதியென்றும சோதியனென்றும்
போதியிற்பொலிந்த புராணனென்றும்
இன்னவைமுதலாத் தாமறியளவையின்
மன்னியநூலுடன் பன்மையுண்மயக்கிப்
பிணங்குமாந்தர் பெற்றிமைநோக்கி
அணங்கியவ்வவர்க்கவ் வவையாகியவை
பற்றிய பளிங்குபோலும்
ஒற்றிமாநகருடை யோயுருவே. (௨)

உருவாமுலகுக் கொருவனாகிய
பெரியோய்வடிவின் பிறிதின்மையின்
எப்பொருளாயினு மிங்குளதாமெனின்
அப்பொருளுனக்கே யவயவமாதலின்
முன்னியமூவெயின் முழங்கெரியூட்டித்
தொன்னீர்வையகந் துயர்கெடச்சூழ்ந்தும்
வேள்விமூர்த்திதன் றலையினையறுத்தும்
நீள்விசும்பாளிதன் றோளினைநெரித்தும்
ஓங்கியமறையோற் கொருமுகமொழித்தும்
பூங்கணைவேளைப் பொடிபடவிழித்தும்
திறல்கெடவரக்கனைத் திருவிரலுறுத்தும்
குறைபடக்கூற்றினைக் குறிப்பினிலடர்த்தும்
என்றிவைமுதலா வாள்வினையெல்லாம்

நின்றுபுரிச்செறிந்தவை நின்செயலாதலின்
உலவாத்தொல்புக ழொற்றியூர
பகர்வோர்நினக்கு வேறின்மைகண்டவர்
நிகழ்ச்சியினிகழி னல்லது
புகழ்ச்சியிற்படுப்பரோ பொருளுணர்ந்தோரே. (௩)

பொருளுணர்ந்தோங்கிய பூமகன்முதலா
இருடிணையாக்கையி லியங்குமன்னுயிர்
உருவினுமுணர்வினு முயர்வினும்பணியினும்
திருவினுந்திறலினுஞ் செய்தொழில்வகையினும்
வெவ்வேறுறு வினையொடும்பிரியா
ஒவ்வாப்பன்மையுண் மற்றவரொழுக்கம்
மன்னியவேலையுள் வான்றிரைபோல
நின்னிடையெழுந்து நின்னிடையாகியும்
பெருகியுஞ்சுருங்கியும் பெயர்ந்துந்தோன்றியும்
விரவியும்வேறாய் நின்றனைவிளக்கம்
ஓவாத்தொல்புக ழொற்றியூர
மூவாமேனி முதல்வநின்னருள்
பெற்றவரறியி னல்லது
மற்றவரறிவரோ நின்னிடைமயக்கே. (௪)

மயக்கமில்சொன்னீ யாயினுமற்றவை
துயக்கநின்றிற மறியாச்சூழலும்
உறையிடமுள்ள மாயினுமற்றது
கறைபடவாங்கே கரந்தகள்ளமும்
செய்வினையுலகினிற் செய்வோயெனினும்
அவ்வினைப்பயனீ யணுகாவணிமையும்
இனத்திடையின்பம் வேண்டிநிற்பணிவோர்
மனத்திடைவாரி யாகியவனப்பும்
அன்பினடைந்தவர்க் கணிமையுமல்லவர்ச்
சேய்மையு நாடோறும்
என்பினையுருக்கு மியற்கையவாதலின்
கண்டவர்தமக்கே யூனுடலழிதல்
உண்டெனவுணர்ந்தன மொற்றியூர
மன்னியபெரும்புகழ் மாதவத்
துன்னியசெஞ்சடைத் தூமதியோயே. (௫)

தூமதிசடைமிசைச் சூடிதூநெறி
ஆமதியானென வமைந்தவாறே

அறனுருவாகிய வானேறேறுதல்
இறைவனியானென வியற்றுமாறே
அதுவவளவனென நின்றமையார்க்கும்
பொதுநிலையானென வுணர்த்தியபொருளோ
முக்கணனென்பது முத்தீவேள்வியில்
தொக்கதென்னிடை யென்பதோர்சுருக்கே
வேதமான்மறி யேந்துதன்மற்றதன்
நாதனானென நவிற்றுமாறே
மூவிலையொருதாட் சூலமேந்துதன்
மூவருமியானென மொழிந்தவாறே
எண்வகைமூர்த்தி யென்பதிவ்வுலகினில்
உண்மையானென வுணர்த்தியவாறே
நிலநீர்தீவளி யகல்வானென்றும்
உலவாத்தொல்புக ழுடையோயென்றும்
பொருளுநற்பூதப் படையோயென்றும்
தெருளநின்றுலகினிற் றெருட்டுமாறே
ஈங்கிவைமுதலா வண்ணமும்வடிவும்
ஓங்குநின்பெருமை யுணர்த்தவுமுணராத்
தற்கொலிமாந்தர் தம்மிடைப்பிறந்த
சொற்பொருள்வன்மையிற் சுழலுமாந்தர்க்
காதியாகிய வறுதொழிலாளர்
ஓதலோவா வொற்றியூர
சிறுவர்தஞ்செய்கையிற் படுத்து
முறுவலித்திருத்தி முகப்படுமளவே. (௬)
அளவினிலிறந்த பெருமையையாயினும்
எனதுளமகலா வொடுங்கினின்றனையே
மெய்யினையிறந்த மெய்யினையாயினும்
வையகமுழுதுநின் வடிவெனப்படுமே
கைவலத்திலைநீ யெனினுங்காதல்
செய்வோர்வேண்டுஞ் சிறப்பொழியாயே
சொல்லியவகையாற் றனையலையாயினும்
நல்லுயிர்க்கூட்ட நாயகனீயே
எங்குமுள்ளோ யெனினும்வஞ்சனை
தங்கியவவரைச் சார்விலைநீயே
அஃதான்று
பிறவாப்பிறவியை பெருகாப்பெருமையை
துறவாத்துறவியை தொடராத்தொடர்ச்சியை

நுகரா நுகர்ச்சியை நுணுகா நுட்பினை
அகலா வகற்சியை யணுகா வணிமையை
செய்யாச் செய்கையை சிறவாச் சிறப்பினை
வெய்யை தண்ணியை விழுமியை நொய்யை
செய்யை பசியை வெளியை கரியை
ஆக்குதி யழித்தி யானபல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி யடைதி
ஏனைய வாகிய வெண்ணில்பல்குணம்
நினைதொறு மயக்கு நீர்மைய வாதலின்
ஓங்குகட லுடுத்த வொற்றியூர
ஈங்கிது மொழிவார் தம்
சொன்னிலை சுருங்கினல்லது
நின்னியலறிவோ ரியாரிருநிலத்தே (௭)

நிலத்திடைப்பொறையா யவாவினினீண்டு
சொலத்தருபெருமைத் தூராவாக்கை
மெய்வளியையொடு பித்தொன்றாக
ஐவகைநெடுங்காற் றுங்குடனடிப்ப
நரையெனுநுரையே நாடொறும்வெளுப்பத்
திரையுடைத்தோலே செழுந்திரையாகக்
கூடியகுருதி நீரினுண்ணிறைந்து
மூடியவிரும லோசையின்முழங்கிச்
சுடுபசிவெகுளிச் சுறவினமெறியக்
குடரெனுமாலாக் கூட்டம்வந்தொலிப்ப
ஊன்றடியெலும்பி னுட்டிடலடைந்து
தோன்றியபல்பிணிப் பின்னகஞ்சுழலக்
கால்கையினரம்பே கண்டமாக
மேதகுநிணமே மெய்ச்சாலாக
முழக்குடைத்துளையே முகங்களாக
வழுக்குடைமூக்கா றேதம்வந்தொலிப்ப
இப்பரிசியற்றிய வுடலிருங்கட்டுத்
துப்புரவென்னுநின சுழித்தலைப்பட்டு
ஆவாவென்றுநின் னருளினைப்பெற்றவர்
நாவாயாகிய நாதநின்பாத
முந்திச்சென்று முறைமையின்வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச் செவ்வியலிறுத்தி
உருகியவாரா வாய்ப்பூரித்துப்
பெருகியநிறையெனுங் கயிற்றிடைப்பிணித்துத்

# திருவொற்றியூர்த் திருக்குறுந்தொகை.

துன்னியசுற்றச் சுடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப் பொறியினைமுறுக்கிக்
காமப்பாரெனுங் கடுவெளியற்ற
தூமச்சோதிச் சுடர்க்குறநிறுத்திச்
சுருங்காவுணர்ச்சித் துடுப்பினைத்துழாவி
நெருங்காவளவி னீள்கரையேற்ற
வாங்கவார்த்திரை போக்குதிபோலும்
ஒருங்குகடலுடுத்த வொற்றியூர. (௮)

*

ஒற்றியூர வுலவாநின்குணம்
பற்றியாரப் பரவுதல்பொருட்டா
என்னிடைப்பிறந்த வின்றுப்புன்மொழி
நின்னிடையணுகா நீர்மையவாதலின்
ஆவலித்தழுதலி லகன்றதம்மனைக்
கேவலஞ்செய்மையிற் கேளாளாயினும்
பிறித்தற்கரியாய் பெற்றியதாகிக்
குறைவிலார்த்துங் குழல்வித்தியல்வினை
யறியாதெண்ணி லூழிப்பிறவியின்
மயங்கிக்கண்ணிலர் கண்பெற்றாங்கே
தாய்தலைப்படநின் றாளிணைவணக்கம்
வாய்தலையறியா மயக்குறும்வினையேன்
மல்கியவின்பத் தோடுடன்கூடிய
வெல்லையிலவாவினி லியற்றியவாகக்
கட்டியநீயே யவிழ்க்கினல்ல
தெட்டனையாயினு மியானிதற்கரியேன்
றுன்னிடையிருளென்னுந் தூற்றிடையொதுங்கி
வெள்ளிடைகாண விருப்புறுவினையேன்
றந்தையுந்தாயுஞ் சாதியுமறிவுநஞ்
சிந்தையுந்திருவுஞ் செல்கதித்திறனுந்
துன்பமுந்துறவுந் தூய்மையுமறிவு
மின்பமும்புகழு மிவைபலபிறவுஞ்
சுவையொளியூறோசை நாற்றந்தோற்ற
மென்றிவைமுதலா விளங்குவவெல்லா
மொன்றநின்னடிக்கே யொருங்குடன்வைத்து
நின்றனன்றனியே னின்னடியல்லது
சார்வுமற்றின்மையிற் றளர்ந்தோர்காட்சிச்
சேர்விடமதனைத் திறப்படநாடி.

யெய்துதற்கரியோ யானினிச்
செய்வதுமறிவனோ தெரியுங்காலே. (௯)

காலற்சீறிய கழலோய்போற்றி
மூலத்தொகுதி முதல்வபோற்றி
யொற்றிமா நகருடையோய்போற்றி
முற்றுமாகிய முதல்வபோற்றி
யணைதொறுஞ்சிறக்கு மமிர்தேபோற்றி
யிணைபிறிதில்லா வீசபோற்றி
யார்வஞ்செய்பவர்க் கணியோய்போற்றி
தீர்வின்சுவைத் தேனேபோற்றி
வஞ்சனைமாந்தரை மறந்தோய்போற்றி
நஞ்சினையமிர்தா நயந்தோய்போற்றி
விரிகடல்வையக வித்தேபோற்றி
புரிவுடைவனமாப் புணர்ந்தோய்போற்றி
காணமுன்பொருள் கருத்துறைசெம்மைக்
காணியாகிய வரனேபோற்றி
வெம்மைதண்மையென் றிவைகுணமுடைமையிற்
பெண்ணோடாணெனும் பெயரோய்போற்றி
மேவியவவர்தமை வீட்டினிற்படுக்குந்
தீபமாகிய சிவனேபோற்றி
மாலோய்போற்றி மறையோய்போற்றி
மேலாய்போற்றி வேதியபோற்றி
சந்திரபோற்றி தழலோய்போற்றி
யிந்திரபோற்றி யிறைவபோற்றி
யமராபோற்றி யழகாபோற்றி
குமராபோற்றி கூத்தாபோற்றி
பொருளேபோற்றி போற்றியென்றுனை
நாத்தழும்பிருக்க நவிற்றினல்ல
தேற்றுதற்குரியோ ரியாரிருநிலத்தே.

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# திருச்சிற்றம்பலம்.

:o:

பதினொன்றாந்திருமுறையுள்

திருவெண்காடொன்றும்

## பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

ஐந்தாவது

# திருவேகம்பமுடையார் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றொண்டுவந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப் புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனேன்பணி கொள்ளுதியோகச்சியேகம்பனே.

ஏகம்பனேயென்னையாள்பவனேயிமையோர்க்கிரங்கிப்
போகம்பன்னாளுங்கொடுக்கின்றநாயகபொங்குமைவாய்
நாகம்பொன்னாரமெனப்பொலிவுற்றநன்னீறணியும்
ஆகம்பொன்மாமலையொப்பவனேயென்பனாதரித்தே. (உ)

தரித்தேன்மனத்துன்றிகழ்தருநாமந்தடம்பொழில்வாய்
வரித்தேன்முரல்கச்சியேகம்பனேயென்றன்வல்வினையை
யரித்தேனுனைப்பணியாதவரேழைமைகண்டவரைச்
சிரித்தேனுனக்கடியாரடிபூணத்தெளிந்தனனே. (ங)

தெளிதருகின்றதுசென்றென்மனநின்றிருவடிவம்
அளிதருநின்னருட்கையமினியிலையந்திச்செக்கர்
ஒளிதருமேனியெம்மேகம்பனேயென்றுகந்தவர்தாள்
தளிதருதூளியென்றன்றலைமேல்வைத்ததன்மைபெற்றே. ( )

பெற்றுகந்தேனென்றுமர்ச்சனைசெய்யப்பெருகுநின்சீர்
கற்றுகந்தேனென்கருத்தினிதாக்கச்சியேகம்பத்தின்
பற்றுகந்தேறுமுகந்தவனேபடர்நாகக்கச்சின்
சுற்றுகந்தேர்விடைமேல்வருவாய்நின்றுணையடியே. (ரு)

அடிநின்றசூழல்கோசரமாலுக்கயற்கலரின்
முடிநின்றசூண்முடிகாண்பரிதாயிற்றுக்கார்முகிலின்
இடிநின்றசூழ்குரலேறுடையேகம்பயாமெங்ஙனே
வடிநின்றசூலப்படையுடையாயைவணங்குவதே. (சு)

வணக்கந்தலைநின்றிருவடிக்கேசெய்யுமையல்கொண்டோ
ரிணக்கன்றிமற்றோரிணக்கறியோமல்லம்வல்லரவின்
குணக்குன்றவில்லிகுளிர்கச்சியேகம்பங்கூடினல்லாற்
கணக்கொன்றுமற்றொருதேவரைப்பாடுங்கவிநலமே. (எ)

நலந்தரநாளொன்றுசொல்லுவன்கேண்மினல்லீர்களன்பு
கலந்தரனூர்கச்சியேகம்பங்கண்டுகனற்றிகிரி
சலந்தரனாகமொழிக்கவைத்தாய்தக்கன்வேள்வியெல்லா
நிரந்தரமாகச்செய்தாயென்றுபூசித்துநின்மின்களே. (அ)

மின்களென்றோர்சடைகொண்டலென்றோர்கண்டமேனிவண்
ணம், பொன்களென்றோர்வெளிப் பாடுதம்பொன்னடி பூண்டு
கொண்ட, வெண்களென்றோலும்பிரிந்தறியார்கச்சி யேகம்பத்
தான், றன்களென்றோருலகெல்லாநிலைபெற்றதன்மைகளே. ()

தன்மையிற்குன்றாத்தவத்தோரிமையவர்தாம்வணங்கும்
வன்மையிற்குன்றாமதிற்கச்சியேகம்பர்வண்கயிலைப்
பொன்மயிற்சாயலுஞ்சேயரிக்கண்ணும்புரிகுழலும்
மென்மையிற்சாயுமருங்குலுங்காதல்விளைத்தனவே. (க0)

தனமிட்டுமைதழுவத்தழும்புற்றவர்தம்மடியார்
மனம்விட்டகலாமதிற்கச்சியேகம்பர்வான்கயிலைச்
சினம்விட்டகலாக்களிறுவினாவியோர்சேயனையார்
புனம்விட்டகலார்பகலாம்பொழுதாம்பூங்கொடியே. (கக)

பூங்கொத்திருந்தழையார் பொழிற்கச்சியேகம்பர்பொற்பார்
கோங்கத்திருந்துகுடுமிக்கயிலையெம்பொன்னொருத்தி
பாங்கொத்திருந்தனையாரணங்கேபடர்கல்லுருவி
யாங்கத்திருந்திழையாடிவந்தாற்கண்டடிவருத்தே

வருத்தந்தருமெய்யுங்கையிற்றழையும்வன்மாவினவுங்
கருத்தந்தரிக்குநடக்கவின்றையகழணிலையத்
திருத்தந்தருளுந்திகழ்கச்சியேகம்பர்சீர்க்கயிலைத்
துருத்தந்திருப்பதன்றிப்புனங்காக்குந்தொழிலெமக்கே. ()

எம்மையுமெம்மைப்பணிகொள்ளுங்கம்பமொழிற்கயிலை
யும்மையுமாணிடமிப்புனத்தேவிற்றுவந்தமைந்தர்
தம்மையுமானையுஞ்சிந்தையுநோக்கங்கவர்வவென்றே
வம்மையுமம்மலர்க்கண்ணும்பெரியீரருளுமினே. (௧௪)

அருளைத்தருகம்பரம்பொற்கயிலையுளெம்மையரம்
பிருளைக்கரிமறிக்கும்மிவளாயருறுத்தியெய்ய
வெருளக்கலைகணைதன்னொடும்போயினவில்லிமைக்கு
மருளைத்தருசொல்லியெங்கோவிலையுண்டிவ்வையகத்தே. ()

வையார்மழுப்படையேகம்பரீங்கோய்மலைப்புனத்து
ளையார்வருகலையேனங்கரிதொடர்வேட்டையெல்லாம் [ப்
பொய்யானவையர்மனத்தவெம்பூங்கொடி கொங்கைபொரு
பையாரரவிடையாயிற்றுவந்துபரிணமித்தே. (௰௬)

பருமுத்துதிர்த்திடுஞ்சீர்மத்தயானைநுதல்பகுந்திட்
டுருமொத்ததிண்குரற்சீயந்திரிநெறியோங்குவைவாய்ப்
பொருமுத்தலைவேற்படைக்கம்பர்பூங்கயிலைப்புனத்துட்
டருமுத்தனநகைத்தன்னசையால்வெற்பசார்வரிதே. (௰௭)

அரிதன்றிருக்கண்ணிடநிரம்பாயிரம்போதணிய
அரிதன்றிருவடிக்கர்ச்சித்தகண்ணுக்கருளுகம்பர்
அரிதன்றிருக்கங்குலியாலழிந்தகயிலையல்லிங்
கரிதென்றிருப்பதெம்பால் வெற்பவெம்மையர்க்கஞ்சலுமே.

அஞ்சரத்தான்பொடியாய்விழத்தீவிழித்தன்புசெய்வோர்
நெஞ்சரத்தாழ்வுகந்தோர்கச்சியேகம்பர்நீள்கயிலைக்
குஞ்சரத்தாழ்வரைவீழறுங்கொம்புய்யக்கும்பமுழ
வெஞ்சரத்தாரனவோவல்லவோவிவ்வியன்முரசே. (௧௯)

சேய்தந்தகைம்மையுமைகணவன்றிருகேகம்பத்தான்
றாய்தந்தையாயுயிர்காப்போன்கயிலைத்தயங்கிருள்வாய்
வேய்தந்ததோளிநம்மூசலொடும்விளைவேங்கைதன்னைப்
பாய்தந்தூசலுண்டாங்கொண்டதோசைபகடுவந்தே. (௨௦)

வந்துமணம்பெறிற்பொன்னனையீர்மன்னுமேகம்பர்தம்
உந்துமருவிக்கயிலைமலையுயர்தேனிழிச்சித்
தந்துமலர்கொய்துந்தண்டினைமேயுங்கிளிகடிந்துஞ்
சிந்தும்புகர்மலைக்கச்சுமிச்சாரற்றிரிந்தவனே. (௨௧)

திரியப்புரமெய்தவேகம்பனூர்திகழுங்கயிலைக்
கிரியக்குறவர்பருவத்திடுதரளம்விளையோம்
விரியச்சுருண்முதலானுமடைந்தோம்விளாவிளாந்து
பிரியக்கதிர்முற்றினீர்பெற்றதென்னங்குப்பேசுமினே. (௨௨)

பேசகயாவருமைக்கணியாரொன்றுபித்தரொங்கும்
பூசனைகயார்திருநீற்றெழிலேகம்பர்பொற்கயிலைத்
தேசனைகயார்சிலைவெற்பன்பிரியும்பரிசிலரக்
கூசனைகயாதுமில்லாக்குலவெங்கைப்பெயர்நும்மையே. ()

பெயராநலத்தெழிலேகம்பனூர்பிணைதோய்கயிலைப்
பெயராதிருக்கப்பெறுகிளிகாள்புனமேபிரியின்
ஐயரால்வருத்திமனமுமிங்கோடித்தொழுதுசென்ற
கயராதுறையும்வெற்பற்கடியற்கும்விடைதமினே. (௨௪)

நம்மைப்பிறவிக்கடல்கடப்பிப்பவர்நாம்வணங்கு
மும்மைத்திருக்கண்முகத்தெழிலேகம்பர்மொய்கயிலை
யம்மைக்கருங்கண்ணிதன்னொடின்பந்தருந்தண்புனமே
வெம்மைக்கவலைசெயச்சொல்லியோவல்லியெய்தியதே. ()

இயங்குந்திரிபுரமெய்தவேகம்பொழிற்கயிலைத்
தயங்குமலர்ப்பொழில்காடையலாடருவித்தடங்கா
முயங்குமணியறைகாண்மொழியீரொழியாதுநெஞ்ச
மயங்கும்பரிசுபொன்னூர்சென்றகுழல்வகுத்தெமக்கே. ()

வகுப்பாரிவர்போன்மணத்துக்குநாண்மணந்தன்னொடின்ப
மிகுப்பார்களாருயிரொன்றுமிருவளாவிள்ளக்கள்வாய்
நெகுப்பான்மலர்கொண்டுநின்றார்கிடக்கநிலாவுகம்பர்
தொகுப்பான்மணிசிந்தருவிக்கயிலையிச்சூழ்புனத்தே. (௨௭)

புனங்குழையாதென்றுமென்றினைகொய்தலும்போகலுற்ற
கனங்குழையாடற்பிரியநமக்குறுங்கையறவால்
மனங்குழையாவருகண்கனிபண்பலபாடுந்தொண்டர்
இனங்குழையாத்தொழுமேகம்பரிக்கயிலாயத்துள்ளே. (௨௮)

உள்ளம்பெரியரல்லாச்சிறுமானிடருற்றசெல்வங்
கள்ளம்பெரியசிறுமனத்தார்க்கன்றிக்கங்கையென்னும்
வெள்ளம்பெரியசடைத்திருவேகம்பர்விண்ணரணந்
தள்ளம்பெரிகொண்டமைத்தாரடியவர்சார்வதன்றே. (௨௯)

அன்றும்பகையடர்க்கும்பரிமாவுமதவருவிக்
குன்றும்பதாதியுந்தேருங்குலவிக்குடைநிழற்கீழ்
நின்றும்பொலியினுங்கம்பர்நன்னீறுநுதற்கிலரேல்
என்றுமரசுமுரசும்பொழியாதிருநிலத்தே. (௩௦)

நிலத்திமையோரிற்றலையாப்பிறந்துமறையொடங்கம்
வலத்திமைப்போதும்பிரியாரெரிவளர்த்தாலும்வெற்பன்
குலத்துமையோர்பங்கர்கச்சியுளேகம்பங்கூடித்தொழா *
நலத்தமையாதவர்வேட்டுவர்தம்மினடுப்படையே. (௩௧)

படையாலுயிர்கொன்றுதின்றுபசுக்களைப்போலச்செல்லு
நடையாலறிவின்றிநாண்சிறிதின்றிநகுங்குலத்திற்
கடையாப்பிறக்கினுங்கச்சியுளேகம்பத்தெங்களையா
ளுடையான்கழற்கன்பரேலவர்யாவர்க்குமுத்தமரே. (௩௨)

உத்துங்கயானையுரியார்விரலாலரக்கன்சென்னி
பத்துங்கையானவிருபதுஞ்சோர்தரவைத்திலையை
யொத்துங்கையாவவன்பாடக்கயிலையுள்ளோர்நற்கைவா
ளொத்துங்கையானென்றுகந்தளித்தார்கச்சியேகம்பரே. ()

அம்பரங்காலனனீர்நிலந்திங்களருக்கனனு
வம்பரங்கொள்வதோர்வேழத்துரியவன்றன்னுருவா
மெம்பரன்கச்சியுளேகம்பனத்தரிடையடைவா
னம்பரன்றன்னடியாரறிவார்கட்கவன்றுணையே. (௩௪)

துணைத்தாமரையடியும்பவளத்திரணன்குறங்கும்
பணைத்தோளகலமுங்கண்டத்துநீலமுமண்டத்துமின்
பணைத்தாலனசடையுந்திருமுக்கணும்பெண்ணோர்பக்கத்
தணைத்தாரெழிற்கம்பரெங்கள்பிரானார்க்கழகியவே. (௩௫)

அழகழிவிற்பெரிதாகியவேகம்பரத்தர்கொற்றம்
பழகறிவிற்பெரியோர்தமைப்பற்றலர்பற்றுமன்பின்
குழகறிவேற்பினுளொன்றறியாரறியாமைதெய்வங்
கிழகெறியப்பட்டுலந்தாருலகிற்கிடந்தனரே. (௩௬,

கிடக்குமொருபாலிரைக்கின்றபாம்பொருபான்மதியந் [றை
தொடக்குண் டிலங்கு மலங்குந்திரைக்கங்கை சூடுங்கொன்
வடக்குண்டுகட்டத்தலைமாலைவாளான்மலைந்தவெம்போர் .
கடக்கும்விடைத்திருவேகம்பர்கற்றைச்சடைமுடியே. (௩௭)

கற்றைப்பவளச்சடைவலம்பூக்கமழ்கொன்றையந்தார்
முற்றுற்றிலர்மதியின்கொழுந்தேகம்பர்மொய்குழலா
மற்றைத்திசையின்மணிப்பொற்கொழுந்தத்தரங்கழுநீர்
தெற்றிப்பொலிகின்றசூட்டழகாகித்திகழ்தருமே. (௩௮)

தருமருட்டன்மைவலப்பாற்கமலக்கணெற்றியின்மேற்
றிருமலர்க்கண்பிளவின்றிகழுந்தழல்செல்வக்கம்பர்
கருமலர்க்கண்ணிடப்பாலதுநீலங்கனிமதத்து
வருநுதற்பொட்டணங்குக்குயர்ந்தோங்குமலர்க்குழலே. ()

மலர்ந்தபடத்துச்சியைந்திலுஞ்செஞ்சுடர்மாமணிவிட்
டலர்ந்தமணிக்குண்டலம்வலக்காதினிலாடிவரும்
நலந்திருநீள்வயிரம்வெயிற்பாயநகுமணிகள்
கலந்தசெம்பொன்மகரக்குழையேகம்பர்காதிடமே. (௪0)

காதலைக்கும்வலத்தோள்பவளக்குன்றமங்குயர்ந்து
போதலைக்கும்பணிப்பொன்மலைநீற்றின்பொலியகலந்
தாதலைக்குங்குழல்சேர்பணைத்தோணறுஞ்சாந்தணிந்து
சூதலைக்குமுலைமார்பிடமேகம்பர்சுந்தரமே. (௪௧)

தரம்பொற்பழியுமுலகட்டியெய்த்துத்தரந்தளரா
வுரம்பொற்புடையதிருவயிறும்வலமும்பர்மும்மைப்
புரம்பொற்பழித்தகம்பர்க்குத்தரத்திபூண்முலையு
நிரம்பப்பொருந்துதளிரிளவஞ்சியுநேருடைத்தே. (௪௨)

உடைப்புலியாடையின்மேலுரகக்கச்சுவீக்கிமுஞ்சி
வடத்தொருகோவணந்தோன்றுமறைவலமற்றையல்குற்
றொடக்குறுகாஞ்சித்தொடுத்தவரசிலைதூநுண்டுகில்
அடற்பொலியேறுடையேகம்பமேயவடிகளுக்கே. (௪௩)

அடிவலப்பாலதுசெந்தாமரையொத்ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற்கூற்றினெருத்திறவைத்ததிளந்தளிரி
னடியிடப்பாலதுபஞ்சுறவஞ்சுஞ்சிலம்பணிந்த
வடிவுடைத்தார்கச்சியேகம்பமேயவரதருக்கே. (௪௪)

தருக்கவற்றான்மிக்கமுப்புரமெய்தயன்றன்றலையை
நெருக்கவற்றோடமழுவாளிசைந்ததுநெற்களென்றும்
பருக்கவற்றாங்கச்சியேகம்பரத்தர்தம்பாம்புகளின்
றிருக்கயிற்றாலிட்டருளுங்கடகத்திருக்கரமே. (௪௫)

கரத்தத்தமருகத்தோசைகடுத்தண்டமீபிளப்ப
வரத்தத்தபாதநெரித்திட்டவனிதலநெரியத்
தரத்தத்திசைகளுக்கப்புறம்போர்ப்பச்சடைவிரித்து
வரத்தைத்தருகம்பராடுவதொல்லியுமாநடமே. (௬௬)

நடனம்பிரானுகந் துய்யக்கொண்டானென் றுநன்மறையோ
ருடன்வந்துமூவாயிரவரிறைஞ்சிநிறைந்தவன்பும்
கடனன்றிமற்றறியாத்தில்லையம்பலங்காளத்தியா
மிடமெம்பிரான்கச்சியேகம்பமேயாற்கினியனவே. (௬௭)

இனியவரின்றூரவரையொப்பார்பிறரொன்னவொண்ணாத்
தனியவர்தையலுடனாமுருவரறம்பணித்த
முனியவரொன்றுமுகந்தமுக்கண்ணவர்தண்டியன்புக்
கினியவர்காய்மழுவாட்படையார்கச்சியேகம்பரே. (௬௮)

பரவித்தனைநினையக்கச்சியேகம்பர்பண்ணுமையல்
வரவித்தனையுள்ளதெங்கறிந்தேன்முன்னவர்மகளூர்
புரவித்தனையடிக்கக்கொடிதாய்விடியாவிரவி
லரவித்தனையுங்கொண்டார்மடவார்முன்றிலாட்டிடவே. ()

இடவஞ்சுறுக்கெனப்பாயுமஞ்செனினகுதலைகண்
டிடவஞ்சுவர்மடவாரிரிகின்றனரேகம்பத்திர்
படமஞ்சுவாயதுநாகமிமைக்குமதனுக்குமுற்
படவஞ்சுவரொங்ஙனேபலிவந்திடும்பாங்குகளே. (௭0)

பாங்குடைக்கோட்புலியின்னதள் கொண்டீர்நும்பாரிடங்க
டாங்குடைகொள்ளப்பலிகொள்ளவந்தீர்தடங்கமலம்
பூங்குடைகொள்ளப்புனற்கச்சி யேகம்பங்கோயில்கொண்டீ
ரீங்கிடைகொள்ளக்கலைகொள்ளவந்தீரிடைக்குமின்றே. ()

இடைக்குமின்றேற்குமிணைமுலையாய்முதியார்கடஞ்சொற்
கடைக்கணன்றேங்கச்சியேகம்பனையங்கொளக்கடவும்
விடைக்குமுன்றேற்றநில்லேனின்றினியிந்தமொய்குழலார்
கிடைக்குமுன்றேற்றநஞ்சங்கிதுவோதங்கிறித்துவமே. ()

கிறிபலபேசிச்சதிரானடந்துவிடங்குபடக்
குறிபலபாடிக்குளிர்கச்சியேகம்பனையங்கொள்ள
நெறிபலவார்குழலார்மெலிவுற்றநெடுந்தெருவிற்
செறிபலவெள்வளைபோயினதாயர்கடேடுவரோ. (௭௩)

தேடுற்றிலகள்ளநோக்கந்தெரிந்திலசொற்கண்முடி
கூடுற்றிலகுழல்கொங்கைபொடித்திலகூறுமிவண்
மாடுற்றிலமணியின்மடவல்குலுமற்றிவள்பா
ருடுற்றிலவெழிலேகம்பனார்க்குள்ளநல்கிடத்தே. (௫௪)

நல்கும்புகழ்கடவூர்நன்மறையவனுய்யநண்ணிக்
கொல்கின்றகூற்றைக் குமைத்தவெங்கூற்றங்குளிர்திரைகண்
மல்குந்திருமறைக்காட்டமிர்தென்றுமலைமகடான்
புல்கும்பொழிற்கச்சியேகம்பமேவியபொன்மலையே. (௫௫)

மலையத்தகத்தியனர்ச்சிக்கமன்னிவடகயிலை
நிலையத்தமரர்தொழவிருந்தானெடுமேருவென்னுஞ்
சிலையத்தன்பைம்பொன்மதிற்றிருவேகம்பத்தான்றிகழ்நீ
ரலையத்தடம்பொன்னிசூழ்திருவையாற்றருமணியே. (௫௬)

மணியாரருவித்தடவிமயங்கிடக்கொல்லிகல்லின்
றிணியாரருவியினார்த்தசிராமலையையவனங்க
ளணியாரருவிகவர்கிளியொப்புமின்சாரல்விந்தம்
பணிவாரருவினைதீர்க்குமேகம்பர்பருப்பதமே. (௫௭)

பருப்பதங்கார்தவழ்மந்தரமிந்திரநீலம்வெள்ளை
மருப்பதங்கார்கருங்குன்றியங்கும்பரங்குன்றவில்லார்
நெருப்பதங்காவுதிநாறுமயேந்திரமென்றிவற்றி
லிருப்பதங்காவுகந்தான்கச்சியேகம்பத்தெம்மிறையே. ()

இறைத்தார்புரமெய்தவில்லிமைநல்லிமவான்மகட்கு [குன்ற
மறைத்தார்கருங்குன்றம்வெண்குன்றஞ் செங்குன்றமன்னற்
நிறைத்தார்நெடுங்குன்றநீள்கழுக்குன்றமென்றீவினைகள்
குறைத்தார்முதுகுன்றமேகம்பர்குன்றென்றுகூறுமினே. ()

கூறுமின்றொண்டர்குற்றாலநெய்த்தானந்துருத்தியம்பேர்
தேறுமின்வேள்விக்குடித்திருத்தோணிபுரம்பழன
மாறுமின்போற்சடைவைத்தவனாரூரிடைமருதென்
றேறுமினீரெம்பிரான்கச்சியேகம்பமுன்னினைந்தே. (௬௦)

நினைவார்க்கருளும்பிரான்றிருச்சோற்றுத்துறைநியமம்
புனைவார்சடையோன்புகலூர்புறம்பியம்பூவணநீர்
புனைவார்பொழிற்றிருவெண்காடுபாச்சிலதிகையென்று
நினைவார்தருநெஞ்சினீர்கச்சியேகம்பநண்ணுமினே. (௬௧)

நண்ணிப்பரவுந்திருவாவடுதுறைநல்லநல்லூர்
மண்ணிற்பொலிகடம்பூர்கடம்பந்துறைமன்னுபுன்கூ
ரெண்ணற்கரியபராயத்துறைநல்லெதிர்கொள்பாடிக் [ன்றே
கண்ணிப்பிறைச்சடையோன் கச்சியேகம்பங்காண்மின்செ

சென்றேறிவிண்ணூறுமண்ணுமலைதிகழ்வல்லமென்பூ
வின்றேற்றல்பாய்திருமால்பேறுபாசூரொழிலமுந்தூர்
வன்றேரவன்றிருவிற்பெரும்பேறுமதிலொற்றியூர்
நின்றோர்தருகச்சியேகம்பமேயார்நிலாவியவே. (௬௩)

நிலாவுபுகழ்திருவோத்தூர்திருவாமாத்தூர்நிறைநீர்
சலாவுசடையோன்புலிவலம்வில்வலம் கொச்சைதொண்டர்
குலாவுந்திருப்பனங்காடுநன்மாகறல்கூற்றம்வந்தா
லலாயென்றடியார்க்கருள்புரியேகம்பராலயமே. (௬௪)

ஆலயங்கார்கருகாவைகச்சூர்திருக்காரிகரை
வேலையங்கேறுதிருவான்மியூர்திருவூறன்மிக்க
சோலையங்கார்திருப்போக்தைமுக்கோணந் தொடர்கடுக்கை
மாலையன்வாழ்திருவாலங்காடேகம்பம்வாழ்த்துமினே. (௬௫)

வாழப்பெரிதெமக்கின்னருள்செய்யுமலர்க்கழலோர்
தாழச்சடைத்திருவேகம்பர்தம்மைத்தொழாதவர்போய்
வாழப்பாற்சுரமாற்றுதளிரடிப்பூங்குழலெம்
ஏழைக்கிடையிறுக்குங்குயபாரமியக்குறினே. (௬௬)

உறுகின்றவெவ்வழலக்கடமிக்கொடிக்குன்பின்வரப்
பெறுகின்றவண்மையினுலையபேரருளேகம்பனார் [யோர்
நாறுகின்றமென்மலர்த் தண்பொழிற்கச்சியைச் சூழ்ந்திளை
குறுகின்றபூங்குவளைக்குறுந்தண்பணையென்றுகொளே. ( )

கொள்ளுங்கடுங்கதிரிற்கள்ளித்தீச்சிலவேயுலர்ந்து
விள்ளும்வெடிபடும்பாலையென்பாலன்விடலைபின்னே
தெள்ளும்புனற்கச்சியுட்டிருவேகம்பர்சேவடியை
யுள்ளுமதுமறந்தாளெனப்போவதுனைப்பரிதே. (௬௮)

பரிப்பருந்திண்மைப்படையதுகானொளிற்சிறகு
விரிப்பருந்துக்கிரையாம்வெய்யவனஞ்சலஞ்சடைமேற்
றரிப்பருந்திணைகங்கையார்திருவேகம்பமன்னபொன்னே
வரிப்பருந்திண்சிலையேயுமராயின்மறைகுவனே. (௬௯)

வன்வரித்திண்புலியின்னதளேகம்பமன்னருளே [ந்
யென்வருபொன்னணங்கென்னணங்கிற் கெனெழிற்கழங்கு
தன்வரிப்பந்துங்கொடுத்தெனைப்புல்லியுமிற்பிரிந்தே
யின்வரிக்கல்லதர்செல்வதெங்கேயொல்குமேழைநெஞ்சே.

நெஞ்சார்தரவின்பஞ்செய்கழலேகம்பர்கச்சியன்னாள்
பஞ்சாரடிவைத்தபாங்கிவையாங்கவள்பெற்றெடுத்த [ற
வெஞ்சார்வொழியத்தன்பின்செலமுன் செல்வெடுவெடென்
வஞ்சாவடுதிறற்காளைதன்போக்கிவையந்தத்திலே. (௭௧)

இலவவெங்கானானையல்லாற்றொழுஞ்சரணேகம்பனார்
நிலவுஞ்சுடரொளிவெய்யவனேதண்மலர்மிதித்துச்
செலவும்பருக்கைகுளிரத்தளிரடிசெல்சுரத்துன்
னாலவுங்கதிர்தணிவித்தருள்செய்யுன்னாறுதுணைக்கே. (௭௨)

துணையொத்தகோவையும்போலெழிற் பேதையுந்தோன்றலுமுன், னிணையொத்தகொங்கையொ டேயொத்தகாதலொ டேகினரோ, யணையத்தரோறொத்தகாளையைக்கண்டனமற்றவ ரொற், பிணையொத்தனோக்குடைப்பெண்ணிவடன்னொடும்பே சுமினே. (௭௩)

மின்னலிக்கும்வணக்கத்திடையாளையுமீளியையு
நென்னலிப்பாக்கைவந்தெய்திடுவிரொம்மனையிற்கண்டீர்
பின்னரிப்போக்கருங்குன்றுகடந்தவரின்றுகம்பர்
மன்னரிதேர்ந்துதொழுங்கச்சிநாட்டிடைவைகுவரோ. (௭௪)

உவரச்சொல்வேடுடைக்காடுகந்தாடியவேகம்பனார்
அவரக்கன்போனவிமானத்தையாயிரமுண்மைசுற்றுந்
துவரச்சிகரச்சிவாலயஞ்சூலந்துலங்குவிண்மேற்
கவரக்கொடிதிளைக்குங்கச்சிகாணினுங்கார்மயிலே. (௭௫)

கார்மிக்ககண்டத்தெழிற்றிருவேகம்பர்கச்சியின்வா [ற்
யோர்மிக்கசேற்றெழினென்னடுவோரொலி பொன்மலைபோ
போர்மிக்கசென்னெல்குவிப்போரொலிகருப்பாலையொலி
நீர்மிக்கமாக்கடலின்னொலியேயொக்குநேரிழையே. (௭௬)

நேர்த்தமையாமைவிறற்கொடுவேடர்நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமையாலிமைதீர்ந்தகண்பொன்னேபகட்டுரிவை
போர்த்தமையாளுமைநோக்கருங்கம்பர்கச்சிப்பொழிலுட்
சேர்த்தமையாலிமைப்போதணிசீதஞ்சிறந்தனவே. (௭௭)

சிறைவண்டுபாடுங்கமலக்கிடங்கிவைசெம்பழுக்காய்
நிறைகொண்டபாளைக்கமுகின்பொழிலிவைதீங்கனியின் [னார்
பொறைகொண்டவாழைப் பொதும்புவைபுன்சடையேகம்ப
நறைகொண்டபூங்கச்சிநாடெங்குமிவ்வண்ணநன்னுதலே. ()

நன்னுதலார்கருங்கண்ணுஞ்செவ்வாயுமிவ்வாறெனப்போய்
மன்னிதழார்திருநீலமுமாம்பலும்பூப்பவள்ளை
யென்னவெலாமொப்புகாதென்றுவீறிடுமேகம்பனார்
பொன்னுதலார்விழியார்கச்சிநாட்டுளிப்பொய்கையுளே. ()

உளவார்குளிரநெருங்கிக்கருங்கிடங்கிட்டநன்னீர்
வளவாளைகளொடுசெங்கயன்மேய்கின்றவெங்களையாட்
கொளவார்பிறவிகொடாதவேகம்பர்குளிர்குவளை
களவார்தருகச்சிநாட்டெழிலேரிகளப்பரப்பே. (௮௦)

பரப்பார்விசும்பிற்படிந்தகருமுகிலன்னநன்னீர்
தரப்பாசிகண்மிகுபண்பொடுசேம்படர்தண்பணைவாய்ச்
சுரப்பாரொருமைமலர்தின்னத்துன்னுகராவொருத்தல்
பொரப்பார்பொலிநுதலாய்செல்வக்கம்பர்தம்பூங்கச்சியே

கச்சார்முலைமலைமங்கைகண்ணாரவெண்ணான்கறமும்
வைச்சார்மகிழ்திருவேகம்பர்தேவிமகிழவிண்ணோர்
விச்சாதரர்தொழுகின்றவிமானமுந்தன்மமரு
வச்சாலையும்பரப்பாங்கணிமாடங்களோங்கினவே. (௮௨)

ஓங்கினவூரகமுள்ளகமும்பருருகிடமாம்
பாங்கினினின்றதரியுறைபாடகத்தெவ்விரிய
வாங்கினவாட்கண்ணிமற்றவர்மைத்துனிவான்கவிக
டாங்கினநாட்டிருந்தாளதுதன்மனையாயிழையே. (௮௩)

இழையாரரவணியேகம்பர்நெற்றிவிழியின்வந்த
பிழையாவருணம்பிராட்டியதின்னபிறங்கலுன்று
நுழையாவருதிரிசூலத்தனோக்கரும்பொன்கடுக்கைத்
தழையார்பொழிலதுபொன்னேநமக்குத்தளர்வில்லையே. ()

தளராமிகுவெள்ளங்கண்டுமையோடித்தமைத்தழுவக்
கிளையார்வளைக்கைகவடுப்படுமீங்கோர்கிறிபடுத்தார்
வளமாப்பொழிற்றிருவேகம்பமற்றதுவந்திறைஞ்சி
யுளராவதுபடைத்தோமடவாயிவ்வுலகத்துள்ளே. (௮௫)

தளராமிகுவெள்ளங்கண்டுமையோடித்தமைத்தழுவக்
கிளையார்வளைக்கைவடுப்படுமீங்கோர்கிறிபடுத்தார்
வளமாப்பொழிற்றிருவேகம்பமற்றிதுவந்திறைஞ்சி
யுளராவதுபடைத்தோமடவாயிவ்வுலகத்துள்ளே. (அரு)

உலவியமின்வடம்வீசியுருமதிர்வுண்முழங்கி
வலவியமாமதம்பாய்முகிலியானைகள்வானில்வந்தாற்
சுலவியவார்குழல்பின்னரொன்பாரிரொனநினைந்து
நிலவியவேகம்பர்கோயிற்கொடியன்னநீர்மையனே. (அசு)

நீரொன்னிலும்மழுங்கண்முகில்காணெஞ்சமஞ்சலையென்
ருெரன்னிலுந்தமராயுரைப்பாரமராபதிக்கு
நேரொன்னிலுந்தகுங்கச்சியுளேகம்பர்நீண்மதில்வாய்ச்
சேரொன்னிலுந்தங்கும்வாட்கண்ணிதானன்பர்தேர்வரவே.

வரங்கொண்டிமையோர் நலங்கொள்ளுமேகம்பர்கச்சியன்ருய், பரங்கொங்கைதுவன்மீனீர்முத்தமன்பர்தந்தேரின்முன்னே,தரங்கொண்டுபூக்கொண்டுகொன்றைபொன்ளுகத்தண்காந்தள்கொத்தின், கரங்கொண்டுபொற்சுண்ணமேந்தவும்போந்தனகார்முகிலே. (அஅ)

கார்முகமாரவண்கைக்கொண்டகம்பர்கழற்ருெழுது
போர்முகமாப்பகைவெல்லச்சென்ருர்நினையார்புணரி
நீர்முகமாகவிருண்டுசுரந்ததுநேரிழைநா
மார்முகமாகவினைக்கடனீந்துதும்வெய்துயிர்ப்பே. (அகூ)

உயிராயின்வன்பர்தேர்வரக்கேட்டுமுன்வாட்டமுற்ற
பயிரார்புயல்பெற்றதென்னநம்பல்வளைபான்மைகளாந்
தயிரார்பானெய்யொடுமாடியவேகம்பர்தம்மருள்போற்
கயிராவளையழுந் தக்கச்சிறுத்தன கார்மயிலே. (கூ0)

கார்விடைவண்ணத்தன்ன்றேழ்தழுவினுமின்றுதனிப் [ர்
போர்விடைப்பெற்றெதிர்மாண்டாரொனவண்டர்போதவிட்டா
தார்விடையேகம்பர்கச்சிப்புறவிடைதம்பொனன்பூண்
மார்விடைவைகல்பெறுவார்தழுவமழவிடையே. (கூக)

விடையாய்கொடுமையெண்ணாதுமேலாங்கன்னிவேற்கருங்கட்
கடையாய்மனத்தினங்காளையர்புல்கொலிகம்பர்கச்சி
மடையாய்வயலிளமுல்லையின்மான்கன்றொடான்கன்றினங்
குடையாய்தொறும்பதிமன்றிற்கடல்போற்கலந்தெழுமே (௯௨)

எழுமலர்த்தண்பொழிலேகம்பர்கச்சியிருங்கடல்வாய்க்
கொழுமணப்புன்னைக்குரவான்மணற்குன்றிற்பாதர்கொம்பே
செழுமலர்ச்சேலல்ல வாளல்ல வேலல்ல நீலமல்ல
முழுமலர்க்கூரம்பினோரிரண்டாலுமுகத்தனவே. (௯௩)

முகம்பாகம்பண்டமும்பாகமென்றேறியமூதுரையை
யுகம்பார்த்திரேலென்னலமுயரோகம்பர்கச்சிமுன்னீ
ரகம்பாகவார்வினைவில்லையென்னின்பவளச்செவ்வாய்
நகம்பாற்பொழிற்பெற்றநாமுற்றவர்கொள்குநன்மயலே (௯௪)

மயக்கத்தநல்லிருட்கொல்லுஞ்சுறவொடெறிமகர
மியக்கத்திடுசுழியோதங்கழிகளாக்கழித்தார்
துயக்கத்தவர்க்கருளாக்கம்பர்கச்சிக்கடலர்பொன்னான்
முயக்கத்தகல்வுபொருள்கொண்கநீர்வருமூர்க்கஞ்சுமே. (௯௫)

மேயிரைவைக்கக்குருகுணராமதுவுண்டுபுன்னை
மீயிரைவண்டோதமர்புக்கடியவிரிகடல்வாய்ப்
பாயிரைநாகங்கொண்டோன்றொழுங்கம்பர்கச்சிப்பவ்வநீர்
ஆயிரைகானன்மற்றாரறிவார்நந்துறைவர்பொய்யே. (௯௬)

பொய்வருநெஞ்சினர்வஞ்சனையாரையும்போகவிடா
மெய்வரும்பேரருளேகம்பர்கச்சிவிளையினவாய்க்
கைவரும்புள்ளொடுசங்கினமார்ப்பநஞ்சேர்ப்பர்திண்டே
ரவ்வருதாமங்களினம்வந்தார்ப்பவணைகின்றதே. (௯௭)

இன்றுசெய்வோமிதனிற்றிருவேகம்பர்க்கெத்தனையு
நன்றுசெய்வோம்பணிநாளையென்றுள்ளிநெஞ்சேயுடலிற்
சென்றுசெயாரைவிடுந்துணைநாளும்விடாதடிமை
நின்றுசெய்வாரவர்தங்களினீணெறிகாட்டுவரே. (௯௮)

காட்டவைத்தார்தம்மையாமிடிப்பூப்பெய்யக்காலவெள்ள
மீட்டிவைத்தார்தொழுமேகம்பரோருமிலாதவெம்மைப்
பூட்டிவைத்தார்தமக்கன்பதுபெற்றுப்பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத்தார்பரவித்தொழுதாமவர்பாதங்களே. (கக)

பாதம்பரவியோர்பித்துப்பிதற்றிலும்பல்பணியும்
மேதம்புகுதாவகையருளேகம்பரேத்தெனவே
போதம்பொருளாற்பொலியாதபுன்சொற்பனுவல்களும்
வேதம்பொலியும்பொருளாமெனக்கொள்வர் மெய்த்தொண்டரே. (௱)

திருச்சிற்றம்பலம்.

---

உ

கணபதி துணை.

பட்டணத்துப்பிள்ளையார்

# திருப்பாட்டிரட்டு.

---

## முதலாவது

## கோயிற்றிருவகவல்.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
அலகைத் தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க
பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்

உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை யனைத்து மனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்
புற்புதக் குரம்பைத் துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பூளையு நீரும் புறப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து
கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மறவொரு

முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே.

---

## இரண்டாவது

## கோயிற்றிருவகவல்.

காதளா வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடுங்
காதலுங் கருத்துமல் லானின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாத பித்தங் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேச்சுமைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை

ஏமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்குஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக் கழகே.

---

## மூன்றாவது

## கோயிற்றிருவகவல்.

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவநின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியனின் னடைக்கலம்
மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்

விழுப்பொரு ளறியா வழுக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தளைந்தது லுளைந்திடு
நிணவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்கா று மிவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரொனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றிலாடும்பம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கெடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்

ணடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுணின் முடிக்
கருணைமொண் டலையெறி கடலே யடைக்கலம்
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மானின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கல முனக்கே.

---

## நான்காவது

## கச்சித்திருவகவல்.

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்காற்
றுள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுட ருங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்

அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
இலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
இரண்டு விம்மிச சிப்பாய்ந் தேறி
உயிராற் கிற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்
நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியிங் கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றூய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்
தக்க தலையோட் டின்முளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரண்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சா ணுடம்பு மிழியும் பெருவழி

மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக் காமுக ருய்நா னென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் றிருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடைவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க வினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமுங்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவேகம்பமாலை.

அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்லந்
துறந்தானவனிற்சதகோடியுள்ளத்துறவுடையோன்
மறந்தானறக்கற்றறிவோடிருந்திருவாதனையற்
றிறந்தான்பெருமையையென்சொல்லுவேன்கச்சியேகம்பனே

கட்டியணைத்திடும்பெண்டிருமக்களுங்காலத்தச்சன்
வெட்டிமுறிக்குமரம்போற்சரீரத்தைவீழ்த்திவிட்டாற்

கொட்டிமுழக்கியமூவார்மயானங்குறுகியப்பா
லெட்டியடிவைப்பபோவிறைவா கச்சியேகம்பனே. (உ)

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன்கையையெடுத்
தப்புறந்தன்னிலசையாமன்முன்வைத்தயல்வளவி
லொப்புடன்சென்றுதுயினீத்துப்பின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவேனிறைவா கச்சியேகம்பனே. (ங)

நன்னாரிற்பூட்டியசூத்திரப்பாவைநன்னார்தப்பினாற்
றன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்தன்மையைப்போ
லுன்னாலியானுந்திரிவதல்லான்மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங்காவதுண்டோவிறைவா கச்சியேகம்பனே. (ச)

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமுஞானமுமே
யல்லாதுவேறுநிலையுளதோவகமும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமுமைந்தரும்வாழ்வுமெழிலுடம்பு
மெல்லாம்வெளிமயக்கேயிறைவா கச்சியேகம்பனே. (ரு)

பொல்லாதவனெறிநில்லாதவனைம்புலன்கடமை
வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெய்யடியவர்பாற்
செல்லாதவனுண்மைசொல்லாதவனின்றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணிலேன்பிறந்தேன் கச்சியேகம்பனே. (சா)

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந்துமண்மே
லிறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே. (எ)

அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்தாற்
சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பலகால்விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தாயிறைவா கச்சியேகம்பனே. (அ)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்

சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. (௯)

மரியநட்போரையுமாயாமலமெனுமாதரையும்
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாந்
தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்புன்றாயைமறந்
தேயுமதேநிட்டையென்றானெழிற் கச்சியேகம்பனே. (௧௦)

வரிக்கோலவேல்விழியாரனுராகமயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொலேன்றமியேனுடல
நரிக்கோகழுகுபருந்தினுக்கோவெய்யநாய்தனக்கோ
வெரிக்கோவிளையெதுக்கோவிறைவா கச்சியேகம்பனே. (௧௧)

காதென்றுமூக்கென்று கண்ணென்றுகாட்டி யென்கண்ணெதி
மாதென்றுசொல்லிவருமாயைதன்னைமறலிவிற்ற [ரோ
தூதென்றெண்ணமற்சுகமென்றுநாடுமித்துற்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பேனிறைவா கச்சியேகம்பனே. (௧௨)

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங் கச்சியேகம்பனே. (௧௩)

சீறும்வினையதுபெண்ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவா கச்சியேகம்பனே. (௧௪)

பொருளுடையோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடையோரைமுகத்தினுந்தேர்ந்துதெளிவதுபோ
லருளுடையோரைத்தவத்திற்குணத்திலருளிலன்பி
லிருளறுசொல்லினுங்காணத்தகுங் கச்சியேகம்பனே. (௧௫)

பருத்திப்பொதியினைப்போலவயிறுபருக்கத்தங்க
டிருத்திக்கறுசுவைபோடுகின்றார்துறந்தோர்தமக்கு

வருத்தியமுதிடமாட்டாரவரையிம்மாநிலத்தி
லிருத்திக்கொண்டேனிருந்தாயிறைவா கச்சியேகம்பனே. (கசு)

பொல்லாவிருளகற்றுங்கதிர்கூகையென்புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடுமாறொக்குமேயறிவோருளத்தில்
வல்லாரறிவாரறியார்தமக்குமயக்கங்கண்டா
யெல்லாம்விழிமயக்கேயிறைவா கச்சியேகம்பனே. (கஎ)

வாதுக்குச்சண்டைக்குப்போவர்வருவர்வழக்குரைப்பர்
தீதுக்குதவியுஞ்செய்திடுவார்தினந்தேடியொன்று
மாதுக்களிந்துமயக்கிடுவார்விதிமாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தாரிறைவா கச்சியேகம்பனே. (கஅ)

ஓயாமற்பொய்சொல்வர்நல்லோரைநிந்திப்பருற்றுப்பெற்ற
தாயாரைவைவர்சதியாயிரஞ்செய்வர்சாத்திரங்க
ளாயார்பிறர்க்குபகாரஞ்செய்யார்தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்னபோயென்னகாண்கச்சியேகம்பனே. (கசு).

அப்பென்றும்வெண்மையதாயினுமாங்கந்நிலத்தியல்பாய்த்
தப்பின்றியேகுணவேற்றுமைதான்பலசார்தலினாற்
செப்பிலபக்குவம்பக்குவமாயுள்ளசீவனினு
மிப்படியேநிற்பனெந்தைபிரான் கச்சியேகம்பனே. (உ0)

நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியுந்
தாயார்வயிற்றினரராய்ப்பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன
வீயாமனிதரையேன்படைத்தாய் கச்சியேகம்பனே. (உக)

ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம்பற்றுமையாபுரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந்தாளுடையாய்குன்றவில்லுடையா
யேற்றுக்கொடியுடையாயிறைவா கச்சியேகம்பனே. (உஉ)

பெண்ணாகிவந்தொருமாயப்பிசாசம்பிடித்தெட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்

புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தேனிறைவாகச்சியேகம்பனே. (உ௩)

நாவாரவேண்டும்விதஞ்சொல்லுவாருனைநான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந்தோக்கவுண்பார்கள்கைதானவறண்டாற்
போய்வாருமென்றுநடுத்தலைக்கேகுட்டும்பூவையருந்
தீவார்தலைவிதியோவிறைவாகச்சியேகம்பனே. (உ௪)

கல்லார்சிவகதைநல்லோர்தமக்குக்கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார்குருசொன்னபடி
நில்லாரறத்தைநினையார்நின்னாமநினைவிற்சற்று
மில்லாரிருந்தென்னிறந்தென்புகல்கச்சியேகம்பனே. (உ௫)

வானமுதத்தின்சுவையறியாதவர்வண்கனியின்
றேனமுதத்தின்சுவையெண்ணல்போலத்தனித்தனியே
தேனமுதத்தின்றெளிவாயஞானஞ்சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவைநன்றல்லவோகச்சியேகம்பனே. (உ௬)

ஊற்றைச்சரீரத்தையாபாசக்கொட்டிலையூன்பொதிந்து
பீற்றற்றுருத்தியைச்சோறிடுந்தோற்பையைப்பேசரிய
காற்றிற்பொதிந்தநிலையற்றபாண்டத்தைக்காதல்செய்தே
யேற்றுத்திரிந்துவிட்டேனிறைவாகச்சியேகம்பனே. (உ௭)

சொல்லால்வருங்குற்றஞ்சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினைபார்வையிற்பாவங்கள்புண்ணியநூ
லல்லாதகேள்வியைக்கேட்டிடுந்தீங்குகளாயவுமற்
றெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (உ௮)

முட்டற்றமஞ்சளையெண்ணெயிற்கூட்டிமுகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப்பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில்வெளிமயக்கேசெயும்பாவையர்மே
லிட்டத்தைநீதவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே. (உ௯)

பிறந்துமண்மீதிற்பிணியேகுடிகொண்டுபேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின்மேன்மயலாகிப்புன்மாதருக்குட்

பறந்துழன்றேதடுமாறிப்பொன்றேடியப்பாவையர்க்கீந்
திறந்திடவோபணித்தாயிறைவாகச்சியேகம்பனே. (௩0)

பூதங்களற்றுப்பொறியற்றுசாரைம்புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப்பேராசைதானற்றுப்பின்முனற்றுக்
காதங்கரணங்களுமற்றவானந்தக்காட்சியிலே
யேதங்களைந்திருப்பேனிறைவாகச்சியேகம்பனே. (௩௧)

நல்லாயெனக்குமனுவொன்றுதந்தருண்ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதியல்பூசைசெயஞ்
சொல்லார்நற்கோயினியமம்பலவகைத்தோத்திரமு
மெல்லாமுடிந்தபின்கொல்லுகண்டாய்கச்சியேகம்பனே. (௩௨)

சடக்கடத்துக்கிரைதேடிப்பலவுயிர்தன்னைக்கொன்று
விடக்கடித்துக்கொண்டிறுமாந்திருந்துமிகமெலிந்து
படக்கடித்தின்றுழல்வார்கடமைக்கரம்பற்றிநம
னிடக்கடிக்கும்பொழுதேதுசெய்வார்கச்சியேகம்பனே. (௩௩)

நாறுமுடலைநறிப்பொதிசோற்றினைநான்றினமுஞ்
சோறுங்கறியுநிரப்பியபாண்டத்தைத்தோகையர்தங்
கூறுமலமுமிரத்தமுஞ்சேருங்குழியில்விழா
தேறும்படியருள்வாயிறைவாகச்சியேகம்பனே. (௩௪)

சொக்கிட்டரமனைப்புக்குட்டிருடியதுட்டர்வந்து
திக்குற்றமன்னரைக்கேட்பதுபோற்சிவநிந்தைசெய்து
மிக்குக்குருலிங்கசங்கமநிந்தித்துவீடிச்சிக்கு
மெக்குப்பெருத்தவர்க்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. ()

விருந்தாகவந்தவர்தங்களுக்கன்னமிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெறவாழ்வார்நின்னுமத்தைப்போற்றிநித்த
மருந்தாமுலைப்பங்கரொன்னுதைபாதகரம்புவியி
லிருந்தாவதேதுகண்டாயிறைவாகச்சியேகம்பனே. (௩௬)

எல்லாமறிந்துபடித்தேயிருந்தெமக்குள்ளபடி
வல்லானறிந்துளனென்றுணராதுமதிமயங்கிச்

சொல்லான்மலர்ந்துறுசூழ்விதியின்படிதூக்கித்தூப்பி
னெல்லாஞ்சிவன்செயலேயென்பர்காண்கச்சியேகம்பனே. ()

பொன்னைநினைந்துவெகுவாகத்தேடுவர்பூவையன்று
டன்னைநினைந்துவெகுவாயுருகுவர்தாரணியி
லுன்னைநினைந்திங்குனைப்பூசியாதவுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டாயிறைவாகச்சியேகம்பனே. (௩௮)

கடுஞ்சொல்லின்வம்பரையீனரைக்குண்டரைக்காமுகரைக்
கொடும்பவமேசெயுநிர்மூடர்தம்மைக்குவலயத்து
ணெடும்பனைபோலவளர்ந்துநல்லோர்தநெறியறியா
விடும்பரையேன்வகுத்தாயிறைவாகச்சியேகம்பனே. (௩௯)

கொன்றேனனேகமுயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்று
தின்றேனதன்றியுந்தீங்குசெய்தேனதுதீர்கவென்றே
நின்றேனின்சன்னிதிக்கேயதனாற்குற்றநீபொறுப்பா
யென்றேயுனைநம்பினேனிறைவாகச்சியேகம்பனே. (௪௦)

---

## திருவேகம்பவிருத்தம்.

அன்னையெத்தனையெத்தனையன்னையோ வப்பனெத்தனையெத்தனையப்பனோ, பின்னையெத்தனையெத்தனைபெண்டிரோ பிள்ளையெத்தனை யெத்தனைபிள்ளையோ, முன்னையெத்தனையெத்தனைசென்மமோமூடனாயடியேனுமறிந்திலே, னின்னமெத்தனையெத்தனைசென்மமோ வென்செய்வேன்கச்சியேகம்பநாதனே.

---

## திருத்தில்லை.

காம்பிணங்கும்பணைத்தோளார்க்கும் பொன்னுக்குங்காசினிக்குந், தாம்பிணங்கும்பலவாசையும்விட்டுத்தனித்துச்செத்துப், போம்பிணந்தன்னைத்திரளாகக்கூடிப்புரண்டினிமேற், சாம்பிணங்கத்துதையோவென்செய்வேன்றில்லைச்சங்கரனே. (௧)

சோறிடுநாடுதுணிதருங்குப்பைதொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந்தீவினையெப்பொழுது
நீறிடுமேனியர்சிற்றம்பலவர்நிருத்தங்கண்டா
னூறிடுங்கண்களுருகிடுநெஞ்சமென்னுள்ளமுமே. (௨)

அழலுக்குள்வெண்ணெயெனவேயுருகிப்பொன்னம்பலத்தார்
நிழலுக்குணின்றுதவமுஞற்றாமனிட்டூரமின்னார்
குழலுக்கிசைந்தவகைமாலைகொண்டுகுற்றேவல்செய்து
விழலுக்குமுத்துலையிட்டிறைத்தேனென்விதிவசமே. (௩)

ஓடாமற்பாழுக்குழையாமலோரமுரைப்பவர்பாற்
கூடாமனல்லவர்கூட்டம்விடாமல்வெங்கோபநெஞ்சி
னாடாமனன்மைவழுவாமலின்றைக்குநாளைக்கென்று
தேடாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௪)

பாராமலேற்பவர்க்கில்லையென்னாமற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள்வந்தணுகாமன்மனமயர்ந்து
பேராமற்சேவைபிரியாமலன்புபெருதவரைச்
சேராமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௫)

கொல்லாமற்கொன்றதைத்தின்னாமற்குத்திரங்கோள்களவு
கல்லாமற்கைதவரோடிணங்காமற்கனவிலும்பொய்
சொல்லாமற்சொற்களைக்கேளாமற்றோகையர்மாயையிலே
செல்லாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௬)

முடிசார்ந்தமன்னருமற்றுமுள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்துமண்ணாவதுங்கண்டுபின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வைநினைப்பதல்லாற்பொன்னினம்பலவ
ரடிசார்ந்துநாமுய்யவேண்டுமென்றேயறிவாரில்லையே. (௭)

காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்சியிற்
சாலவுபாதிபசிதாகமாகுமுற்சஞ்சிதமா
மாலையுபாதிதுயில்காமமாமிவைமாற்றிவிட்டே
யாலமுகந்தருளம்பலவாவென்னையாண்டருளே. (௮)

ஆயும்புகழ்த்தில்லையம்பலவாணரருகிற்சென்றும்
பாயுமிடபங்கடிக்குமரவம்பின்பற்றிச்சென்றும்
பேயுங்கணமும்பெருந்தலைப்பூதமும்பின்றொடரும்
போயென்செய்வாய்மனமேபிணக்காடவர்போமிடமே. (௯)

ஓடுமெடுத்ததளாடையுஞ்சுற்றியுலாவிமெள்ள
வீடுகடோறும்பலிவாங்கியேவிதியற்றவர்போ
லாடுமருட்கொண்டிங்கம்பலத்தேநிற்குமாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்னகாண்சிவகாமசவுந்தரியே. (௧௦)

ஊட்டுவிப்பானுமுறக்குவிப்பானுமிங்கொன்றொடொன்றை
மூட்டுவிப்பானுமுயங்குவிப்பானுமுயன்றவினை
காட்டுவிப்பானுமிருவினைப்பாசக்கயிற்றின்வழி
யாட்டுவிப்பானுமொருவனுண்டேதில்லையம்பலத்தே. (௧௧)

அடியார்க்கெளியவரம்பலவாணரடிபணிந்தால்
மடியாமற்செல்வவரம்பெறலாம்வையமேழளந்த
நெடியோனும்வேதனுங்காணாததித்தநிமலனருட்
குடிகாணுநாங்களவர்காணுமெங்கள்குலதெய்வமே. (௧௨)

தெய்வச்சிதம்பரதேவாவுன்சித்தந்திரும்பிவிட்டாற்
பொய்வைத்தசொப்பனமாமன்னர்வாழ்வும்புவியுமெங்கே
மெய்வைத்தசெல்வமெங்கேமண்டலீகர்தம்மேடையெங்கே
கைவைத்தநாடகசாலையெங்கேயிதுகண்மயக்கே. (௧௩)

உடுப்பானும்பாலனமுண்பானுமுய்வித்தொருவர்தம்மைக்
கெடுப்பானுமேதென்றுகேள்விசெய்வானுங்கெதியடங்கக்
கொடுப்பானுந்தேகியென்றேற்பானுமேற்கக்கொடாமனின்று
தடுப்பானுநீயல்லையோதில்லையானந்ததாண்டவனே. (௧௪)

வித்தாரம்பேசினுஞ்சோங்கேறினுங்கம்பமீதிருந்து
தத்தாவென்றோதிப்பவுரிகொண்டாடினுந்தம்முன்றம்பி
யொத்தாசைபேசினுமாவதுண்டோதில்லையுண்ணிறைந்த
கத்தாவின்சொற்படியல்லாதுவேறில்லைகண்மங்கையே. (௧௫)

பிறவாதிருக்கவரந்தரல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாணன்மருந்துனக்கே. (கசு)

தவியாதிருநெஞ்சமேதில்லைமேவியசங்கரனைப்
புயார்க்கிருக்கின்றனாளுகரனைப்புராந்தகனை
யவியாவிளக்கைபொன்னம்பலத்தாடியையைந்தெழுத்தாற்
செவியாமனீசெவித்தாற்பிறவாமுத்திசித்திக்குமே. (கஎ)

நாவின்மறைப்பொருளம்பலவாணனைநம்பியவர்
பாவிலொருதரஞ்சேவிக்கொணுதிருப்பார்க்கருங்கல்
மேலிலெடுத்தவர்கைகிலங்கைத்தைப்பர்மீண்டுமொரு
காவினிழுத்துவர்கிட்டியுந்தாம்வந்துகட்டுவரே. (கஅ)

ஆற்றோடுதும்பையணிந்தாடுமம்பலவாணர்தமைப்
போற்றாதவர்க்கடையாளமுண்டேயிந்தப்பூதலத்திற்
சோற்றாவியற்றுச்சுகமற்றுச்சுற்றத்துத்துணியுமற்றே
பேற்றாலும்பிச்சைகிடையாமலேக்கற்றிருப்பர்களே. (ககூ)

அத்தனைமுப்பத்துமுக்கோடிதேவர்க்கதிபதியை
நித்தனையம்மைசிவகாமசுந்தரிநேசனையெங்
கத்தனைப்பொன்னம்பலத்தாடுமையனைக்காணக்கண்க
ளெத்தனைகோடியுகமோதவஞ்செய்திருக்கின்றவே. (உ0)

## திருச்செங்காடு.

நெருப்பானமேனியர்செங்காட்டிலாத்திநிழலருகே
யிருப்பார்திருவுளமெப்படியோவின்னமென்னையன்னைக்
கருப்பாசயக்குழிக்கேதள்ளுமோகன்னன்காணரிய
திருப்பாதமேதருமோதெரியாதுசிவன்செயலே. (க)

## திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்சொருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்றுவேண்டுவன்யான்

செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே. (௧)

சுடப்படுவாரறியார்புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற்றென்னொற்றியூரன்றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பதநந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமேவிதியேட்டைக்கிழிப்பதுவே. (௨)

## திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்னகாற்றேபுசித்தென்னகந்தைசுற்றி
யோடேயெடுத்தென்னவுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோர்
நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர்நாரியர்பால்
வீடேயிருப்பினுமெய்ஞ்ஞானவீட்டின்பமேவுவரே. (௧)

தாயும்பகைகொண்டபெண்டிர்பெரும்பகைதன்னுடைய
சேயும்பகையுறவோரும்பகையிச்செகமும்பகை
யாயும்பொழுதிலருஞ்செல்வநீங்கிலிங்காதலினாற்
றோயுநெஞ்சேமருதீசர்பொற்பாதஞ்சுதந்திரமே. (௨)

## திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடற்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோதமியேனுடல்வீழுமிட
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணைநின்பதமே. (௧)

## திருக்காளத்தி.

பத்தும்புகுந்துபிறந்துவளர்ந்துபட்டாடைசுற்றி
முத்தும்பவளமும்பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண்கயிலாபுரிக்காளத்தியே. (௧)

பொன்னாற்பிரயோசனம் பொன்படைத்தாற்கொண்டுபொன்
படைத்தோன், றன்னாற்பிரயோசனம்பொன்னுக்கங்கேதுவன்

டத்தன்மையைப்போ, லுன்றற்பிரயோசனம்வேணதெல்லா
மூண்டுனைப்பணியு, மென்றற்பிரயோசனமே துண்டுகாளத்தி
யீசுரனே. (உ)

வாளாண்மகவரிந்தூட்டவல்லேனல்லன்மாதுசொன்ன
சூளாலிளமைதுறக்கவல்லேனல்லன்றொண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்லனினிச்சென்
றாளவதெப்படியோதிருக்காளத்தியப்பருக்கே. (௩)

முப்போதுமன்னம்புசிக்கவுந்தூங்கவுமோகத்திற்
செப்போதிளமுலையாருடன்சேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன்றிருக்காளத்தியீசுரனே. (ச)

இரைக்கேயிரவும்பகலுந்திரிந்திங்கிளைத்துமின்னா
ரைக்கேயவலக்குழியருகேயசும்பார்ந்தொழுகும்
புரைக்கேயுழலுந்தமியேனையாண்டருள்பொன்முகலிக்
கரைக்கேகல்லாலநிழற்கீழமர்ந்தருள்காளத்தியே. (ரு)

நாறுங்குருதிச்சலதாரைதோற்புரைநாடொறுஞ்சீ
யூறுமலக்குழிகாமத்துவாரமொளித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப்பந்தரங்கத்துள்சிற்றின்பம்விட்
டேறும்புதந்தருவாய்திருக்காளத்தியீசுரனே (சா)

## கைலாயம்.

கான்சாயும்வெள்ளிமலைக்கரசேநின்கழனம்பினே
னூன்சாயுஞ்சென்மமொழித்திடுவாய்கரவூரனுக்காய்
மான்சாயச்செங்கைமழுவலஞ்சாயவனைந்தகொன்றைத்
தேன்சாயநல்லதிருமேனிசாய்த்தசிவக்கொழுந்தே. (க)

இல்லந்துறந்துபசிவந்தபோதங்கிரந்துதின்று
பல்லுங்கறையற்றுவெள்வாயுமாயொன்றிற்பற்றுமின்றிச்
சொல்லும்பொருளுமிழந்துசுகானந்தத்தூக்கத்திலே
யல்லும்பகலுமிருப்பதென்றோகயிலாயத்தனே. (உ)

சினந்தனையற்றுப்பிரியமுந்தானற்றுச்செய்கையற்று
நினைந்ததுமற்றுநினையாமையுமற்றுநிர்க்குணத்துத்
தனந்தனியேயிருந்தானந்தநித்திரைதான்கொண்டு
வனந்தலிலென்றிருப்பேனத்தனேகயிலாயத்தனே. (௩)

கையாரவேற்றுநின்றங்கனந்தின்றுகளிக்குமைய்யுந்
தையாருடுத்துநின்சன்னிதிக்கேவந்துசகத்தருமெ
மெய்யாரநிற்பணிந்துள்ளேயுரோமஞ்சிலிர்சிலிர்ப்ப
வையாவென்றோலமிடுவதென்றோகயிலாயத்தனே. (௪)

நீருர்த்ததேமேனியுரோமஞ்சிலிர்த்துளநெக்குநெக்குச்
சேருய்க்கசிந்துகசிந்தேயுருகிநின்சீரடிக்கே
மாறாத்தியானமுற்றானந்தமேற்கொண்டுமார்பிற்கண்ணீ
ராறாய்ப்பெருகக்கிடப்பதென்றோகயிலாயத்தனே. (௫)

செல்வரைப்பின்சென்றுசங்கடம்பேசித்தினந்தினமும்
பல்லினைக்காட்டிப்பரிதவியாமற்பரானந்தத்தி
னெல்லையிற்புக்கிடவேகாந்தமாயெனக்காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பேனத்தனேகயிலாயத்தனே. (௬)

மந்திக்குருளையொத்தேநினையாமலென்வழக்கறிந்து
சிந்திக்குஞ்சிந்தையையானென்செய்வேனெனைத்தீங்ககற்றிப்
புந்திப்பரிவிற்குருளையையேந்தியபூனையைப்போ
லெந்தைக்குரியவன்காணத்தனேகயிலாயத்தனே. (௭)

வருந்தேன்பிறந்துமிறந்துமயக்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுந்தேன்றிகைப்புற்றுவாடிடுவ
விருந்தேனினியவர்கூட்டம்விட்டேனினியஞ்செழுத்தா
மருந்தேனருந்துவனின்னருளாற்கயிலாயத்தனே. (௮)

மதுரை.

விடப்படுமோவிப்பிரபஞ்சவாழ்க்கையைவிட்டுமனந்
திடப்படுமோநின்னருளின்றியேதினையேனுமைய.

கடப்படுமோவற்பர்வாயிலிற்சென்றுகண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்கநாதாசவுந்தரபாண்டியனே. (௧)

## பொது.

உடைகோவணமுண்டுறங்கப்புறந்திண்ணையுண்டுணவிங்
கடைகாயிலையுண்டருந்தத்தண்ணீருண்டருந்துணைக்கே
விடையேறுமீசர்திருநாமமுண்டிந்தமேதினியில் கே.
வடகோடுயர்ந்தென்னதென்கோடுசாய்ந்தென்ன வான்பிறைக்

வீடுநமக்குத்திருவாலங்காடுவிமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாதபாத்திரமோங்குசெல்வ
நாடுநமக்குண்டுகேட்டதெல்லாந்தரநன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொலவேயொருவருமிங்கில்லையே. (௨)

நாடிக்கொண்டசைநாட்டமுற்றுயிலைநாதாடி
தேடிக்கொண்டாடித்தெளிந்தாயிலைசெகமாயைவந்து
மூடிக்கொண்டோமென்றுங்காமாயுதங்கண்முனிந்தவென்றும்
பீடிப்பையோநெஞ்சமேயுனைப்போலிலைப்பித்தர்களே. (௩)

கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக் கருத்தொன்றெண்
ணப், பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழு
மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்கவிரும்புமியான்
செய்கின்றபூசையெவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே. (௪)

கண்ணுண்டுகாணக்கருத்துண்டுநோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச்செவியுண்டுகேட்கப்பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்தவெதிர்நிற்கவீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோகெடுவீரிந்தமானிடமே. (௫)

சொல்லிலுஞ்சொல்லின்முடிவிலும்வேதச்சுருதியிலு
மல்லிலுமாசற்றவாகாயந்தன்னிலுமாய்ந்துவிட்டோ
ரில்லிலுமன்பரிடத்திலுமீசனிருக்குமிடங்
கல்லிலுஞ்செம்பிலுமோவிருப்பானெங்கள்கண்ணுதலே. (௬)

வினைப்போகமேயொருதேகங்கண்டாய்வினைதானொழிந்தாற்
றினைப்போதளவுநில்லாதுகண்டாய்சிவன்பாதநினை

நினைப்போரைமேவுநினையாரைநீங்கிநெறியினின்று
லுனைப்போலொருவருண்டோமனமேயெனக்குற்றவரே. (எ)

பட்டைக்கிழித்துப்பருவூசிதன்னைப்பரிக்கெடுத்து
முட்டச்சுருட்டியென்மொய்குழலாள்கையின்முன்கொடுத்துக்
கட்டியிருந்தகனமாயக்காரிதன்காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோவிங்ஙனேசிவன்மீண்டதுவே. (அ)

ஊதுற்றகொங்கையுமாருங்கலவியுஞ்சூழ்பொருளும்
போதுற்றபூசலுக்கென்செயலாஞ்செய்தபுண்ணியத்தாற்
றீதற்றமன்னவன்சிந்தையினின்றுதெளிவதற்கோ
காதற்றவூசியைத்தந்துவிட்டாரென்றன்கைதனிலே. (கூ)

வாதுற்றதிண்புயரண்ணாமலையார்மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும்புகலுநெஞ்சேயிந்தப்பூதலத்திற்
றீதுற்றசெல்வமென்றேடிப்புதைத்ததிரவியமென்
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. (க0)

வேதத்தினுட்பொருண்மண்ணாசைமங்கையைவிட்டுவிட்டுப்
போதித்தவன்மொழிகேட்டிலையோசெய்தபுண்ணியத்தா
லாதித்தன்சந்திரன்போலேவெளிச்சமதாம்பொழுது
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. (கக)

மனையாளுமக்களும்வாழ்வுந்தனமுந்தன்வாசன்மட்டே
யினமானசுற்றமயானமட்டேவழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகிலுமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே. (கஉ)

அத்தமும்வாழ்வுமகத்துமட்டேவிழியம்பொழுக
மெத்தியமாதரும்வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத்தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப்புண்ணியபாவமுமே. (கங)

சியுங்குருதிச்செழுநீர்வழும்புஞ்செறிந்தெழுந்து
பாயும்புடைவையொன்றில்லாதபோதுபகலிரவா

யீயுமெறும்புபுகுகின்றயோனிக்கிரவுபகன்
மாயுமனிதரைமாயாமல்வைக்கமருந்தில்லையே. (௧௪)

சீதப்பனிக்குண்டுசிக்கெனக்கந்தைதினமிரந்து
நீதுய்க்கச்சோறுமனைதோறுமுண்டுநினைவெழுந்தால்
வீதிக்குணல்லவிலைமாதருண்டிந்தமேதினியி
லேதுக்குநீசலித்தாய்மனமேயென்றும்புண்படவே. (௧௫)

ஆறுண்டுதோப்புண்டணிவீதியம்பலந்தானுமுண்டு
நீறுண்டுகந்தைநெடுங்கோவணமுண்டுநித்தநித்த
மாறுண்டிலாவிமயங்குநெஞ்சேமனைதோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின்சும்மாவிருக்கச்சுகமுமுண்டே. (௧௬)

உடுக்கக்கவிக்கக்குளிர்காற்றுவெய்யிலொடுங்கிவந்தாற்
றடுக்கப்பழையவொருவேட்டியுண்டுசகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணையெங்கெங்குமுண்டுபசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டுநெஞ்சேநமக்குக்குறைவில்லையே. (௧௭)

மாடுண்டுகன்றுண்டுமக்களுண்டென்றுமகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படிகேட்டுவிட்டோமினிக்கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளேயெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார்நமக்குத்துணையுமுண்டே. (௧௮)

மாத்தானவத்தையுமாயாபுரியின்மயக்கத்தையு
நீத்தார்தமக்கொருநிட்டையுண்டோநித்தனன்புகொண்டு
வேர்த்தாற்குளித்துப்பசித்தார்புசித்துவிழித்துயின்று
பார்த்தாலுலகத்தவர்போலிருப்பர்பற்றற்றவரே. (௧௯)

ஒன்றென்றிருதெய்வமுண்டென்றிருவுயர்செல்வமெல்லா
மன்றென்றிருபசித்தோர்முகம்பார்நல்லறமுநட்பு
நன்றென்றிருநடுநீங்காமலேநமக்கிட்டபடி
யென்றென்றிருமனமேயுனக்கேயுபதேசமிதே. (௨௦)

நாட்டமென்றேயிருசற்குருபாதத்தைநம்புபொம்ம
லாட்டமென்றேயிருபொல்லாவுடலையடர்ந்தசந்தைக்

கூட்டமென்றேயிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிருநெஞ்சேயுனக்குபதேசமிதே. (௨௧)

என்செயலாவதியாதொன்றுமில்லையினித்தெய்வமே
யுன்செயலேயென்றுணரப்பெற்றேனிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினையாதொன்றுமில்லைப்பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோவிங்ஙனேவந்துமூண்டதுவே. (௨௨)

திருவேடமாகித்தெருவிற்பயின்றெனைத்தேடிவந்து
பரிவாகப்பிச்சைபகருமென்றனைப்பதம்பணிந்தேன்
கருவாகுமேதக்கடற்கரைமேவக்கருதுமென்னை
யுருவாக்கிக்கொள்ளவல்லோவிங்ஙனேசிவனுற்றதுவே. (௨௩)

விட்டேனுலகம்விரும்பேனிருவினைவீணருடன்
கிட்டேனவருரைகேட்டுமிரேன்மெய்கெடாதநிலை
தொட்டேன்சுகதுக்கமற்றுவிட்டேன்றொல்லைநான்மறைக்கு
மெட்டேனெனும்பரமென்னிடத்தேவந்திங்கெய்தியதே. (௨௪)

அட்டாங்கயோகமுமாதாரமாறுமவத்தையைந்தும்
விட்டேறிப்போனவெளிதனிலேவியப்பொன்றுகண்டேன்
வட்டாகிச்சம்மதிப்பாலூறலுண்டுமகிழ்ந்திருக்க
வெட்டாதபேரின்பமென்னைவிழுங்கியிருக்கின்றதே. (௨௫)

எரியெனக்கென்னும்புழுவோவெனக்கென்னுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும்பருந்தோவெனக்கென்னுந்தான்புசிக்க
நரியெனக்கென்னும்புன்னாயெனக்கென்னுமிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தேனிதனாலென்னபேறெனக்கே. (௨௬)

அண்ணறன்வீதியரசிருப்பாகுமணிபடையோர்
நண்ணுருநாலொன்பதாமவரோவுநண்ணுமிவ்வூர்
துண்ணென்பசிக்குமடைப்பள்ளியானசுகமுமெல்லா
மெண்ணிலிகாலமவமேவிடுத்தனமெண்ணரிதே. (௨௭)

என்பெற்றதாயருமென்னைப்பிணமென்றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென்றுசொல்லிப் புலம்பிவிட்டார்

கொன்பெற்றனைமந்தரும்பின்வலம்வந்துகுடமுடைத்தா
ருன்பற்றொழியவொருபற்றுமில்லையுடையவனே. (௨௮)

கறையற்றபல்லுங்கரித்துணியாடையுங்கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சமும்பொல்லாதவூணும்புறந்திண்ணையுந்
தறையிற்கிடப்புமிரந்துண்ணுமோடுஞ்சகமறியக்
குறைவற்றசெல்வமென்றேகோலமாமறைகூப்பிடுமே. (௨௯)

எட்டுத்திசையும்பதினாறுகோணமுமெங்குமொன்றாய்
முட்டித்ததும்பிமுளைத்தோங்குசோதியைமூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித்தங்கக்கத்தில்வைப்பர்கருத்தில்வையார்
பட்டப்பகலையிரவென்றுகூறிடும்பாதகரே. (௩0)

வாய்நாறுமூழன்மயிர்ச்சிக்குநாறிடுமையிடுங்கண்
பீநாறுமங்கம்பிணவெடிநாறும்பெருங்குழிவாய்ச்
சீநாறும்யோனியழுநாறுமிந்தியச்சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க்கோவிங்ஙனேமனம்பற்றியதே. (௩௧)

உரைக்கைக்குநல்லதிருவெழுத்தைந்துண்டுரைப்படியே
செருக்கித்தரிக்கத்திருநீறுமுண்டுதெருக்குப்பையிற்
றரிக்கக்கரித்துணியாடையுமுண்டெந்தச்சாதியிலு
மிரக்கத்துணிந்துகொண்டேன்குறையேதுமெனக்கில்லையே. ()

ஏதப்பட்டாயினிமேற்படும்பாட்டையிதென்றறிந்து
போதப்பட்டாயில்லைநல்லோரிடஞ்சென்றுபுல்லறிவால்
வாதைப்பட்டாய்மடமாதர்கலவிமயக்கத்திலே
பேதைப்பட்டாய்நெஞ்சமேயுனைப்போலில்லைபித்தருமே. (௩௩)

சுரப்பற்றுவல்வினைசுற்றமுமற்றுத்தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர்கையிணக்கற்றுக்கவலையற்று
வரப்பற்றுநாதனைவாயாரவாழ்த்திமனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோபரமாபரமானந்தமே. (௩௪)

பேய்போற்றிரிந்துபிணம்போற்கிடந்திட்டபிச்சையெல்லா
நாய்போலருந்திநரிபோலுழன்றுநன்மங்கையரைத்

தாய்போற்கருதித்தமர்போலனைவர்க்குந்தாழ்மைசொல்லிச்
சேய்போலிருப்பர்கண்டீருண்மைஞானந்தெளிந்தவரே. (௩௫)

விடக்கேபருந்தின்விருந்தேகமண்டலவீணைவிட்ட
முடக்கேபுழுவந்துறையிடமேநலமுற்றுமிலாச்
சடக்கேகருவிதளர்ந்துவிட்டாற்பெற்றதாயுந்தொடாத்
தொடக்கேயுனைச்சுமந்தேனின்னினேதுசுகமெனக்கே. (௩௬)

அழுதாற்பயனென்னநொந்தாற்பயனென்னவாவதில்லை
தொழுதாற்பயனென்னநின்னையொருவர்சுடவுரைத்த
பழுதாற்பயனென்னநன்மையுந்தீமையும்பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோசலியாதிரென்னெஞ்சே. (௩௭)

செல்வரைப்பின்சென்றுபசாரம்பேசித்தினந்தினமும்
பல்லினைக்காட்டிப்பரிதவியாமற்பரானந்தத்தி
னெல்லையிற்புக்குநல்லேகாந்தமாயெனக்காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பேனலநீழலரும்பொருளே. (௩௮)

ஊரீருமக்கோருபதேசங்கேளுமுடம்படங்கப்
போரீர்சமணைக்கழுவேற்றுநீற்றைப்புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச்சுற்றத்தைநீங்கிச்சகநகைக்க
வேரீருமக்கவர்தாமேதருவரிணையடியே. (௩௯)

நீற்றைப்புனைந்தென்னநீராடப்போயென்னநீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லைமாமறைநூ
லேற்றிக்கிடக்குமெழுகோடிமந்திரமென்னகண்டா
யாற்றிற்கிடந்துந்துறையறியாமலலைகின்றையே. (௪௦)

ஓங்காரமாய்நின்றவத்துவிலேயொருவித்துவந்து
பாங்காமுளைத்தபயனறிந்தாற்பதினாலுலகு
நீங்காமனீங்கிநிறையாநிறைந்துநிறையுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக்கனிவந்தமர்ந்திடுமே. (௪௧)

விதியார்படைப்புமரியாரளிப்புமியன்கயிலைப்
பதியார்துடைப்புநம்பாலணுகாதுபரானந்தமே

கதியாகக்கொண்டுமற்றெல்லாந்துயிலிற்கனவென்றே
மதியாதிருமனமேயிதுகாணன்மருந்துனக்கே. (௬௨)

நாய்க்குண்டுதெண்டுநமக்குண்டுபிச்சைநமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திரபஞ்சாட்சரமதியாமல்வரும்
பேய்க்குண்டுநீறுதிகைப்புண்டுநின்றபிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகன்றன்னருணோக்கங்கணோக்குதற்கே.

நேமங்கணிட்டைகள்வேதங்களாகமநீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ்சந்திசெபமந்த்ரயோகநிலை
நாமங்கள்சந்தனம்வெண்ணீறுபூசிநலமுடனே
சாமங்கடோறுமிவர்செய்யும்பூசைகள்சர்ப்பனையே. (௬௪)

நானெத்தனைபுத்திசொன்னாலுங்கேட்டிலைநன்னெஞ்சமே
யேனிப்படிக்கெட்டுழலுகின்றாயினியேதுமிலா
வானத்தின்மீனுக்குவன்றூண்டிலிட்டவகையதுபோற்
போனத்தைமீளநினைக்கின்றனையென்னபுத்தியிதே. (௬௫)

அஞ்சக்கரமெனுங்கோடாலிகொண்டிந்தவைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டைவேரறவெட்டி வளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச்சதாசிவமென்கின்றவித்தையிட்டுப்
புஞ்சக்களைபறித்தேன்வளர்த்தேன்சிவபோகத்தையே. (௬௬)

தாயாருஞ்சுற்றமும்பெண்டிருங்கைவிட்டுத்தாழ்ந்திடுநா
ணீயாருநானுமெனப்பகர்வாரந்தநேரத்திலே
நோயாரும்வந்துகுடிகொள்வரோகொண்டநோயுமொரு
பாயாருநீயுமல்லாற்பின்னையேதுநட்பாமுடலே. (௬௭)

ஆயும்பொழுதுமயிர்க்கால்கடோறுமருங்கிருமி
தோயுமலக்குட்டையாகியகாயத்தைச்சுட்டுவிட்டாற்
பேயுநடனமிடுங்கடமாமென்றுபேசுவதை
நீயுமறிந்திலையோபொருட்டேடிநினைந்தனையே. (௬௮)

பூணும்பணிக்கல்லபொன்னுக்குத்தானல்லபூமிதனைக்
காணும்படிக்கல்லமங்கையர்க்கல்லநற்காட்சிக்கல்ல

சேணுங்கடந்தசிவனடிக்கல்லவென்சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்கவடியேன்படுந்துயர்சற்றல்லவே. (௪௯)

வெட்டாதசக்கரம்பேசாதமந்திரம்வேறொருவர்க்
கெட்டாதபுட்பமிறையாததீர்த்தமினிமுடிந்து
கட்டாதலிங்கங்கருதாதநெஞ்சங்கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோகுருநாதன்மொழிந்ததுவே. (௫௦)

எருமுட்டைபிட்கினுதிர்ந்திடுஞ்செல்லுக்கெவரழுவார்
கருமுட்டைபுக்குக்கழலகன்றாய்கனதுக்கமதாய்ப்
பெருமுட்டுப்பட்டவர்போலழும்பேதையிர்பேத்துகிறீ
ரொருமுட்டும்வீட்டுமரணமென்றைக்குமோதுமினே. (௫௧)

மையாடுகண்ணியுமைந்தரும்வாழ்வுமனையுஞ்செந்தீ
யையாநின்மாயையுருவெளித்தோற்றமகிலத்துளே
மெய்யாயிருந்ததுநாட்செலநாட்செலவெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க் கனவாய்மெல்லப்போனதுவே.

ஆயாய்பலகலையாய்ந்திடுந்தூயவருந்தவர்பாற்
போயாகிலுமுண்மையைத்தெரிந்தாயில்லைபூதலத்தில்
வேயார்ந்ததோளியர்காமவிகாரத்தில்வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின்றனைமனமேயென்னபித்துனக்கே. (௫௩)

அடியாருறவுமரன்பூசைநேசமுமன்புமன்றிப்
படிமீதில்வேறுபயனுளதோபங்கயன்வகுத்த
குடியானசுற்றமுந்தாரமும்வாழ்வுங்குயக்கலங்கள்
தடியாலடியுண்டவாறொக்குமென்றினஞ்சார்ந்திலரே. (௫௪)

ஆங்காரப்பொக்கசங்கோபக்களஞ்சியமாணவந்தா
னீங்காவரன்மனைபொய்வைத்தகூடம்விண்ணீடிவளர்
தேங்கார்பெருமதிற்காமவிலாசமித்தேகங்கந்தல்
பாங்காயுனைப்பணிந்தெப்படிஞானம்பலிப்பதுவே. (௫௫)

ஒழியாப்பிறவியெடுத்தேங்கியேங்கியுழன்றநெஞ்சே
யழியாப்பதவிக்கவுடதங்கேட்டியனுதியனை

மழுமான்கரத்தனைமால்விடையானைமனத்திலுன்னி
விழியாற்புனல்சிந்திவிம்மியழுநன்மைவேண்டுமென்றே.(௫௬)

நாய்க்கொருசூலுமதற்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங்காஞ்சிரங்கா
யாக்குவராரதருந்துவராரதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லாலேதுக்காமிதைச்செப்புமினே. (௫௭)

கச்சிற்கிடக்குங்கனதனத்திற்கடைக்கண்கள்பட்டே
யிச்சித்திருக்கின்றவேழைநெஞ்சேயிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடியுண்ணாமுலைபங்கர்பாதத்திலே
தைச்சுக்கிடமனமேயொருகாலுந்தவறில்லையே. (௫௮)

மானார்விழியைக்கடந்தேறிவந்தனன்வாழ்குருவுங்
கோனாகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை.
போனாலும்பேறிருந்தாலுநற்பேறிதுபொய்யன்றுகா
ணானாலுமிந்தவுடம்போடிருப்பதருவருப்பே. (௫௯)

சற்றாகிலுந்தன்னைத்தானறியாய்தனையாய்ந்தவரை
யுற்றாகிலுமுரைக்கப்பொருந்தாயுனக்கானநிலை
பற்றாய்குருவைப்பணியாய்பரத்தையர்பாலிற்சென்றென்
பெற்றாய்மடநெஞ்சமேயுனைப்போலில்லைபித்தனுமே. (௬௦)

உளியிட்டகல்லையுமொப்பிட்டசாந்தையுமூத்தையறப், புளியிட்டசெம்பையும்போற்றுகிலேனுயர்பொன்னெனவே, யொளியிட்டதாளிரண்டுள்ளேயிருத்துவதுண்மையென்று, வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்றும்வேண்டிலனே(௬௧)

திருச்சிற்றம்பலம்.

## தாயாருக்குத்

### தகனகிரியை செய்கையிற் பாடிய

### வெண்பா.

ஐயிரண்டுதிங்களாவங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதேபரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்திலேந்திக்கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பேனினி. (௧)

முந்தித்தவங்கிடந்துமுந்நூறுநாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனையாதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்துபெற்றதாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன். (௨)

வட்டிலிலுந்தொட்டிலிலுமார்மேலுந்தோண்மேலுங்
கட்டிலிலும்வைத்தென்னைக்காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச்சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன். (௩)

நொந்துசுமந்துபெற்றுநோவாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத்தாழாமே - யந்திபகல்
கையிலேகொண்டென்னைக்காப்பாற்றுதாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டுவேன். (௪)

அரிசியோநானிடுவேனாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்துமகிழாம - லுருகியுள்ள
தேனேயமிர்தமேசெல்வத்திரவியபு
மானேயெனவழைத்தவாய்க்கு. (௫)

அள்ளியிடுவதரிசியோதாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோகூசாமன் - மெள்ள
முகமேன்முகம்வைத்துமுத்தாடியென்றன்
மகனேயெனவழைத்தவாய்க்கு. (௬)

### விருத்தம்.

முன்னையிட்டதீமுப்புரத்திலே
பின்னையிட்டதீதென்னிலங்கையில்

லன்னையிட்டதீயடிவயிற்றிலே
யானுமிட்டதீமூள்கமூள்கவே. (௭)

வெண்பா.

வேகுதேதீயதனில்வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியேனையகோ - மாகக்
குருவிபறவாமற்கோதாட்டியென்னைக்
கருதிவளர்த்தெடுத்தகை. (௮)

வெந்தாளோசோணகிரிவித்தகாநின்பதத்தில்
வந்தாளோவென்னைமறந்தாளோ - சந்ததமு
முன்னையேநோக்கியுகந்துவரங்கிடந்தென்
றன்னையேயீன்றெடுத்ததாய். (௯)

வீற்றிருந்தாளன்னைவீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்றுவெந்துநீறானாள் - பாற்றெளிக்க
வெல்லீரும்வாருங்களேதென்றிரங்காம
லெல்லாஞ்சிவமயமேயாம். (௧௦)

---

மென்றுவிழுங்கிவிடாய்கழிக்கநீர்தேட
லென்றுவிடியுமெனக்கென்கோவே - நன்றி
கருதார்புரமூன்றுங்கட்டழலாற்செற்ற
மருதாவுன்சன்னிதிக்கேவந்து. (௧)

சிற்றம்பலமுஞ்சிவனுமருகிருக்க
வெற்றம்பலந்தேடிவிட்டோமே - நித்தம்
பிறந்திடத்தைத்தேடுதேபேதைமடநெஞ்சங்
கறந்திடத்தைநாடுதேகாண். (௨)

தோடவிழும்பூங்கோதைத்தோகையுனையிப்போது
தேடினவர்போய்விட்டார்தேறியிரு - நாடிநீ
யென்னைநினைத்தாலிடுப்பிலுதைப்பேனு
னுன்னைநினைத்தாலுதை. (௩)

வாசற்படிகடந்துவாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லையண்ணலே - யாசைதனைப்
பட்டிறந்தகாலமெலாம்போதும்பரமேட்டி
சுட்டிறந்தஞானத்தைச்சொல். (௪)

கண்டங்கரியதாங்கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போலவழகியதாங் - தொண்ட
ருடலுருகத்தித்திக்குமோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங்கரும்பு, (௫)

ஓடுவிழுந்துசீப்பாயுமொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன் - கடுவருந்துந்
தேவாதிதேவன்றிருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற்பொடி. (௬)

வாவியெல்லாந்தீர்த்தமணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங்கணநாதர் - பூவுலகி
லீதுசிவலோகமென்றென்றேமெய்த்தவத்தோ
ரோதுந்திருவொற்றியூர். (௭)

நச்சரவம்பூண்டானைநன்றாத்தொழுவதுவு
மிச்சையிலேதானங்கிருப்பதுவும் - பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும்வந்துதிருவாயிலிலே
தூங்குவதுந்தானேசுகம். (௮)

இருக்குமிடந்தேடியென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன் - பெருக்க
வழைத்தாலும்போகேனரனேயென்றேக
மினைத்தாலும்போகேனினி. (௯)

விட்டுவிட்டுப்போகுதுயிர்விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப்போகிறார்சுற்றத்தார் - பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனையேத்துங்கள்போற்றுங்கள்
சொன்னேனதுவேசுகம். (௰)

ஆவியொடுகாயமழிந்தாலுமேதினியிற்
பாவியென்றுநாமம்படையாதே - மேவியசீர்
வித்தாரமுங்கடம்பும்வேண்டாமடநெஞ்சே
செத்தாரைப்போலேதிரி. (கக)

ஆரூரிங்கிருக்கவவ்வூர்த்திருநாளென்
றாரூர்கடோறுமுழலுவீர் - நேரே
யுளக்குறிப்பைநாடாதவூமர்காணீவிர்
விளக்கிருக்கத்தீத்தேடுவீர். (கஉ)

எத்தனையூரெத்தனைவீடெத்தனைதாய்பெற்றவர்க
ளெத்தனைபேரிட்டழைக்கவேனென்றே - னித்த
மெனக்குக்களையாற்றுயேகம்பாசம்பா
வுனக்குத்திருவிளையாட்டோ. (கங)

மண்ணுந்தணலாறவானும்புகையாற
வெண்ணரியதாயுமிளைப்பாறப் - பண்ணுமயன்
கையாறவுமடியேன்காலாறவுங்கண்பா
ரையாதிருவையாறு. (கச)

பின்முடுகுவெண்பா.

இப்பிறப்பைநம்பியிருப்பரோநெஞ்சகமே
வைப்பிருக்கவாயின்மனையிருக்கச் - சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக்கண்மெத்தப்பஞ்சிட்டப்பைக்
கக்கிச்செத்துக்கொட்டக்கண்டு. (கரு)

மேலுமிருக்கவிரும்பினையேவெள்விடையோன்
சீலமறிந்திலையேசிந்தையே - கால்கைக்குக்
கொட்டையிட்டுமெத்தையிட்டுக்குத்திமொத்தப்பட்டவுடல்
கட்டையிட்டுச்சுட்டுவிடக்கண்டு. (கசா)

ஒன்பதுவாய்த்தோற்பைக்கொருநாளைப்போலவே
யன்புவைத்துநெஞ்சேயலைந்தாயே - வன்கழுக்க
டத்தித்தத்திச்சட்டைதட்டிக்கட்டிப்பிட்டுக்
கத்திக்குத்தித்தின்னக்கண்டு. (கஎ)

## வெண்பா.

இன்னம்பிறக்கவிசைவையோநெஞ்சமே
மன்னரிவனொன்றிருந்துவாழ்ந்தவரை - முன்ன
மெரிந்தகட்டைமீதிலிணைக்கோவணத்தை
யுரிந்துருட்டிப்போட்டதுகண்டு. (௧௮)

முதற்சங்கமூதூட்டுமொய்குழலார்தம்மை
நடுச்சங்கநல்விலங்குபூட்டுங் - கடைச்சங்க
மாம்போதனூதுமம்மட்டோவிம்மட்டோ
நாம்பூமிவாழ்ந்தநலம். (௧௯)

பொய்யையொழியாய்புலாலைவிடாய்காளத்தி
யையரோயென்றுயறஞ்செய்யாய் - வெய்ய
சினமேயொழியாய்திருவெழுத்தைந்தோதாய்
மனமேயுனக்கென்னமாண்பு. (௨௦)

எருவாய்க்கிருவிரன்மேலேறுண்டிருக்குங்
கருவாய்க்கோகண்கலக்கப்பட்டாய் - திருவாரூர்த்
தேரோடும்வீதியிலேசெத்துக்கிடக்கின்றாய்
நீரோடுந்தாரைக்காநீ. (௨௧)

மாதாவுடல்சலித்தாள்வல்வினையேன்கால்சலித்தேன்
வேதாவுங்கைசலித்துவிட்டானே - நாதா
விருப்பையூர்வாழ்சிவனேயின்னமோரன்னை
கருப்பையூர்வாராமற்கா. (௨௨)

அத்திமுதலெறும்பீறானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகா - மெத்தப்
பசிக்குதையாபாவியேன்பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோணரோ. (௨௩)

எத்தனைநாள்கூடியெடுத்தசரீரமிவை
யத்தனையுமண்டின்பதல்லவோ - வித்தகனார்
காலைப்பிடித்துமெள்ளக்கங்குல்பகலற்றிடத்தே
மேலைக்குடியிருப்போமே. (௨௪)

எச்சிலென்றுசொல்லியிதமகிதம்பேசாதே
யெச்சிலிருக்குமிடமறியீ - ரெச்சிறனை
யுய்த்திருந்துபார்த்தாலொருமைவெளிப்படும்பின்
சித்தநிராமயமாமே. (௨௫)

காலன்வருமுன்னேகண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்படுமுன்னே - மேல்விழுந்தே
யுற்றாருமுன்னேயூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையேகூறு. (௨௬)

எத்தனைபேர்நட்டகுழியெத்தனைபேர்தொட்டமுலை
யெத்தனைபேர்பற்றியிழுத்தவிதழ் - நித்தநித்தம்
பொய்யடாபேசும்புவியின்மடமாதரைவிட்
டுய்யடாவுய்யடாவுய். (௨௭)

இருப்பதுபொய்போவதுமெய்யென்றெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந்தீங்கினையுன்னாதே - பருத்ததொந்தி
நம்மதென்றுநாமிருப்பநாய்நரிகள்பேய்கழுகு
தம்மதென்றுதாமிருக்குந்தான். (௨௮)

எத்தொழிலைச்செய்தாலுமேதவத்தைப்பட்டாலு
முத்தர்மனமிருக்குமோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளையாடியிருகைவீசிவந்தாலுந்
தாதிமனநீர்க்குடத்தேதான். (௨௯)

மாலைப்பொழுதினறுமஞ்சளரைத்தேகுளித்து
வேலைமினக்கிட்டுவிழித்திருந்து - சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள்பெயரிட்டாள்பெற்றபிள்ளை
பித்தானாலென்செய்வாள்பின். (௩௦)

முற்றிற்று.

சிவமயம்.

திருவெண்காடனென்கிற

பட்டணத்துப்பிள்ளையார்

# முதல்வன் முறையீடு.

———:o:———

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

மூலமறியேன்முடியுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டதுயர்நாடநடக்குதடா.

அறியாமையாமலத்தாலறிவுமுதற்கெட்டனடா
பிரியாவினைப்பயனாற்பித்துப்பிடித்தனடா.

தனுவாதியநான்குந்தானாய்மயங்கினண்டா
மனுவாதிசத்திவலையிலகப்பட்டனடா.

மாமாயையென்னும்வனத்திலலைகிறண்டா
தாமாயுலகனைத்துந்தானுகலங்கிறண்டா. (௫)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

மண்ணாசைப்பட்டேனைமண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசைபெண்ணாசைபோகேனேயென்குதே.

மக்கள்சுற்றத்தாசைமறக்கேனேயென்குதே
திக்கரசாமாசையதுதீரேனேயென்குதே.

வித்தைகற்குமாசையதுவிட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசைசிதையேனேயென்குதே.

மந்திரத்திலாசைமறக்கேனேயென்குதே
சுந்தரத்திலாசைதுறக்கேனேயென்குதே.

கட்டுவர்க்கத்தாசைகழலேனேயென்குதே
செட்டுதனிலாசைசிதையேனேயென்குதே.

மாற்றுஞ்சலவைமறக்கேனேயென்குதே
சோற்றுக்குழியுமின்னுந்தூரேனேயென்குதே. (௧௦)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

ஐந்துபுலனுமடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந்தேறேனேயென்குதே.
காமக்குரோதங்கடக்கேனேயென்குதே
நாமேயரசென்றுநாடோறுமெண்ணுதே.
அச்சமாங்காரமடங்கேனேயென்குதே
கைச்சுமின்னுமானங்கழலேனேயென்குதே.
நீர்க்குமிழியாமுடலைநித்தியமாயெண்ணுதே
ஆர்க்குமுயராசையழியேனேயென்குதே.
மண்ணுக்குக்கண்ணெதிரேகட்டையில்வேகக்கண்டும்
எண்ணுந்திரமாயிருப்போமென்றெண்ணுதே.
அநித்தியத்தைநித்தியமென்றுதரவாயெண்ணுதே
தனித்திருக்கேனென்குதேதனைமறக்கேனென்குதே.
நரகக்குழியுமின்னுநான்புசிப்பேனென்குதே
உரகப்படத்தல்குலைக்கெடுப்பேனென்குதே.
குரும்பைமுலையுங்குடிகெடுப்பேனென்குதே
அரும்புவிழியுமெந்தனாவியுண்பேனென்குதே.
மாதருருக்கொண்டுமறலிவஞ்சமெண்ணுதே
ஆதரவுமற்றிங்கரக்காயுருகிறண்டா.
கந்தனையீன்றருளுங்கன்னிவனநாதா
எந்தவிதத்தினானேறிப்படருவண்டா. (௨௰)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

புல்லாகிப்பூடாய்ப்புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க்கழிந்தநாள்போதாதோ.
கிரியாய்க்கிடமாய்க்கெட்டநாள்போதாதோ
நீரியாயூர்வனவாய்நின்றநாள்போதாதோ.
பூதமொடுதேவருமாய்ப்போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய்வீந்தநாள்போதாதோ.

அன்னைவயிற்றிலழிந்தநாள்போதாதோ
மன்னவனுய்வாழ்ந்துமரித்தநாள்போதாதோ.

தாயாகித்தாரமாய்த்தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச்சென்றநாள்போதாதோ.

நோயுண்ணவேமெலிந்துநொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப்பிறந்தநாள்போதாதோ.

ஊனவுடல்கூன்குருடாயுற்றநாள்போதாதோ
ஈனப்பொசிப்பிலிளைத்தநாள்போதாதோ.

பட்டகளையும்பரதவிப்பும்போதாதோ
கெட்டநாள்கெட்டனென்றுகேளாதும்போதாதோ.

நில்லாமைக்கேயழுதுநின்றநாள்போதாதோ
எல்லாருமென்பாரமெடுத்தநாள்போதாதோ.

காமன்கணையாற்கடைபட்டல்போதாதோ
ஏமன்கரத்தாலிடியுண்டல்போதாதோ.

நான்முகன்பட்டோலைநறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமிதேக்குண்டல்போதாதோ.

உருத்திரனார்சங்காரத்துற்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலைவாவென்றழைத்தையிலை. (௩௨)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

பிறப்பைத்தவிர்த்தையிலைபின்னுகக்கொண்டையிலை
இறப்பைத்தவிர்த்தையிலையென்னென்றுகேட்டையிலை.

பாசமெரித்தையிலைபரதவிப்பைத்தீர்த்தையிலை
பூசியநீற்றைப்புனையென்றளித்தையிலை.

அடிமையென்றுசொன்னையிலையக்குமணிதந்தையிலை
விடுமுலகம்போக்கியுன்றன்வேடமளித்தையிலை.

உன்னிலழைத்தையிலையொன்றாக்கிக்கொண்டையிலை
நின்னடியார்கூட்டத்தினியழைத்துவைத்தையிலை.

ஓங்குபரத்துளொளித்தவடியார்க்கடியான்
ஈங்கோரடியானெமக்கென்றுரைத்தையிலே.
நாமந்தரித்தையிலேநானொழியநின்றையிலே
சேமவருளிலெனைச்சிந்தித்தழைத்தையிலே.
முத்தியளித்தையிலேமோனங்கொடுத்தையிலே
சித்தியளித்தையிலேசீராட்டிக்கொண்டையிலே.
தவிப்பைத்தவிர்த்தையிலேதானுக்கிக்கொண்டையிலே
அவிப்பரியதீயாமென்னுசைதவிர்த்தையிலே.
நின்றநிலையினிறுத்தியெனைவைத்தையிலே
துன்றுங்கரணமொடுதொக்கழியப்பார்த்தையிலே.
கட்டவுலககக்காட்சிக்கட்டொழியப்பார்த்தையிலே
நிட்டையிலேநில்லென்றுநீநிறுத்திக்கொண்டையிலே. (எஉ)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

கடைக்கணருள்தாடாகன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக்கிட்டிவரப்பாரோடா.
காதல்தணியேனேகண்டுமகிழேனே
சாதல்தவிரேனேசங்கடந்தான்தீரேனே.
உன்னைத்துதியேனேஊர்நாடிவாரேனே
பொன்னடியைப்பாரேனேபூரித்துநில்லேனே.
ஓங்காரப்பொற்சிலம்பினுல்லாசம்பாரேனே
பாங்கானதண்டைபலபணியும்பாரேனே.
வீரகண்டாமணியின்வெற்றிதனைப்பாரேனே
சூரர்கண்டுபோற்றுமந்தச்சுந்தரத்தைப்பாரேனே.
இடையில்புலித்தோலிருந்தநலம்பாரேனே
விடையிலெழுந்தருளும்வெற்றிதனைப்பாரேனே
ஆனையுரிபோர்த்தவழகுதனைப்பாரேனே
மானைப்பிடித்தேந்துமலர்க்கரத்தைப்பாரேனே.
மாண்டார்தலைபூண்டமார்பழகைப்பாரேனே
ஆண்டார்நமக்கென்றறைந்துதிரியேனே.

கண்டங்கறுத்துநின்றகாரணத்தைப்பாரேனோ
தொண்டர்குழுவினின்றதோற்றமதைப்பாரேனோ.
அருள்பழுத்தமாமதியாமாநநத்தைப்பாரேனோ
திருநயனக்கடையொளிருஞ்செழுங்கொழுமைபாரேனோ.
செங்குமிளின்றுண்டம்வளர்சிங்காரம்பாரேனோ
அங்கனியைவென்றவதரத்தைப்பாரேனோ.
முல்லைநிலவெறிக்குமூரலொளிபாரேனோ
அல்லார்புருவத்தழகுதனைப்பாரேனோ.
மகரங்கிடந்தொளிரும்வண்மைதனைப்பாரேனோ
சிகரமுடியழகுஞ்செஞ்சடையும்பாரேனோ.
கங்கையொடுதிங்கணின்றகாட்சிதனைப்பாரேனோ
பொங்கரவைத்தான்சடையில்பூண்டவிதம்பாரேனோ.
சரக்கொன்றைபூத்தசடைக்காட்டைபாரேனோ
எருக்கறுகூமத்தையணியேகாந்தம்பாரேனோ.
கொக்கிறகுசூடிநின்றகொண்டாட்டம்பாரேனோ
அக்கினியையேந்திநின்றவானந்தம்பாரேனோ.
தூக்கியகாலுந்துடியடியும்பாரேனோ
தாக்குமுயலகன்மேற்றுண்டவத்தைப்பாரேனோ.
வீசுகரமும்விகசிதமும்பாரேனோ
ஆசையளிக்குமபயகரம்பாரேனோ.
அரிபிரமர்போற்றவமரர்சயசயெனப்
பெரியமமைபாகம்வளர்பேரழகைப்பாரேனோ.
சுந்தரநீற்றின்சொகுசுதனைப்பாரேனோ
சந்திரசேகரனைத்தயவுசெய்தல்பாரேனோ. (௬௨)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

கெட்டநாள்கெட்டாலுங்கிருபையினிப்பாரோடா
பட்டநாள்பட்டாலும்பதமெனக்குக்கிட்டாதோ.

நற்பருவமாக்குமந்தநாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கழன்றவேகாந்தங்கிட்டாதோ.

வாக்கிறந்துநின்றமவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத்தற்சுத்திகிட்டாதோ.

வெந்துயரைத்தீர்க்குமந்தவெட்டவெளிகிட்டாதோ
சிந்தையயைத்தீர்க்குமந்தத்தேறலதுகிட்டாதோ.

ஆனவடியார்க்கடிமைகொளக்கிட்டாதோ
ஊனமறவென்னையுணர்த்துவித்தல்கிட்டாதோ

என்னென்றுசொல்லுவண்டாவென்குருவேகேளடா
பின்னையெனக்குநீயல்லாற்பிறிதிலையே. (௬அ)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

அன்னவிகாரமதுவற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிகாரந்தொலைந்தவிடங்கிட்டாதோ.

உலகவிகாரமொழிந்தவிடங்கிட்டாதோ
மலக்குழுவின்மின்னார்வசியாதுங்கிட்டாதோ.

ஒப்புவமைபற்றொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத்தெளிந்தவிடங்கிட்டாதோ.

வாக்குமனதீதவகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவேநின்றாளிணைக்கேயான்போற்றி. (எ௨)

பட்டணத்தார் முதல்வன் முறையீடு

முற்றும்.

சிவமயம்.

## பட்டணத்துப்பிள்ளையார்

# அருட்புலம்பல்.

---

ஐங்கரனைத்தெண்டனிட்டேனருளடையவேண்டுமென்று
தங்காமல்வந்தொருவன்றற்சொருபங்காட்டியெனைக்.

கொள்ளைப்பிறப்பறுக்கக்கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக்காரணமாய்வந்தாண்டி.

ஆதாரமோராறுமைம்பத்தோரக்ஷரமும்
சூதானகோட்டையெல்லாஞ்சுட்டான்றுரிசறவே.

மெத்தவிகாரம்விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந்தலைகெட்டுவெந்ததடி.

என்னோடுடன்பிறந்தாரெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியேதரித்திருக்கமாட்டேண்டி.

எல்லாரும்பட்டகளமென்றுதொலையமடி
சொல்லியழுதாற்றுயரமெனக்காறுமடி.

மண்முதலாமைம்பூதமாண்டுவிழக்கண்டேண்டி
விண்முதலாமைம்பொறிகள்வெந்துவிழக்கண்டேண்டி.

நீக்காப்புலன்களைந்துநீறாகவெந்ததடி
வாக்காதியைவரையுமாண்டுவிழக்கண்டேண்டி.

மனக்கரணமத்தனையும்வகைவகையேமட்டழிய
இனக்கரணத்தோடேயெரிந்துவிழக்கண்டேண்டி.

ஆத்துமதத்துவங்கள்அடுக்கழியவெந்ததடி
போற்றும்வகையெப்படியோபோதமிழந்தானே.

வித்தியாதத்துவங்கள்வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தையைந்தினையுஞ்சுட்டான்றுரிசறவே.

மூன்றுவகைக்கிளையுமுப்பத்தறுவரையும்
கான்றுவிழச்சுட்டுக்கருவேரறுத்தாண்டி.

குருவாகிவந்தானோகுலமறுக்கவந்தானோ
உருவாகிவந்தானோவுருவழிக்கவந்தானோ.

கேடுவருமென்றறியேன்கெடுமதிகண்டோற்றுமல்
பாடுவருமென்றறியேன்பதியாண்டிருந்தேண்டி.
எல்லாரும்பட்டகளமின்னவிடமென்றறியேன்
பொல்லாங்குதீர்க்கும்பொறியிலியைக்கண்டேண்டி.
உட்கோட்டைக்குள்ளிருந்தாரொக்கமடிந்தார்கள்
அக்கோட்டைக்குள்ளிருந்தாரறுபதுபேர்பட்டார்கள்.
ஒக்கமடிந்ததடியூடுருவவெந்ததடி
கற்கோட்டையெல்லாங்கரிக்கோட்டையாச்சுதடி. (கஎ)

தொண்ணூற்றறுவரையுஞ்சுட்டான்றுரிசறவே
கண்ணீறுபட்டதடிகருவேரறுத்தாண்டி.
ஓங்காரங்கெட்டதடிவுள்ளதெல்லாம்போச்சுதடி
ஆங்காரங்கெட்டதடியடியோடறுத்தாண்டி.
தளையாங்குடிலைமுதல்தட்டுருவவெந்தடி
இளையுமனத்திடும்பையெல்லாமறுத்தாண்டி.
முன்னைவினையெல்லாமுழுதுமறுத்தாண்டி
தன்னையடியவேதானொருத்தியானேண்டி.
என்னையெனானறியவிருவினையுமீடழித்துத்
தன்னையறியத்தலமெனக்குச்சொன்ேண்டி.
தன்னையறிந்தேண்டிதனிக்குமரியானேண்டி
தன்னந்தனியேதனியிருக்கும்பக்குவமோ.
வீட்டிலொருவரில்லைவெட்டவெளியானேண்டி
காட்டுக்கெறிந்தநிலாகனவாச்சேகண்டதெல்லாம்.
நகையாரோகண்டவர்கள்நாட்டுக்குப்பாட்டலவோ
பகையாரோகண்டவர்கள்பார்த்தாருக்கேச்சலவோ.
இந்நிலைமைகண்டாண்டியெங்குமிருந்தாண்டி
கன்னியழித்தாண்டிகற்பைக்குலைத்தாண்டி.
கற்புகுலைத்தமையுங்கருவேரறுத்தமையும்
பொற்புகுலைத்தமையும்போதமிழந்தமையும்.

என்னவினைவருமோவின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொலவெல்லாம்பலித்ததடிசோர்வறவே.

கங்குலைபகலத்திடத்தேகாட்டிக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டிபார்த்தானைப்பார்த்திருந்தேன்.

சாதியிற்கூட்டுவரோசாத்திரத்துக்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லாமுள்ளபடியாச்சுதடி.

என்னகுற்றஞ்செய்தேனோஎல்லாருங்காணமல்
அன்னைசுற்றமெல்லாமறியாரோவம்புவியில்.

கொன்றுணைத்தின்றேனோஇன்றுணைக்கொன்றேனோ
என்றதெல்லாமெண்ணுமிச்சைமறந்தேனோ.

சாதியிற்கூட்டுவரோசமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம்பேச்சுக்கிடமாச்சுதடி.

கண்டார்க்குப்பெண்ணலவோகாணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதெலாமுணல்லாதுண்பர்களோ.

கொண்டார்கள்கொண்டதெல்லாங் கொள்ளாதார்கொள்ளுவ[ரோ
விண்டவர்கள்கண்டவரோகண்டவர்கள்விண்டவரோ.

பண்டாயநான்மறைகள்பாடும்பரிசலவோ
தொண்டாயதொண்டருளந்தோற்றியொடுங்குமதோ.

ஓதவரிதோவொருவருணர்வரிதோ
பேதமறவெங்கும்விளங்கும்பெருமையன்காண். (௩௭)

வாக்குமனமுங்கடந்தமனோலயன்காண்
நோக்கவரியவன்காணுண்ணியரினுண்ணியன்காண்

சொல்லுக்கடங்கான்காண்சொல்லிறந்துநின்றவன்காண்
கல்லுளிருந்தகனலொளிபோனின்றவன்காண்.

குட்டிறந்தபாழதனிற்சுகித்திருக்கச்சொன்னவன்காண்
எட்டிலெழுத்தோவெழுதினவன்கைப்பிழையோ.

சும்மாவிருக்கவைத்தான்சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதெனவடையவிழுங்கினண்டி.

# அருட்புலம்பல்.

பார்த்தவிடமெல்லாம்பரமாகக்கண்டேண்டி
கோத்தநிலைகுலைத்தகொள்கையறியேண்டி.

மஞ்சனமாட்டிமலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழானேனின்றநிலைகாணேண்டி.

பாடிப்படித்திருந்தும்பன்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாமலுருக்கெட்டுவிட்டேண்டி.

மாணிக்கத்துள்ளொளிபோல்மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார்பேசாப்பெருமையன்காண்.

அன்றுமுதலின்றளவுமறியாப்பருவமதில்
என்றும்பொதுவாயிருந்தநிராமயன்காண்.

சித்தவிகாரத்தாலேசின்மயனைக்காணாமல்
புத்திகலங்கிப்புகுந்தேன்பொறிவழியே.

பத்தியறியாமற்பாழிற்கவிழ்ந்தேண்டி
ஒத்தவிடநித்திரையென்றொத்துமிருந்தேண்டி.

செத்தாரையொத்தேண்டிசிந்தைதெளிந்தேண்டி
மற்றொருமில்லையடிமறுமாற்றங்காணேண்டி.

கல்வியல்லகேள்வியல்லகைகாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடியெங்குநிறைந்ததடி.

வாசாமகோசரத்தைமருவியிடங்கொண்டாண்டி
ஆசூசமில்லாண்டியறிவுக்கறிவாண்டி.

பத்துத்திசைக்குமடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்குமிடைவிடாதேகமடி.

தித்திக்கவூறுமடிசித்தமுடையார்க்குப்
பத்திக்கடலுட்பதித்தபரஞ்சோதியடி.

உள்ளுணர்வாய்நின்றவர்தமுணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளதிலேயேறிக்குறையாண்டி.

ஆருந்தலையுமிலான்றோற்றமொடுக்கமிலான்
ஆருமறியாமலகண்டமாய்நின்றடி.

எத்தனையோவண்டத்திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனைபேருண்டாலும்அணுவுங்குறையாண்டி.

வாக்குமனமும்வடிவுமிலாவான்பொருள்காண்
போக்கும்வரவுமிலான்பொருவரியபூரணன்காண். (௬௭)

காட்சிக்கெளியான்காண்கண்டாலுங்காணான்காண்
மாட்சிமனம்வைத்தார்க்குமாணிக்கத்துள்ளொளிகாண்.

வாழ்த்தியவனைவழிபட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியான்காண்சொல்லிறந்தசோதியன்காண்.

ஐயமறுத்தவனையாராய்வாருண்டானால்
வையகத்தேவந்துமலர்ப்பாதம்வைத்திடுவான்.

அணுவுக்குமேருவுக்குமகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்றுஞானக்கரும்பின்றெளிவான்காண்.

எந்நாளுமிந்நாளுமிப்படியாயப்படியாய்ச்
சொன்னாலுங்கேளான்காண்சொத்திரத்திற்கொள்ளான்காண்

ஆத்தாளுக்காத்தாளாமப்பனுக்குமப்பனுமாம்
கோத்தார்க்குக்கோத்தநிலைகொண்டகுணக்கடல்காண்.

இப்போபுதிதோடியெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போதருளறிவுந்தந்தாண்டி.

பற்றற்றார்பற்றாகப்பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டிகூடியிருந்தாண்டி.

வெட்டவெளியிலெனைமேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடிபார்த்திருந்தாரெல்லோரும்.

வாழ்வானவாழ்வெனக்குவந்ததடிவாழாமல்
தாழாமற்றாழ்ந்தேண்டிசற்றுங்குறையாமல்.

பொய்யானவாழ்வெனக்குப்போதுமெனக்காணேண்டி
மெய்யானவாழ்வெனக்குவெறும்பாழாய்விட்டதடி.

கன்னியழித்தவனைக்கண்ணாரக்கண்டேண்டி
என்னியல்புநானறியேனீதென்னமாயமடி.

சொல்லாலேசொல்லுதற்குச்சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்துமிப்போதறியார்கள்.

கண்மாயமிட்டாண்டிகருத்துமிழந்தேண்டி
யுண்மாயமிட்டவனையுருவழியக்கண்டேண்டி.

என்னசொல்லப்போறேனுனிந்தவதிசயத்தை
கன்னியிளங்கமுகுகாய்த்ததடிகண்ணா.

ஆர்ந்தவிடமத்தனையுமருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாஞ்சவாதுமணக்குதடி.

இந்தமணமெங்குமியற்கைமணமென்றறிந்து
அந்தச்சுகாதீதத்தருட்கடலில்மூழ்கினண்டி.

இரும்பினுறைநீர்போல்வெனைவிழுங்கிக்கொண்டாண்டி
அரும்பிலுறைவாசனைபோலன்றேயிருந்தாண்டி.

அக்கினிகற்பூரத்தையறவிழுங்கிக்கொண்டாப்போல்
மக்கினம்பட்டுள்ளேமருவியிருந்தாண்டி.

கடல்நீருமாறும்போற்கலந்துகரைகாணேண்டி
உடலுமுயிரும்போலுட்கலந்துநின்றாண்டி (ருஎ)

பொன்னுமுரைமாற்றும்போற்பொருவரியபூரணன்காண்
மன்னுமனுபூதியடிமாணிக்கத்துள்ளொளிபோல்.

கங்குகரையில்லாண்டிகரைகாணக்கப்பலடி
எங்குமளவில்லாண்டியேகமாய்நின்றாண்டி.

தீவகம்போலென்னைச்சேர்ந்தபரசின்மயன்காண்
பாவகமொன்றில்லாண்டிபார்த்திடமெல்லாம்பரங்காண்

உள்ளார்க்குமுள்ளாண்டியூருமில்லான்பேருமில்லான்
கள்ளப்புலனறுக்கக்காரணமாய்வந்தாண்டி.

அப்பிறப்புக்கெல்லாம்அருளாயமர்ந்தாண்டி
இப்பிறப்பில்வந்தானிவனுருமெய்ப்பொருள்காண்.

நீரொளிபோலெங்குநிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும்பரந்தபராபரன்காண்.

நூலாலுணர்வரியநுண்மையினுநுண்மையன்காண்
பாலாறுசர்க்கரைபோற்பரந்தபரிபூரணன்காண்.

உளக்கண்ணுக்கல்லாதூன்கண்ணாலோருமதோ
விளக்குச்சுடரொளிபோல்மேவியிருந்தாண்டி.

கல்லுளிருந்தகனலொளிபோற்காரணமாய்ப்
புல்லியிருந்தும்பொருவரியபூரணன்காண்.

பொற்பூவும்வாசனைபோற்போதம்பிறந்தார்க்குக்
கற்பூவும்வாசனைபோற்காணுக்கயவருக்கு.

மைக்குழம்புமுத்தும்போல்மருவிமறவாதவர்க்குக்
கைக்குட்கனியாகுங்கருவறுத்தகாரணர்க்குப்.

பளிங்கிற்பவளமடிபற்றற்றபாவலர்க்குக்
கிளிஞ்சியைவெள்ளியென்பார்கிட்டாதார்கிட்டுவரோ.

எட்டுக்கடங்காண்டியெழுத்திற்பிறவாண்டி
நாட்டினரிகளெல்லாநற்புரவிசெய்தாண்டி.

பஞ்சப்பிரளயத்துமிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமிடற்றானயனத்தழல்விழியான்.

அகங்காக்கும்புறங்காக்கும்அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத்திசைபத்துங்காக்குமடி.

பேசாப்பிரமமடிபேச்சிறந்தபேரொளிகாண்
ஆசாபாசங்கள்அணுகாதபேரொளிகாண்.

தேசமிறந்தவன்காண்திசையிறந்ததெண்கடல்காண்
ஊசிமுனையூன்றவில்லாவுறுபொருள்காண்.

சிப்பியில்முத்தொளிகாண்சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோலமர்ந்தவரும்பொருள்காண்.

ஆலாவிருட்சமடியளவிலாச்சாகையடி
மேலாம்பதங்கள்விசும்பூடுருவுமெய்ப்பொருள்காண்.

வங்கிஷமெல்லாங்கடந்துமருவாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும்ஆய்ந்தவரும்பொருள்காண்.

நாமநட்டமானதடிநவிலவிடமில்லையடி
காமனைக்கண்ணாலெரிக்கக்கனல்விழித்தகாரணன்காண்.

கொட்டாதசெம்பொனடிகுளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடியீப்புகாத்தேனமுதம்.

காணிப்பொன்னாணியுடன்கல்லுரைமாத்தின்னதென்றே
ஆணியுடன்கூட்டியடங்கலிட்டுக்கொண்டாண்டி.

அளவிறந்தவண்டத்தாரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும்பேசாப்பிரமமடி.

கன்னெஞ்சினுள்ளேகழுநீலம்பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளேயிணையடிகள்வைத்தாண்டி.

வேதப்புரவியடிவிரைந்தோடியுமறியார்
காதற்றஞானமடிகாண்பார்கருத்துடையோர்.

பாசவினையைப்படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டியடிநில்லென்றுசொன்னாண்டி.

ஓசையொடுங்குமிடமோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும்பிரமமிதுவென்றாண்டி.

சின்மயநன்னோக்காற்சிற்சுருபங்காட்டியெனைத்
தன்மயமாயாக்கியேதானவனாய்நின்றாண்டி.

தானென்னைப்பார்த்தாண்டிதன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டிநவிலவிடமில்லையடி.

இன்றிருந்துநாளைக்கிறக்கிறபேரெல்லாரும்
என்றுபரிபூரணத்திலினிதிருக்கச்சொன்னாண்டி.

பார்க்கிலெளிதலவோபற்றற்றபற்றலவோ
ஆர்க்குமிடங்காட்டவவனிதனில்வந்தாண்டி.

இத்தனைகாலமடியிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடியிரும்பிலுறைநீரானேன்.

எக்காலம்பட்டதடியிறந்துபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாமழுந்தினேனரகில்.

காலங்கழிந்ததடி கர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவுநாமநட்டமாச்சுதடி.

முப்பாழுக்கப்பால்முதற்பாழ்முழுமுதலாய்
இப்போதுவந்தான்காண்எனைவிழுங்கிக்கொண்டான்காண்.

பாலின்கணெய்யிருந்தாற்போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய்தறவிழுங்கிக்கொண்டாண்டி.

தெத்தபடமானேண்டிநீயிரும்பினீரானேன்
ஒத்தவிடநித்திரையென்றேதுமுணர்வறிந்தேன்.

ஒப்புமுவமையுமற்றேதவரிதாயபொருள்
இப்பூவினிற்குருவேயென்னவந்தோன்றாள்வாழி.

ஒப்பாரிசொல்லிடினுமுவமையிழைத்திடினும்
முப்பாழுங்கற்றுணர்ந்தோர்முன்னோர்பொறுத்தருளே.

அருட்புலம்பல் - முற்றுப்பெற்றது.

---

பட்டணத்துப்பிள்ளையார்

# இறந்தகாலத்திரங்கல்.

---

வார்த்தைத்திறமில்லாமனிதருக்குப்புன்சொலவாஞ்
சாத்திரங்கள்சொல்லிச்சதிரிழந்துகெட்டேனே.

மெத்தமெத்தச்செல்வாக்கில்வேறுமருளடுத்துத்
தத்தித்தலைகீழாய்த்தானடந்துகெட்டேனே.

வழக்கந்தலங்களினுமண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்தவிராமற்பதியிழந்துகெட்டேனே.

ஆணிபொருந்துமரும்பூமியத்தனையுங்
காணிநமதென்றுகனம்பேசிக்கெட்டேனே.

ஆசாரமில்லாவசடருடன்கூடிப்
பாசாங்குபேசிப்பதியிழந்துகெட்டேனே.

குருமார்க்கமில்லாக்குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளேகருத்தழிந்துகெட்டேனே.

ஆலமருந்துமரன்பெருமையெண்ணாமல்
பாலர்பெண்டீர்மெய்யென்றுபதியிழந்துகெட்டேனே

பிணவாசமுற்றபெருங்காயமெய்யென்று
பணவாசையாலேபதியிழந்துகெட்டேனே.

கண்டபுலவர்கனக்கவேதான்புகழ
உண்டவுடம்பெல்லாமுப்பரித்துக்கெட்டேனே.

எண்ணிறந்தசென்மமெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற்பதியிழந்துகெட்டேனே.

சிற்றெறும்புசற்றுந்தீண்டப்பொருவுடம்பை
உற்றுறுக்கவுஞ்சுடவுமொப்பித்துமாண்டேனே.

தன்னுடம்புதானேதனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்வில்லாமலின்பமென்றுமாண்டேனே.

தோலெலும்புமாங்கிஷமுந்தொல்லன்னத்தால்வளரு
மேலெலும்புஞ்சுற்றமென்றுவீருப்பாய்மாண்டேனே.

போக்குவரத்தும்பொருள்வரத்துங்காணாமல்
வாக்கழிவுசொல்லிமனமறுகிக்கெட்டேனே.

இறந்தகாலத்திரங்கல்

முற்றுப்பெற்றது.

பட்டணத்துப் பிள்ளையார்

# நெஞ்சொடுபுலம்பல்.

மண்காட்டிப்பொன்காட்டிமாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்றதேசிகனைப்போற்றாமல்
கண்காட்டும்வேசியர்தங்கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போலலைந்தனையேநெஞ்சமே. (௧)

புட்பாசனவணையிற்பொற்பட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணியோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தியியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்றமுயங்கிலையேநெஞ்சமே. (௨)

முப்பாழும்பாழாய்முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பானின்றாடுமதைப்போற்றாமல்
இப்பாழாம்வாழ்வைநம்பியேற்றவர்க்கொன்றீயாமல்
துப்பாழாய்வந்தவினைசூழ்ந்தனையேநெஞ்சமே. (௩)

அன்னம்பகிர்ந்திங்கலைந்தோர்க்குதவிசெயுஞ்
சென்மமெடுத்துஞ்சிவனருளைப்போற்றாமல்
பொன்னுமனையுமெழிற்பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாகவெண்ணினையேநெஞ்சமே. (௪)

முற்றொடர்பிற்செய்தமுறைமையால்வந்தசெல்வம்
இற்றைநாட்பெற்றோமென்றெண்ணாதுபாழ்மனமே
அற்றவர்க்குமீயாமலரன்பூசையோராமல்
கற்றவர்க்குமீயாமற்கண்மறந்துவிட்டனையே. (௫)

மாணிக்கமுத்துவயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்காதனத்திலிருந்தாலும்
காணித்துடலைநமன்கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக்காண்கிலமேநெஞ்சமே. (௬)

கற்கட்டுமோதிரநற்கடுக்கன்னரைநாண்பூண்டு
திக்கெட்டும்போற்றத்திசைக்கொருத்தரானாலும்
பற்கிட்டவேமனுயிர்பந்தாடும்வேளையிலே
கைச்சட்டம்கூடவரக்காண்கிலமேநெஞ்சமே. (௭)

முன்னநீசெய்ததவமுப்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகளும்பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச்சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற்காட்சியற்றாய்நெஞ்சமே. (௮)

பையரவம்பூண்டபரமர்திருப்பொற்றாளைத்
துய்யமலர்பறித்துத்தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங்காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிறுமாந்துவிட்டனையேநெஞ்சமே. (௯)

மாதுக்கொருபாகம்வைத்தவரன்பொற்றாளைப்
போதுக்கொருபோதும்போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிந்தமண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீயெண்ணினையேநெஞ்சமே. (௧௦)

அஞ்சருளைப்போற்றியைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்குநினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கிமறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தாளைச்சிந்தைசெய்வாய்நெஞ்சமே. (௧௧)

அற்புதமாயிந்தவுடலாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித்தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன்உடைமைபெருவாழ்வைநம்பிச்
சற்பத்தின்வாயிற்றவளைபோலானேனே. (௧௨)

உற்றாரார்பெற்றாருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென்மாளும்போதுதவுவரோ
கற்றாவிழந்தவிளங்கன்றதுபோலேயுருகிச்
சிற்றாகிச்சிற்றின்பஞ்சேர்ந்தனையேநெஞ்சமே. (௧௩)

வீடிருக்கத்தாயிருக்கவேண்டுமனையாளிருக்கப்
பீடிருக்கவூணிருக்கப்பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கண்ணிருக்கவைத்தபொருளிருக்கக்
கூடிருக்கநீபோனகோலமென்னகோலமே. (௧௪)

சந்தனமுங்குங்குமமுஞ்சாந்தும்பரிமளமும்
விந்தைகளாப்பூசிமிகுவேடிக்கையொய்யாரக்
கந்தமலர்சூடுகின்றகன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனாயென்றெண்ணிலையேநெஞ்சமே. (௧௫)

காற்றுத்துருத்திகடியவினைக்குள்ளான
ஊற்றைச்சடலத்தையுண்டென்றிறுமாந்து
பார்த்திரங்கியன்னம்பசித்தோருக்கீயாமல்
ஆற்றுவெள்ளம்போலவளாவினையேநெஞ்சமே. (௧௬)

நீர்க்குமிழிவாழ்வைநம்பிநிச்சயமென்றேயெண்ணிப்
பாக்களவாமன்னம்பசித்தோர்க்களியாமல்
போர்க்குளெமதூதன்பிடித்திழுக்கும்போது
ஆர்ப்படுவாரொன்றேயறிந்திலையேநெஞ்சமே. (௧௭)

சின்னஞ்சிறுநுதலாள்செய்தபலவினையான்
முன்னந்தமார்பில்முளைத்தசிலந்திவிம்மி
வன்னந்தளதளப்பமயங்கிவலைக்குள்ளாகி
அன்னம்பகிர்ந்துண்ணவறிந்திலையேநெஞ்சமே. (௧௮)

ஓட்டைத்துருத்தியையுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்தருனைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்துவெளியையொளியாலழைத்துக்
காட்டும்பொருளிதென்றுகருதிலையேநெஞ்சமே. (௧௯)

ஊன்பொதிந்தகாயமுளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லால்நீசற்குருவைப்போற்றாமல்
கான்பரந்தவெள்ளங்கரைபுரளக்கண்டேகி
மீன்பரந்தாற்போலேவிசாரமுற்றாய்நெஞ்சமே. (௨௦)

உடக்கையொருத்தியுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்றுசார்ந்தங்கிறுமாந்தே
உடக்கைத்தகர்த்தேயுயிரையமன்கொள்கையிலே
* யடக்கவாய்வைத்தபொருளங்குவரமாட்டாதே. (௨௧)

இத்திக்குந்தேனைத்தெவிட்டாததெள்ளமுதை
முத்திக்குவித்தானமுப்பாழைப்போற்றாமல்
பற்றிப்பிடித்தியமன்பாசத்தாற்கட்டும்வண்ணம்
சுற்றியிருக்கும்வினைசூழ்ந்ததனையேநெஞ்சமே. (உஉ)

அஞ்செழுத்தாயெட்டெழுத்தாயைம்பத்தோரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய்நின்றபெருமானைப்போற்றாமல்
வஞ்சகமாயுற்றமுலைமாதர்வலைக்குள்ளாகிப்
பஞ்சரித்துத்தேடிப்பாழுக்கிறைத்தோமே. (உ௩)

அக்கறுகுகொன்றைதும்பையம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத்தொழுதுவணங்காமல்
மக்கள்பெண்டிர்சுற்றமுடன்வாழ்வைமிகநம்பியன்பாய்
எக்காலமுமுண்டென்றெண்ணினையேநெஞ்சமே. (உ௪)

ஆண்டகுருவினருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாயவீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதரல்லார்பொய்மாய்கைக்குள்ளாகித்
தூண்டிலகப்பட்டுத்துடிகெண்டையானேனே. (உ௫)

ஏணிப்பழுவாமிருளையறுத்தாளமுற்றும்
பேணித்தொழுங்கயிலைபேறுபெறமாட்டாமல்
காணவரும்பொருளாய்க்கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போலாகினனேநெஞ்சமே. (உ௬)

கோத்துப்பிரகாசங்கொண்டுருகியண்டமெல்லாம்
காத்தபடியேகயிலாயஞ்சேராமல்
வேற்றுருவப்பட்டடியேன்வெள்ளம்போலுள்ளுருகி
ஏற்றுங்கழுவிலிருந்தபிணமானேனே. (உ௭)

நிலைவிட்டுடலையுயிர்நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனெச்சிற்றின்றனைச்சேராமல்
வலைபட்டுழலுகின்றமான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற்றட்டழிந்தாய்நெஞ்சமே. (உ௮)

முடிக்குமயிர்ப்பொல்லாமுழுக்குரம்பைமின்னாரின்
இடைக்குநடைக்குமிதங்கொண்டவார்த்தைசொல்லி
அடிக்கொண்டதில்லைவனத்தையனேநாயனையேன்
விடக்கையிழந்தமிருகமதுவானேனே. (௨௯)

பூவாணர்போற்றும்புகழ்மதுரைச்சொக்கரது
சீர்பாதம்போற்றிச்சிவலோகஞ்சேராமல்
தாவாரந்தோறுந்தலைபுகுந்தநாய்போலே
ஆகாதநெஞ்சமேயலைந்துதிரிந்தாயே. (௩௦)

பத்தெட்டாயீரைந்தாய்ப்பதின்மூன்றிரண்டொன்றாய்
ஒத்திட்டுநின்றதோரோவியத்தைப்போற்றாமல்
தெத்திட்டுநின்றதிரிகண்ணிக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சேவிடவுமறியாயே. (௩௧)

அஞ்சுமுருவாகியைமூன்றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்தவிளக்கொளியைப்போற்றாமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற்பற்றிப்பிடியாமல்
நஞ்சுண்டகெண்டையைப்போல்நானலைந்துகெட்டேனே (௩௨)

ஊனமுடனேயுடையும்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்துமண்ணுலகில்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்களாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம்போய்ப்பிழைத்தோமில்லையே. (௩௩)

ஊறையிறைக்கின்றவுப்பிருந்தபாண்டத்தை
நாறாமல்நாறிநழுவும்புழுக்கூட்டை
வீறும்புரத்தைவிரும்புகின்றதெப்படியென்
றுறுதநாட்டிலகன்றிருந்தேனில்லையே. (௩௪)

அரியவரிதேடியறியாவொருமுதலைப்
பரிவுடனேபோற்றும்பரஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வைநம்பிக்காமத்தழுந்தியே
அரிவாயிற்பட்டகரியதுபோலானேனே. (௩௫)

தந்திரத்தையுன்னீர்தவத்தைமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னிமயங்கித்தடுமாறி
விந்துருகிநாதமாமேலொளியைக்காணாமல்
அந்தரத்தேகோலெறிந்தஅந்தகன்போலானேனே. (௩௬)

விலையாகிப்பாணனுக்குவீறடிமைப்பட்டதுபின்
சிலையார்கைவேடனெச்சில்தின்றானைப்போற்றாமல்
அலைவாய்த்துரும்பதுபோலாணவத்தினாலழுங்கி
யுலைவாய்மெழுகதுபோலுருகினையேநெஞ்சமே. (௩௭)

நெஞ்சொடு புலம்பல்

முற்றிற்று.

---

பட்டணத்துப் பிள்ளையார்

அருளிச்செய்த

## பூரணமாலை.

—o—

மூலத்துதித்தெழுந்தமுக்கோணச்சக்கரத்துள்
வாலைதனைப்போற்றாமல்மதிமறந்தேன்பூரணமே. (௧)

உந்திக்கமலத்துதித்துநின்றபிர்மாவைச்
சந்தித்துக்காணாமற்றட்டழிந்தேன்பூரணமே. (௨)

நாவிக்கமலநடுநெடுமால்காணாமல்
ஆவிகெட்டியானுமறிவழிந்தேன்பூரணமே. (௩)

உருத்திரனையிருதயத்திலுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங்கலங்கினேன்பூரணமே. (௪)

விசுத்திமயேசுரனைவிழிதிறந்துபாராமல்
பசித்துருகிநெஞ்சம்பதறினேன்பூரணமே. (௫)

நெற்றிவிழியுடையநிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற்பொறியழிந்தேன்பூரணமே. (௬)

நாதவிந்துதன்னைநயமுடனேபாராமல்
போதமயங்கிப்பொறியழிந்தேன்பூரணமே. (எ)
உச்சிவெளியையுறுதியுடன்பாராமல்
அச்சமுடனுமறிவழிந்தேன்பூரணமே. (அ)
மூக்குமுனையைமுழித்திருந்துபாராமல்
ஆக்கைகெட்டுநானுமறிவழிந்தேன்பூரணமே. (௯)
இடைபிங்கலையினியல்பறியமாட்டாமல்
தடையுடனேயானுந்தயங்கினேன்பூரணமே. (௧௦)
ஊனுக்குணீநின்றுலாவினதைக்காணுமல்
நானென்றிருந்துநலனழிந்தேன்பூரணமே. (௧௧)
மெய்வாழ்வைநம்பிவிரும்பிமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப்புலம்பினேன்பூரணமே. (௧௨)
பெண்டுபிள்ளைதந்தைதாய்பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென்றுநம்பியுடலழிந்தேன்பூரணமே. (௧௩)
தண்டிகைபல்லாக்குடனேசகலசம்பத்துகளும்
உண்டென்றுநம்பியுணர்வழிந்தேன்பூரணமே. (௧௪)
இந்தவுடலுயிரையெப்போதுந்தான்சதமாப்
பந்தமுற்றுநானும்பதமழிந்தேன்பூரணமே. (௧௫)
மாதர்பிரபஞ்சமயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப்பொறியழிந்தேன்பூரணமே. (௧௬)
சரிதைகிரியாயோகந்தான்ஞானம்பாராமல்
பரிதிகண்டமதியதுபோற்பயனழிந்தேன்பூரணமே. (௧௭)
மண்பெண்பொன்னாசைமயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற்கலங்கினேன்பூரணமே. (௧௮)
தனிமுதலைப்பார்த்துத்தனித்திருந்துவாழாமல்
அநியாயமாய்ப்பிறந்திங்கலைந்துநின்றேன்பூரணமே. (௧௯)
ஈராறுதண்கலைக்குளிருந்துகூத்தாடினதை
ஆராய்ந்துபாராமலறிவழிந்தேன்பூரணமே. (௨௦)

வாசிதனைப்பார்த்துமகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்துகாலலுத்தேன்பூரணமே. (உக)

கருவிகடொண்ணூற்றாறிற்கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராமலீடழிந்தேன்பூரணமே. (உஉ)

உடலுக்குள்நீநின்றுலாவிதனைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்துகாலலுத்தேன்பூரணமே. (உங)

எத்தேசகாலமுநாமிறவாதிருப்பமென்று
உற்றுனைத்தான்பாராமலுருவழிந்தேன்பூரணமே. (உச)

எத்தனைதாய்தந்தையிவர்களிடத்தேயிருந்து
பித்தனாயானும்பிறந்திறந்தேன்பூரணமே. (உரு)

பெற்றலுத்தாள்தாயார்பிறந்தலுத்தேன்யானுமுன்றன்
பொற்றுணைத்தாள்தந்துபுகலருள்வாய்பூரணமே. (உசா)

உற்றாரழுதலுத்தாருறன்முறையார்சுட்டலுத்தார்
பெற்றலுத்தாள்தாயார்பிறந்தலுத்தேன்பூரணமே (உஎ)

பிரமன்படைத்தலுத்தான்பிறந்திறந்துநானலுத்தேன்
உரமுடையவக்கினிதானுண்டலுத்தான்பூரணமே. (உஅ)

எண்பத்துநான்குநூறாயிரஞ்செனனமுஞ்செனித்துப்
புண்பட்டுநானும்புலம்பினேன்பூரணமே (உகூ)

என்னையறியாமலெனக்குள்ளேநீயிருக்க
உன்னையறியாமலுடலிழந்தேன்பூரணமே. (ஙo)

கருவாயுருவாய்க்கலந்துலகெலாநீயாய்
அருவாகிநின்றதறிகிலேன்பூரணமே. (ஙக)

செம்பொற்கமலத்திருவடியைப்போற்றாமல்
பம்பைகொட்டவாடும்பசாசானேன்பூரணமே. (ஙஉ)

எனக்குள்ளேநீயிருக்கவுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீரவரமருள்வாய்பூரணமே. (ஙங)

எழுவகைத்தோற்றத்திருந்துவிளையாடினதைப்
பழுதறவேபாராமற்பயனழிந்தேன்பூரணமே. (ஙச)

சாதிபேதங்கள்தனையறியமாட்டாமல்
வாதனையால்நின்றுமயங்கினேன்பூரணமே. (௩௫)

குலமொன்றாய்நீபடைத்தகுறியையறியாமல்யான்
மலபாண்டத்துள்ளிருந்துமயங்கினேன்பூரணமே. (௩௬)

அண்டபிண்டமெல்லாமணுவுக்கணுவாகநீ
கொண்டவடிவின்குறிப்பறியேன்பூரணமே. (௩௭)

சகஸ்திரத்தின்மேலிருக்குஞ்சற்குருவைப்போற்றாம
லகத்தினுடவாணுவத்தாலறிவழிந்தேன்பூரணமே. (௩௮)

ஐந்துபொறியையடக்கியுனைப்போற்றாமல்
நைந்துருகிநெஞ்சநடுங்கினேன்பூரணமே. (௩௯)

என்னைத்திருக்கூத்தாவிப்படிநீயாட்டுவித்தாய்
உன்னையறியாதுடலழிந்தேன்பூரணமே. (௪௦)

நரம்புதசைதோலெலும்புநாற்றத்துக்குள்ளிருந்து
வரம்பறியமாட்டாமல்மயங்கினேன்பூரணமே. (௪௧)

சிலந்தியுடைநூல்போற்சீவசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல்நலமழிந்தேன்பூரணமே. (௪௨)

குருவாய்ப்பரமாகிக்குடிலைசத்திநாதவிந்தாய்
அருவாயுருவானதறிகிலேன்பூரணமே. (௪௩)

ஒளியாய்க்கதிர்மதியாயுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்றவியனறியேன்பூரணமே. (௪௪)

இடையாகிப்பிங்கலையாயெழுந்தசுழிமுனையாய்
உடலுயிராய்நீயிருந்தவுளவறியேன்பூரணமே. (௪௫)

மூலவித்தாய்நின்றுமுளைத்துடல்தோறும்மிருந்து
காலனெனவழிக்குங்கணக்கறியேன்பூரணமே. (௪௬)

உள்ளும்புறம்புமாயுடலுக்குள்நீயிருந்த
தெள்ளளவுநானறியாதிருந்தேனேபூரணமே. (௪௭)

தாயாகித்தந்தையாய்த்தமர்கிளைஞர்சுற்றமெல்லாம்
நீயாகிநின்றநிலையறியேன்பூரணமே. (௪௮)

விலங்குபுள்ளூர்வனவசரம்விண்ணவர்நீர்ச்சாதிமனுக்
குலங்களெழுவகையில்நின்றகுறிப்பறியேன்பூரணமே. (௪௯)

ஆணாகிப்பெண்ணாயலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்றவகையறியேன்பூரணமே. (௫0)

வாலையாய்ப் பக்குவமாய்வளர்ந்துகிழந்தானாகும்
பாலையாய்நின்றபயனறியேன்பூரணமே. (௫௧)

பொய்யாய்ப்புவியாய்ப்புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்றவியனறியேன்பூரணமே. (௫௨)

பூவாய்மணமாகிப்பொன்னாகிமாத்தாகி
நாவாய்ச்சொல்லானநயமறியேன்பூரணமே. (௫௩)

முதலாய்நடுவாகிமுப்பொருளாய்மூன்றுலகா
யிதமாகிநின்றவியலறியேன்பூரணமே. (௫௪)

ஊனாயுடலுயிராயுண்ணிறந்தகண்ணொளியாய்த்
தேனாய்ருசியானதிறமறியேன்பூரணமே. (௫௫)

வித்தாய்மரமாய்விளைந்தகனிகாய்பூவாய்ச்
சித்தாகிநின்றதிறமறியேன்பூரணமே. (௫௬)

ஐவகையும்பெற்றுலகவண்டபகிரண்டமெல்லாந்
தெய்வமெனநின்றதிறமறியேன்பூரணமே. (௫௭)

மனமாய்க்கனவாகிமாய்கையாயுள்ளிருந்து
நினைவாகிநின்றநிலையறியேன்பூரணமே. (௫௮)

சத்திசிவமிரண்டாய்த்தான்முடிவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்றதிறமறியேன்பூரணமே. (௫௯)

பொறியாய்ப்புலனாகிப்பூதபேதப்பிறிவாய்
அறிவாகிநின்றவளவறியேன்பூரணமே. (௬0)

வானிற்கதிர்மதியாய்வளர்ந்துபின்னொன்றானதுபோல்
ஊனுடலுக்குள்ளிருந்தவுயிர்ப்பறியேன்பூரணமே. (௬௧)

பொய்யும்புலையுமிகப்பொருந்திவீண்பேசலன்றி
ஐயோவுனைவுரைக்கவறிகிலேன்பூரணமே. (௬௨)

நிரந்தரமாயெங்குநின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னப்பதமறியேன்பூரணமே. (௬௩)

கொல்வாய்ப்பிறப்பிப்பாய்கூடவிருந்தேசுகிப்பாய்
செல்வாய்ப்பிறர்க்குட்செயலறியேன்பூரணமே. (௬௪)

வாரிதியாய்வையமெல்லாமன்னுமண்டபிண்டமெல்லாஞ்
சாருதியாய்நின்றதலமறியேன்பூரணமே. (௬௫)

வித்தாய்மரமாய்வெளியாயொளியாய்நீ
சத்தாயிருந்ததரமறியேன்பூரணமே. (௬௬)

தத்துவத்தைப்பார்த்துமிகத்தன்னையறிந்தறிவால்
உய்த்துனைத்தான்பாராமலுய்வாரோபூரணமே. (௬௭)

ஒன்றாயுயிராயுடல்தோறுநீயிருந்தும்
என்றுமறியார்களேழைகள்தாம்பூரணமே. (௬௮)

நேற்றென்றுநாளையென்றுநினைப்புமறப்பாய்ப்படைத்து
மாற்றமாய்நின்றவளமறியேன்பூரணமே. (௬௯)

மனம்புத்திசித்தமகிழறிவாங்காரமதாய்
நினைவாந்தலமானநிலையறியேன்பூரணமே. (௭௦)

உருப்பேதமின்றியுயர்ந்தசத்தபேதமதாய்க்
குருப்பேதமாய்வந்தகுணமறியேன்பூரணமே. (௭௧)

சட்சமயபேதங்கள்தான்வகுத்துப்பின்னுமொரு
உட்சமயமுண்டென்றுரைத்தனையேபூரணமே. (௭௨)

முப்பத்திரண்டுறுப்பாய்முனைந்துபடைத்துள்ளிருந்த
செப்படிவித்தைத்திறமறியேன்பூரணமே. (௭௩)

என்னதான்கற்றாலென்னெப்பொருளும்பெற்றாலென்
உன்னையறியாதாருய்வரோபூரணமே. (௭௪)

கற்றறிவோமென்பார்காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்தங்களுக்குப்பிறப்பறுமோபூரணமே. (௭௫)

வானென்பாரண்டமென்பார்வாய்ஞானமேபேசித்
தானென்பார்வீணர்தனையறியார்பூரணமே. (௭௬)

ஆதியென்பாரந்தமென்பாரதற்குண்டுவாயிருந்த
சோதியென்பார்நாதத்தொழிலறியார்பூரணமே. (௭௭)

மூச்சென்பாருள்ளமென்பார்மோனமெனுமோட்சமென்பார்
பேச்சென்பாருன்னுடையபேரறியார்பூரணமே. (௭௮)

பரமென்பார்பானுவென்பார்பாழ்வெளியாய்நின்ற
வரமென்பாருன்றன்வழியறியார்பூரணமே. (௭௯)

எத்தனைபேரோவெடுத்தெடுத்துத்தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றானதறிகிலேன்பூரணமே. (௮௦)

நகாரமகாரமென்பார்நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பார்வகையறியார்பூரணமே. (௮௧)

மகத்துவமாய்க்காமமயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற்பயனழிந்தேன்பூரணமே. (௮௨)

உண்மைப்பொருளையுகந்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலேபிறந்திறந்தேன்பூரணமே. (௮௩)

வாயாரவாழ்த்திமகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காயமெடுத்துகலங்கினேன்பூரணமே. (௮௪)

சந்திரனைமேகமதுதான்மறைத்தவாறதுபோற்
பந்தமுறயானுமுனைப்பார்க்கிலேன்பூரணமே. (௮௫)

செந்தாமரைத்தாளைத்தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்றிங்கலைந்தேனுன்பூரணமே. (௮௬)

நீர்மேற்குமிழிபோல்நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான்றட்டழிந்தேன்பூரணமே. (௮௭)

நெஞ்சமுருகிநினைந்துனைத்தான்போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்கவகையறியேன்பூரணமே. (௮௮)

எள்ளுக்குளெண்ணெய்போலெங்குநிறைந்திருந்த
துள்ளமறியாதுருகினேன்பூரணமே. (௮௯)

மாயாப்பிரபஞ்சமயக்கத்திலேவிழுந்தே
யோயாச்சனனமொழித்திலேன்பூரணமே. (௯௦)

பூசையுடன்புவனபோகமெனும்போக்கியத்தால்
ஆசையுற்றேநானுமறிவழிந்தேன்பூரணமே. (௯௧)

படைத்துமழித்திடுவாய்பார்க்கிற்பிர்மாவெழுத்தைத்
தொடைத்துச்சிரஞ்சீவியாத்துலங்குவிப்பாய்பூரணமே. (௯௨)

மந்திரமாய்ச்சாத்திரமாய்மறைநான்காய்நீயிருந்த
தந்திரத்தைநானறியத்தகுமோதான்பூரணமே. (௯௩)

அல்லாய்ப்பகலாயனவரதகாலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்ததொடர்பறியேன்பூரணமே. (௯௪)

நரகஞ்சுவர்க்கமெனநண்ணுமிரண்டுண்டாயும்
அரகராவென்பதறிகிலேன்பூரணமே. (௯௫)

பாவபுண்ணியமென்னும்பகுப்பாய்ப்படைத்தழித்திங்
காவலையுண்டாக்கிவைத்தவருளறியேன்பூரணமே. (௯௬)

சாந்தமென்றுங்கோபமென்றுஞ்சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்புத்தியென்றும்படைத்தனையேபூரணமே(௯௭)

பாசமுடலாய்ப்பசுவதுவுந்தானுயிராய்
நேசமுடனீபொருளாய்நின்றனையேபூரணமே. (௯௮)

ஏதிலடியாரிரங்கியிகத்தில்வந்துன்
பாதமதில்தாழப்பரிந்தருள்வாய்பூரணமே. (௯௯)

நானேநீநீயேநானுமிரண்டுமொன்றானால்
தேனின்ருசியதுபோற்றெவுட்டாய்நீபூரணமே. (௧00)

முடிவிலொருகுணியத்தைமுடித்துநின்றுபாராமல்
அடியிலொருகுணியத்திலலைந்தேனேபூரணமே. (௧0௧)

பூரணமாலைதனைப்புத்தியுடனோதினர்க்குத்
தாரணியில்ஞானந்தழைப்பிப்பாய்பூரணமே. (௧0௨)

பூரணமாலை முற்றும்.

பட்டணத்துப் பிள்ளையார்

# நெஞ்சொடுமகிழ்தல்.

---

அன்றுமுதலின்றளவுமாக்கையொடுகூட்டியுமாய்
நின்றநிலையறியநேசமுற்றாய்நெஞ்சமே. (க)

அங்கங்குணர்வாயறிவாகியேநிரம்பி
எங்கெங்குமானதிலேயேகரித்தாய்நெஞ்சமே. (உ)

அலையாதபேரின்பவானந்தவெள்ளத்தில்
நிலையாயுருவிறந்துநின்றனையேநெஞ்சமே. (ங)

பாராமற்பதையாமற்பருகாமலியாதொன்றும்
ஓராதுணர்வுடனேயொன்றினையேநெஞ்சமே. (ச)

களவிறந்துகொலையிறந்துகாண்பனவுங்காட்சியும்போ
யளவிறந்துநின்றதிலேயன்புற்றாய்நெஞ்சமே. (ரு)

பேச்சிறந்துசுட்டிறந்துபின்னிறந்துமுன்னிறந்து
நீச்சிறந்துநின்றதிலேநேசமுற்றாய்நெஞ்சமே. (சா)

விண்ணிறந்துமண்ணிறந்துவெளியிறந்துவொளியிறந்து
எண்ணிறந்துநின்றதிலேயேகரித்தாய்நெஞ்சமே. (எ)

பார்த்தவிடமெங்கும்பரமெனவேயுட்புறம்புங்
கோத்தபடியுண்மையெனக்கொண்டனையேநெஞ்சமே. (அ)

ஊரிறந்துபேரிறந்துவொளியிறந்துவெளியிறந்து
சீரிறந்துநின்றதிலேசேர்ந்தனையேநெஞ்சமே. (கூ)

ஆண்பெண்ணலியென்றழைக்கவரிதாய்நிறைந்து
காணவரிதாயவிடங்கண்ணுற்றாய்நெஞ்சமே. (க0)

ஆங்காரமச்சமகற்றியறிவினொடு
தூங்காமற்றூங்கிச்சுகம்பெற்றாய்நெஞ்சமே. (கக)

ஆதியாய்நின்றவகண்டபரிபூரணத்தைச்
சாதியாநின்றவிடஞ்சார்வுற்றாய்நெஞ்சமே. (கஉ)

விருப்புவெறுப்பில்லாதவெட்டவெளியதனில்
இருப்பேசுகமென்றிருந்தனையேநெஞ்சமே. (கங)

ஆருமுருப்பேரண்டத்தப்புறத்துமிப்புறத்தும்
நீருமுப்புமென்னநிலைபெற்றாய்நெஞ்சமே. (௧௪)

உடனாகவேயிருந்துமுணரவரியாரோடு
கடனீருமாறும்போற்கலந்தனையேநெஞ்சமே. (௧௫)

நெடியகத்தைப்போக்கிநின்றசழக்கறுத்துப்
படிகத்துக்கும்பம்போற்பற்றினையேநெஞ்சமே. (௧௬)

மேலாகியெங்கும்விளங்கும்பரம்பொருளிற்
பாலூறுமென்சுவைபோற்பற்றினையேநெஞ்சமே. (௧௭)

நீரொடுதண்ணளிவிண்டுநீரானவாறேபோல்
ஊரொடுபேரில்லாரோடொன்றினையேநெஞ்சமே. (௧௮)

இப்பிறப்பைப்பாழ்ப்படுத்தியிருந்தபடியேயிருக்கச்
செப்பவரிதாயவிடஞ்சேர்ந்தனையேநெஞ்சமே. (௧௯)

மேலாம்பதங்களெல்லாம்விட்டுவிட்டாராய்ந்து
நாலாம்பதத்தினடந்தனையேநெஞ்சமே. (௨0)

கடங்கடங்கடோறுங்கதிரவனூடாடி
யடங்குமிடந்தானறிந்தன்புற்றாய்நெஞ்சமே. (௨௧)

கற்றவனாய்க்கேட்டவனாய்க்காணானாய்க்காண்பவனாய்
உற்றவனாய்நின்றநிலையொன்றுபட்டாய்நெஞ்சமே. (௨௨)

நாலுவகைக்கரணநல்குபுலனைந்துமொன்றாய்ச்
சீலமுற்றுநின்றநிலைசேர்ந்தனையேநெஞ்சமே. (௨௩)

விட்டிடமுந்தொட்டிடமும்விண்ணிடமுமண்ணிடமுங்
கட்டுமொருதன்மையெனக்கண்ணுற்றாய்நெஞ்சமே. (௨௪)

எந்தெந்தநாளுமிருந்தபடியேயிருக்க
அந்தச்சுகாதீதமாக்கினையேநெஞ்சமே. (௨௫)

வாக்கிறந்துநின்றமனோகோசரந்தனிலே
தாக்கறவேநின்றநிலைதலைசெய்தாய்நெஞ்சமே. (௨௬)

எத்தேசமுநிறைந்தேயெக்காலமுஞ்சிறந்து
சித்தாயசித்தினிடஞ்சேர்ந்தனையேநெஞ்சமே. (௨௭)

தாழாதேநீளாதேதன்மயமதாய்நிறைந்து
வாழாதேவாழமருவினையேநெஞ்சமே. (உ௯)

உள்ளும்புறம்புமுவட்டாதவானந்தக்
கள்ளருந்திநின்றதிலேகண்ணுற்றாய்நெஞ்சமே. (உ௯)

வாதனைபோய்நிட்டையும்போய்மாமௌனராச்சியம்போய்
பேதமறநின்றவிடம்பெற்றனையேநெஞ்சமே. (௩0)

இரதம்பிரிந்துகலந்தேகமாம்வாறேபோல்
விரகந்தவிர்ந்தணல்பால்மேவினையேநெஞ்சமே. (௩க)

சோதியான்சூழ்பனிநீர்சூறைகொளுமாறேபோல்
நீதிகுருவின்றிருத்தாள்நீபெற்றாய்நெஞ்சமே. (௩உ)

நெஞ்சொடுமகிழ்தல் முற்றும்.

---

பட்டணத்துப் பிள்ளையார்

## உடற்கூற்றுவண்ணம்.

தன தன தான, தன தன தான, தந்த தனந்தன தந்த தனந்த, தனனதனந்த, தனனதனந்த, தானனதானன தான தனந்த.

ஒருமடமாதுமொருவனுமாகி, யின்பசுகந்தரு மன்புபொருந்தி,புணர்வுகலங்கி ஒழுகியவிந்து,ஊறுசுரோணித மீதுகலந்து.

பனியிலொர்பாதிசிறுதுளிமாது, பண்டியில்வந்துபுகுந்துதிரண்டு, பதுமவரும்புகமடமிதென்று, பார்வைமெய்வாய்செவிகால்கைகளென்ற.

உருவமுமாகியுயிர்வளர்மாத,மொன்பதுமொன்று நிறைந்துமடந்தை, யுதரமகன்றுபுவியில்விழுந்து, யோகமுவாரமுநாளுமறிந்து.

மகளிர்கள்சேனை தரவணையாடை, மண்படவுந்தி யுதைந்துகவிழ்ந்து, மடமயில்கொங்கை யமுதமருந்தி, யோரறிவீரறிவாகிவளர்ந்து.

ஒளிநகையூற லிதழ்மடவாரு, வந்துமுகந்திட வந்துதவழ்ந்து, மடியிலிருந்து மழலைமொழிந்து, வாவிருபோவென நாமம் விளம்ப.

உடைமணியாடை யரைவடமாட, வுண்பவர்தின்பவர் தங்களொடுண்டு, தெருவிலிருந்து புழுதியளைந்து, தேடியபாலரொடோடிநடந்து

அஞ்சுவயதாகிவிளையாடியே. (க)

உயர்தருஞானகுருவுபதேச, முந்தமிழின்கலையுங் கரைகண்டு, வளர்பிறையென்றுபலரும்விளம்ப, வாழ்பதினாறுபிராயமும்வந்து.

மயிர்முடிகோதியறுபதநீல, வண்டிமிர்தண்டொடைகொண்டைபுனைந்து, மணிபொனிலங்குபணிகளணிந்து, மாகதர்போகதர்கூடிவணங்க.

மதனசொரூபனிவனெனமோக, மங்கையர்கண்டுமருண்டுதிரண்டு, வரிவிழிகொண்டுசுழியவெறிந்து, மாமயில்போலவர்போவதுகண்டு.

மனதுபொறாம லவர்பிறகோடி, மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை, மருவமயங்கியிதழமுதுண்டு, தேடியமாமுதல்சேரவழங்கி.

ஒருமுதலாகிமுதுபொருளாயி, ருந்ததனங்களும் வம்பிலிழந்து, மதனசுகந்த விதனமிதென்று, வாலிபகோலமும் வேறுபிரிந்து.

வளமையுமாறி யிளமையுமாறி, வன்பல்விழுந்திரு கண்களிருண்டு, வயதுமுதிர்ந்துநரைதிரைவந்து, வாதவிரோதகுரோதமடைந்து.

செங்கையினிலோர்தடியுமாகியே. (உ)

வருவதுபோவதொருமுதுகூனு, மந்தியெனும்படி குந்திநடந்து, மதியுமழிந்து செவிதிமிர்வந்து, வாயறியாமல் விடாமல்மொழிந்து.

துயில்வருநேரமிருமல்பொருது, தொண்டையுநெஞ்சு முல ர்ந்துவறந்து, துகிலுமிழந்துசுணையுமழிந்து, தோகையர்பாலர் கள்கோறணிகொண்டு.

கலியுகமீதிலிவர்மரியாதை,கண்டிடுமென்பவர்சஞ்சலமிஞ்ச, கலகலவென்றுமலசலம்வந்து, கால்வழிமேல்வழிசாரநடந்து.

தெளிவுமிராமனுரைதடுமாறி, சிந்தையுநெஞ்சுமுலைந்துமரு ண்டு, திடமுமலைந்துமிகவுமலைந்து, தேறிநலாதரவேதெனநொ ந்து.

மறையவன்வேதனெழுதியவாறு, வந்ததுகண்டமுமென்று தெளிந்து, இனியெனகண்டமினியெனதொந்த, மேதினிவா ழ்வுநிலாதினிநின்ற.

கடன்முறைபேசுமெனவுரைநாவு, றங்கிவிழுந்துகைகொண் டுமொழிந்து, கடைவழிகஞ்சியொழுகிடவந்து, பூதமுநாலுசு வாகமுநின்று,

நெஞ்சுதடுமாறிவருநேரமே. (௩)

வளர்பிறைபோலவெயிறுமுரோம, முஞ்சடையுஞ்சிறுகுஞ் சியும்விஞ்ச, மனதுமிருண்டவடிவுமிலங்க, மாமலைபோல்யம தூதர்கள்வந்து.

வலைகொடுவீசியுயிர்கொடுபோக, மைந்தரும்வந்துகுனிந்தழ நொந்து, மடியில்விழுந்துமனைவிபுலம்ப, மாழ்கினரேயிவர்கா லமறிந்து.

பழையவர்காணுமெனுமயலார்கள், பஞ்சுபறந்திடநின்றவர் பந்த, ரிடுமெனவந்துபறையிடமுந்த, வேபிணம்வேகவிசாரியு மென்று.

பலரையுமேவிமுதியவர்தாமி, ருந்தசவங்கழுவுஞ்சிலரொன் று, பணிதுகில்தொக்கல்களபமணிந்து, பாவகமேசெய்துநாறு முடம்பை.

வரிசைகெடாமலெடுமெறவோடி, வந்திளமைந்தர்குனிந்து சுமந்து, கடுகிநடந்துசுடலையடைந்து, மானிடவாழ்வெனவா ழ்வெனநொந்து.

விறகிடைமூடி யழல்கொடுபோட, வெந்துவிழுந்துமுறிந்து நிணங்க, ளுருகியெலும்புகருகியடங்கி, யோர்பிடிநீறுமிலாதவுடம்பை,

நம்புமடியேனையினியாளுமே. (௫)

## பட்டணத்துப்பிள்ளையார்

## புலம்பல் முற்றிற்று.